# எம்மிடம் கிடைக்கும் மருத்துவ நூல்கள்

சித்த அனுபோக வைத்திய நவநீத திரட்டு
(11 பாகமும் அடங்கிய முழு நூல்)

சித்த மருத்துவம்
சித்த காரசார ரசாயன விஞ்ஞானம்
சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம்
சித்தர் கைகண்ட மருந்து
வைத்தியக் களஞ்சியம்
அனுபவ வைத்தியநூல்
வீட்டு வைத்தியம்
தமிழ் வைத்தியம்
குடும்ப மருந்துகள்
உங்கள் வீட்டில் சித்தர் மருந்து
நலம் கெடாமல் வாழ்வது எப்படி?
நோய்நாடி நோய் முதல் நாடி
அனுசரித்த 1949 இயற்கை
வைத்தியக் குறிப்புகள்
முறைகள்
நீடுழி வாழ வழி
மோட்சமும்
அமுதகலசம்
மூலிகைகள்

கானல் வெளியீடு



# சரீர தத்துவம் & சாகாக்கலை



வைத்தியரத்தினம்

**வி.பலராமய்யா**

கானல் வெளியீடு

விஜயா பதிப்பகம்
PH: 0422-2382614, 2385614

# சரீர தத்துவம் & சாகாக்கலை

வைத்தியரத்தினம்

வி. பலராமய்யா

காணல் வெளியீடு

First Edition : 2012
No.of pages : 96
Size of Book : 1/8 Demy
Paper used for text : 18.6 NS Maplitho
Printing Type : 11 Points
Published by : KANAL VELIYEDU
Chennai-600 004.
Printed at : Udhyam Offset
Price : Rs.60/-

# சரீர தத்துவம் & சாகாக்கலை

வைத்திய ரத்தினம் V. பலராமையா

பொருளடக்கம் **சரீரத் தத்துவம்**


| | |
|---|---|
| சரீரத் தத்துவம் | 5 |
| எலும்பு மண்டலம் | 7 |
| மாமிச மண்டலம் | 13 |
| இரத்த மண்டலம் | 14 |
| சுவாச மண்டலம் | 19 |
| ஜீர்ண மண்டலம் | 22 |
| மூத்திர மண்டலம் | 29 |
| உற்பத்தி மண்டலம் | 32 |
| நரம்பு மண்டலம் | 35 |
| மனோதத்துவம் | 39 |


பொருளடக்கம்: **சாகாக்கலை**


| | |
|---|---|
| செத்தபின் முக்தி எது? | 40 |
| மரணத்தைத் தவிர்க்கும் மருந்து | 52 |
| ரசவாதமென்பது உண்மை தானா? | 67 |
| அமுதம் | 71 |
| கற்பம் எதனால் செய்தது? | 77 |
| கற்பத்தால் சாகாநிலை | 78 |
| அவயோகம் | 90 |
| பிரம்மச்சரியம் | 94 |




# சரீர தத்துவம்

பொதுவான உலக சிருஷ்டி நியாயம் மனித பிறப்பிலும் காணலாம். சிலவிஷயங்களில் விசேஷமுண்டு, பருஷ சக்தியும் பிருக்ருதி கச்தியும் ஒன்றோடொன்று கலந்தே சிருஷ்டி, ஸ்திதி, லயத்தின் காரியங்கள் நடக்க வேண்டும். புருஷனின்றி ப்ரக்ருதியையும் புருஷனையும் பிரிக்கிறதற்கில்லை. பூமி, அப்பு, தேயு, வாயு ஆகாயமென்னும் பஞ்ச மகா பூதங்களும் ப்ராணம்,

அபானம், உதானம், சமானம், வியானம் என்னும் பஞ்ச வாயுக்களும், ரசம், ரத்தம், மாமிசம், எலும்பு, மஜ்ஜை, மேதஸ், சுக்லமென்னும் சப்ததாதுக்களும், இவைகளால் ஏற்பட்ட ஜீர்ணகோசம், ரத்தகோசம், சுவாஸகோசம், மூத்திர கோசம், ஜனனேந்திரியங்கள், மாமிசம், நரம்பு, எலும்பு மண்டலங்களும், தோலும், மனம், புத்தி அகங்காரம் சித்தமென்னும் அந்தகரணமுமாகிய பலவித தத்துவங்களை மானிட சரீரத்தில் பார்க்கலாம்..

வெளியேயுள்ள பஞ்ச மகா பூதங்களின் உதவியைப் பெற்றுக் கொண்டு ஓர் தேங்காய் அல்லது கோழிமுட்டையிலிருக்கும் புருஷனுக்கு சிருஷ்டியாக்கும் திறமையிருப்பதுபோல் மனிதனின் சுக்ல சோணித தாதுக்கள் ஒன்றோடொன்று கலந்து அதிலடங்கிய புருஷ சக்தி பரிபூரணமான சரீரத்தை வளர்த்துக் கொள்ளும் சக்தியுடையதாயிருக்கிறது, கர்ப்ப கோஷத்தில் சிசுவின் வளர்ச்சியின் விவரம் பிரசவவைத்தியத்தில் பார்க்கலாம்.

இவ்விடத்தில் வயது வந்த ஓர் யௌவனஸ்தனின் சரீர தத்துவத்தை விவரிப்போம், இந்த விவரத்தில் படிக்கிறவர்கள், நின்று கொண்டிருக்கும் சரீரத்தை விவரிப்பதாக பாவிக்க வேண்டும். வலது, இடது என்று சொல்லுங்கால் அந்த சரீரத்தின் இடது பாகமே யொழிய விவரிக்கிறவர்கள் இடது வலது பாகமல்ல.

மேற்புறமென்றால் பாதங்களினின்றும் மேற்பாகம். கீழ்புறம் சிரசினின்று கீழ்பாகம், வெளிப்புறமென்றால், மூக்குநுனியிலிருந்து

தொப்புள் வரையில் நேராக போகும் கோடுக்கு வெளிப்புறம் அல்லது அந்தந்த கோஷத்தின் வெளிப்பாகம்.

உட்புறமென்றால் இந்த கோடுக்கு அடுத்ததென்றும் அந்தந்த கோஷங்களின் உட்புறமென்றும் எண்ணவேண்டும். விவரிக்கப்படும் சரீரம் ஓர் புருஷன் சரீரமென்று கவனிக்க வேண்டும்.

## பொது விவரம்

பல தேசங்களிலும் பல காலங்களிலும் பிறந்து வளர்ந்து வந்த சரீரங்கள் உயரத்திலும் கனத்திலும் உருவத்திலும் நிறத்திலும் வித்தியாசப்படுகின்றன.

சர்வ சாதாரணமாக சரீரம் சுமார் ஐந்தரை அடி உயரமும் மார்பின் சுற்றளவு சுமார் மூன்று அடியாகவுமிருக்கும். இதற்கு விபரீதமாக சரீரம் உயரமாகவது குட்டையாகவாவது, ஸ்தூலமாகவாவது மெலிந்துமாவது இருப்பது சரீரத்தின் விப்ரீத நிலைமையாகையால் இது இயற்கைக் கொத்த சரீரமன்று.

தலை, முகம், கழுத்து, முண்டம், இரு கைகள், இருகால்கள், இவைகள் சரியாக அமைந்திருக்கவேண்டும். அதிக குளிர் தேசத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் சிவந்த வெண்மை அல்லது வெண்மை நிறமுடையவராயும் அதித உஷ்ண தேசத்தில் கருப்பு நிறமுடையவராயும் சமசீதோஷ்ண பாகத்தில் இந்த இரண்டும் கலந்த நிறமுடையவராயிருக்கிறார்கள். ரோமமும் கண்ணின் நிறமும் அந்தந்த சரீரத்திற் கொத்தவாரிருக்கும்.

சரீர முழுவதிலும் மயிர் நன்றாய் வளர்ந்திருக்க வேண்டும். தலையின் மயிர் நெருங்கியும், நீண்டுமிருக்க வேண்டும். இதன் குறைவு நோயின் குறியாகும். சுமார் ஆறுமாதத்திய ஓர் ஆரோக்கியமுள்ள சிசுவின் சரீரத்தைப் போன்ற சரீரமிருக்கவேண்டும். முகத்திலும் சரீர முழுவதிலும் ஒருவித தேஜஸ்ஸும் ஆனந்தத்தைக் காட்டும் புன்சிரிப்பும் இருக்கவேண்டும். தோலின்மேல் மேடு பள்ளங்கள் காணக்கூடாது. மிதமான கொழுப்போடு நிறைந்திருக்க வேண்டும். எந்த விகாரங்களுமிருக்கக் கூடாது.

எலும்பு, மாமிசம், நார், தோல் இவைகளால் இச் சரீரம் கட்டப்பட்டிருக்கிறது. மூளையும், அதற்கு சம்பந்தப்பட்ட



நரம்புகளும், ரத்த கோஷமும், அதற்கு சம்பந்தப்பட்ட நாடிகளும், ஈரல்களும், மற்ற கருவிகளும் தங்கத் தனியே ஸ்தானங்களுண்டு. அவைகள் தமது தொழிலைச் செவ்வனே செய்வதற்காக பத்திரமாக அந்தந்த அரைகளில் அமைக்கப்பட்டுள்ளன.

# எலும்பு மண்டலம்

சரீரத்திலுள்ள சப்த தாதுக்களில் எலும்பு கட்டியாயும் பலமாகவும் உள்ளது. இதுவே சரீரத்திற்கு அஸ்திவாரம். அந்தந்த பாகத்தை அனுசரித்து எலும்பு வேறுபடும். நீண்டும் குறுகியும் தட்டையாயும், வளைந்ததாகவுமிருக்கும். மாமிசங்களும் நார்களும் இவைகளை மூடியிருக்கும். இவைகளின் சகாயத்தினால் எலும்புகள் ஒன்றோடொன்று சேர்க்கப்பட்டு சரீரத்தின் உருவத்திற்கு ஏதுவாகிறது.

## தலையும் முகமும்

8 தலையெலும்புகளும் 14 முக எலும்புகளுமாக 22 எலும்புகளால் தலையும் முகமும் நிர்மாணிக்கபட்டுள்ளது. இந்த எலும்புகள் கட்டியாயும், தட்டையாயும், வளைந்துமிருக்கும். கீழ்தவடை எலும்பைவிட்டு மற்ற 21 எலும்புகளும் மாமிசம் அல்லது நாரின் சகாயமின்றி ஒன்றோடொன்று சேர்க்கப்பட்டுள்ளன. உள்ளிருக்கும் மூளை, நரம்புகள், தோல்கள், ரத்தநாடிகள், இவைகள் சுகமாக தங்கி தமது தொழிலை சரியாக செய்வதின் நிமித்தமாகவே அந்தந்த ஸ்தானங்களில் அந்தந்த அவயங்களின் உருவத்திற்கு தகுந்தவாறு வளைக்கப்பட்டுள்ளன.

தலைக்குள்ளே சுத்த ரத்த நாடிகள் பிரவேசிக்கவும், தலையிலிருந்து அசுத்த ரத்த நாடிகளும் நரம்புகளும் வெளியே வரவும் எலும்புக்குள் துவாரங்களுண்டு. முன்புறத்தில் இருகண்களும் இரு பக்கங்களில் காதுகளும் தங்கும்படி எலும்புகள் வளைந்துள்ளன. மூக்கும் வாயிக்கும் தகுந்தவாறு மூக்கு எலும்புகளும் தவடை எலும்புகளும் அமைந்துள்ளன. இரண்டு மேல் தவடை எலும்புகள் மத்தியில் ஒன்றாக சேர்கின்றன. கீழ்த் தவடை எலும்பு ஒன்றே. அது மேல் தவடையோடு சேர்ந்து அசையும், வாய் திறக்கும் பொழுதும்

மூடும் பொழுதும் மேல் தவடை அசையாது. கீழ்த் தவடை அசையும்.

பின்புறத்தில் தலை முள்ளந்தண்டின் மேற்புறத்தில் நிற்கிறது. இந்த எலும்பின் சகாயத்தினாலும், மார்பு, கழுத்து, முதுகு இந்த ஸ்தானங்களிலிருந்து தலைக்கு ஒட்டியிருக்கும் மாமிச கண்டங்களின் சகாயத்தினாலும் தலை முன்னும், பின்னும் பக்கங்களிலும் அசையும்.

## பற்கள்

மேல் தவடை எலும்புகள் கீழ் ஓரத்திலும் கீழ் தவடையின் மேலோரத்திலும் பற்கள் தங்க குழிகளுண்டு. பற்கள் இரண்டு வகைப்படும். பிறந்த சுமார் ஆறு மாதங்களில் முளைக்கும் பால் பற்கள் 16 அல்லது 20. இவைகள் விழுந்த பிறகு முளைக்கும் பற்கள் மற்றொரு வகை. ஒவ்வொரு தவடையின் ஒவ்வொரு பக்கத்தில் எட்டு பற்கள் முளைக்கும். கடைசி தவடைப்பல் 14–18 வயதில் பிறக்கும்.

## கழுத்து

தலையின் பின்புறத்தில் கீழ்புறத்திலும் முள்ளந்தண்டின் மேற்புறத்திலும் மோதிரங்கள் போன்ற 8 எலும்புகள் ஒன்றின் மேலொன்றாக வரிசையாக நிற்கும். இவைகள் தசைகளினாலும் நார்களினாலும் ஒன்றுக்கொன்று கட்டப்பட்டிருக்கின்றன. இதன் மேற்புறத்தில் தலை எலும்பின் கீழ்பாகமும் கீழ்ப்புறத்தில் மார்பு முள்ளந்தண்டின் மேற்பாகமும் இருக்கும்.

தலையினின்று புறப்படும் மூளையின் தொடர்பாகமான சஷும்னா என்னும் நரம்புக் கொடி இந்த எலும்புகளின் மத்தியில் பாய்ந்து இதன் கீழ்ப்புறத்திலிருக்கும் மார்பு முள்ளந்தண்டினுள் பிரவேசிக்கிறது. இந்த நரம்புக் கொடியின் கிளைகள் வெளியே போகவும் வெளிப்புறத்திலிருந்து ரத்த நாடிகள் உள்ளே பிரவேசிக்கவும் இந்த எலும்புகளில் இடமுண்டு. கழுத்தின் மேற்புறத்தில் இந்த முள்ளந்தண்டுக்கு முன்புறத்தில் ஓர் வளைந்த எலும்பு உண்டு. மாம்சகண்டங்களாலும் தோல்களாலும் நார்களாலும் இது தன்னைச் சுற்றியிருக்கும் சுரேந்திரியம் நாக்கு தொண்டை முதலியவைகளுக்கு சம்பந்தப்பட்டுள்ளது.



## முண்டம்

கழுத்துக்கு கீழ்புறமுள்ளதும் இருகை கால்களும் இல்லாததும் முண்டமாகும். இதை மார்பு கூண்டாகவும் வயிற்றுக் கூண்டாகவும் பிரிக்கலாம். பின் புறத்தில் முண்டத்திற்கு முள்ளந்தண்டு ஆதரவாயிருக்கிறது.

## மார்பு

முதுகின் நடுவில் கழுத்தின் முள்ளந்தண்டுக்கு கீழ் புறமாக மார்புக்குச் சம்பந்தப்பட்ட 12 பெருத்த என்புகளும் அதற்கு கீழே வயிற்றுக்கு சம்பந்தப்பட்ட 14 என்புகளும் முண்டத்தின் முள்ளந்தண்டெலும்புகளாகும். இவைகளின் மூலமாக தலையினின்று கழுத்து முள்ளந்தண்டிற்கு வந்த பெருத்த நரம்புக்கொடி போக இடமுண்டு. நரம்பு கிளைகளும் ரத்தநாடிகளும் போகவர இந்த எலும்புகளில் துவாரங்களுண்டு. பலமான நார், தசை, தோல்களால் கீழ்புறம் இரு துடைகளுக்கும் மேல்புறம் கழுத்து, தலை, புஜங்களுக்கும் முன்புறத்தில் முண்டத்தின் தசைகளோடும் இவைகள் கட்டப்பட்டுள்ளன. கீழ்புறத்திலுள்ள 5 என்புகளைவிட்டு மற்ற என்புகள் அசையும், இதனாலேயே முள்ளந்தண்டை முன்னும் பின்னும் இரு பக்கங்களிலும் வளைக்கக்கூடும்.

மார்பின் முன்பாகத்தில் ஓர் தட்டையான என்பிருக்கிறது. 12 விலாவென்புகள் மார்பின் முள்ளந்தண்டிலிருந்து மார்பின் முன் எலும்பிற்கு ஜோடிக்கப்பட்டுள்ளன. இதில் ஏழுமே எலும்புகள் முன் எலும்போடு நேராகவே சேர்கின்றன. இவைகளுக்கு கீழ்புறமுள்ள 3 எலும்புகள் இப்படி நேராக சேராமல் மேலெலும்போடு கீழ் எலும்பு சேர்க்கப் பட்டிருக்கிறது. கடைசி இரண்டெலும்புகள் முன்புறம் இப்படியும் சேராமலிருக்கின்றன. மார்பு கூண்டிலுள்ள இரு நுரையீரல்களும் இருதயமும் இதில் தங்கி தமது தொழில்களை தடையின்றி செய்வதற்காக இந்த எலும்புகள் வளைந்துள்ளன. கீழ் எலும்பு = மேல் எலும்போடு மாமசக்கண்டங்களால் சேர்க்கப்பட்டுள்ளன. இவைகளின் உட்புறம் மெல்லிய தோலால் மூடப்பட்டு, இந்த தோலே நுரையீரல் முதலியனவைகளுக்கு கவசமாகிறது. மார்பின் கீழ்புறத்தில் விதானம் யென்னும் ஓர் கனமான தோல்

கடைசி விலாயெலும்புக்கு சேர்க்கபட்டு இந்த விதானம் முண்டத்தை மார்பு கூண்டென்று வயிற்றுக் கூண்டென்றும் பிரிக்கிறது. வெளிப்புறம் மார்பின் முன் பக்கத்திலும் பின் பக்கத்திலும் பக்கங்களிலும் வயிற்றுக்கூண்டின் சதைகளும் மார்பின் முன்பக்கத் சதைகளும் தலை கழுத்து சதைகளும் ஒட்டியிருக்கின்றன.

மார்பின் மேற்புறத்திலும் கழுத்தின் இருபக்கங்களிலும் இரண்டு புஜ எலும்புகள் இருக்கின்றன. தசைகளாலும் நார்களாலும் இந்த எலும்புகள் மார்பு தண்டுக்கும் தலைக்கும் கழுத்துக்கும் சேர்க்கப்பட்டுள்ளன.

## வயிற்றுக் கூண்டு

மார்பின் முள்ளந்தண்டின் கிழ்புறமுள்ள 14 எலும்புகளும் புட்ட எலும்புகளும் இதற்கு முக்கிய ஆதரவு. மேற்புறத்திலுள்ள மார்பின் விலாவெலும்புகளும் அதற்கு சேர்ந்த தசைகளும் இந்த கூண்டுக்கு மேற்கவசமாக இருக்கின்றன. அடிவயிற்றின் முள்ளந்தண்டின் இருபக்கங்களிலும் இருக்கும் தட்டையெலும்புகள் முன்புறத்தில் வந்து சேர்கின்றன. அடி வயிற்றின் அவயவங்கள் தங்கும்படி இந்த இரண்டு புட்ட வெலும்புகள் வளைந்துள்ளன. இந்த எலும்பின் வெளிப் புறத்தில் வட்டாகாரமான ஓர் குழியிருக்கிறது. இதில் துடை யெலும்பு, சேர்ந்து கீலாய் இதனாலேயே துடையை மடக்கவும் நீட்டவும் திருப்பவும் முடியும். இந்த புட்டவெலும்புகள் கீழ்புறத்தில் துடைகளோடும், பின்புறத்திலும் மார்புக் கூண்டோடும் தசைகளாலும் நார்களாலும் கட்டப் படுகின்றன.

வயிற்றுக் கூண்டின் மேற்புறத்தில் வலது பக்கத்தில் கல்லீரலும், இடது பக்கத்தில் மண்ணீரலும் இவைகளுக்கு மத்தியில் இரைப்பையும் இவைகளுக்கு பின்புறத்தில் இடுப்புக்கு நேராக இரு மாங்காய்களும் கீழ்புறம் தனையமும் இருக்கின்றன. இவைகளுக்கு கீழ்புறம் சுற்றியும் சிறு குடலும் பெருகுடலும் இருக்கின்றன. அடிவயிற்றின் முன்புறத்தில் மூத்திரகோஷமுண்டு. பின் புறத்தில் மல கோஷமிருக்கிறது. ஸ்திரீகளின் அடிவயிற்றில் மூத்திரகோஷத்திற்கும் மல கோஷத்திற்கும் நடுவில் கர்ப்ப கோஷமுண்டு. மார்புக் கூண்டிலிருந்து சுத்த ரத்த நாடிகள் வந்து



துடைகளுக்கு போகவும் அவ்விடங்களிலிருந்து அசுத்த ரத்த நாடிகள் வரவும் முள்ளந்தண்டிலிருந்து வரும் நரம்புகள் போகவும் வயிற்றுக் கூண்டில் வேண்டிய துவாரங்களுண்டு. இந்த கூண்டின் மேற்புறம் விதானத்தினால் மூடியுள்ளது. கீழ்புறம் எலும்புகளாலும், மூடப்படாமல் தசைகளாலும், நார்களாலும் மூடப்பட்டு, இதில் மல மூத்திர துவாரங்கள் ஏற்பட்டுள்ளன. ஸ்திரீகளின் கர்ப துவாரத்தின் முகம் இவைகளுக்கு இடையே இருக்கிறது. இந்த தோலே வயிற்றுக்கும் அதன் அவயவங்களுக்கும் கவசமாக இருக்கிறது.

## கைகள்

கழுத்தின் இரு பக்கங்களில் மார்பு கூண்டின் மேற்புறத்தில் இரண்டு புஜ எலும்புகளுண்டு. இதில் முன்னென்பு கொஞ்சம் வளைந்துள்ள நீட்டென்பு. இது உட்புறத்தில் மார்பின் முன்னென்பின் மேல் மூளையோடும் வெளிபுறத்தில் புஜத்தின் பின்னென் போடும் மேற்கையின் என்போடும் தசைகளோடும் நார்களால் சேர்க்கப்பட்டுள்ளது. புஷத்தின் பின்னென்பு தட்டையாய் தசைகளால் மேற்புறம் கழுத்து தலையோடும், கீழ்புறம் முதுகோடும், மேற்கையோடும் முன்புறம் மார்போடும் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் மேல் வெளிமூலையிலும் ஓர் குழியுண்டு. இதில் மேற்கை என்பின் தலை. ஜோடிக்கப்பட்டு ஓர் சந்தாகிறது. இந்த கீலின் சகாயத்தினால் கையைப் பல திசைகளில் அசைக்கக்கூடும்.

## மேற்கை

மேற்கை என்பு ஏறக்குறைய உருண்டையான நீட்டென்பு. இதின் தலை அல்லது மேற்பாகம் பின் புஜவெலும்பின் குழியோடு சேர்ந்து ஓர் கீலாகிறது. கீழ்புறத்தில் இந்த என்பு கீழ்கையின் இரண்டு என்புகளோடு ஓர் கீலாக சேர்கிறது. இதனாலேயே கீழ்கையை மேற்கையோடு முன்னும் பின்னும் கொஞ்சம் பக்கமாகவும் அசைக்கக்கூடும். பலமான மாமிச கண்டங்கள் இதில் ஒட்டிக்கொண்டு இதை மேற்புறத்தில் கழுத்து மார்போடும் கீழ்புறத்தில் கீழ்க்கையோடும் சேர்கின்றன. இந்த மாமிசங்களின் சகாயத்தினால் கீல்களின் சகாயத்தினாலும் கைகளை பல கார்யங்களுக்கு உபயோகிக்கக்கூடும்.

## கீழ்கை

சுமார் உருண்டையான இரண்டு நீட்டெலும்புகள் கீழ்கைக்கு ஆதரவு. இவைகள் மேற்புறத்தில் மேற்கையின் கீழ்பாகத்தில் ஓர் சந்தாக சேர்க்கப்பட்டு கையை மடக்கவும் நீட்டவும் உதவுகிறது. கீழ்புறத்தில் இந்த இரண்டு எலும்புகளும் கையின் எலும்புகளோடு சேர்ந்து கீழ்கையோடு கையை மடக்கவும் நீட்டவும் முடியும். மாமிச கண்டங்கள் இவைகளில் ஒட்டப்பட்டு மேற்புறத்தில் மேற்கையோடும் கீழ்புறத்தில் கை, கைவிரல்களோடும் சேர்க்கப்பட்டு கையை பல கார்யங்களுக்கு உதவும்படி செய்கின்றன.

## கை

கீழ்கையின் கீழ்புறத்தின் எட்டு சிறு எலும்புகள் இருவரிசைகளாக அணிக்கப்படுகின்றன. மேற்புறத்தில் கீழ்கையோடு சந்தாக ஏற்பட்டு கையை மடக்கவும் நீட்டவும் சகாயமாகிறது. கீழ்ப்புறத்தில் கையின் ஐந்து எலும்புகளோடு சேர்கின்றன. கையின் ஐந்து எலும்புகள் கைவிரல்களின் முதல் எலும்போடு சேர்ந்து கைவிரல்களை மடக்கவும் நீட்டவும் சந்துகளாகின்றன. பெரியவிரலை விட்டு மற்ற ஒவ்வொரு விரலுக்கும் மும்மூன்று எலும்புகளுண்டு. பெரிய விரலுக்கு எலும்பு இரண்டு மாத்திரம். தசைகளாலும் நார்களாலும் சந்து ஏற்பட்டு விரல்களை நீட்டவும் மடக்கவும் கூடும். மேற்கைக்கு கீழ்கைக்கும் ஒட்டியுள்ள மாமிச கண்டங்கள் கையெலும்புகளுக்கு சேர்க்கப்பட்டு கைகளை நீட்டவும் மடக்கவும் பல வேலை செய்யவும் சகாயமாகின்றன.

## துடை

பலமாயும் உருண்டையாயுமுள்ள ஓர் நீட்டெலும்பு துடைக்கு ஆதரவு. இதன் மேற்பாகம் அல்லது தலைபுட்டவெலும்பிலுள்ள வட்டமான குழியில் சேர்கிறது. இந்த கீலின் சகாயத்தினால் துடையை பல திசைகளில் அசைக்கக்கூடும். இதன் கீழ்புறம் காலெலும்போடு சேர்ந்து ஓர் சந்தாகிறது. இதனால் காலை துடையோடு மடக்கவும் நீட்டவும் கூடும். இந்த துடையெலும்பு பலமான மாமிச கண்டங்களால் கட்டப்பட்டிருக்கிறது.



மேற்புறத்தல் வயிற்றுக் கூண்டோடும் கீழ்புறம் காலோடும் சேர்கின்றன. இந்த மாமிசங்களின் சகாயத்தினால் துடையையும் காலையும் மடக்கவும், நீட்டவும், உட்காரவும் பல காரியங்களை செய்யவும் கூடும்.

## கால்

காலுக்கு சம்பந்தப்பட்ட எலும்புகள் இரண்டு. இவைகளில் உட்புறமிருப்பது கனமாயும் பலமாகவும் இருக்கிறது. இது துடையெலும்போடு சேர்ந்து ஓர் கீலாகிறது. இதனால் காலை மடக்கவும் நீட்டவும் கூடும். இந்த எலும்பின் கீழ்புறம் பாதவெலும்போடும் சேர்ந்து ஓர் கீலாகிறது. இதனால் பாதத்தை மடக்கவும் நீட்டவும் கூடும். இது காலின் முக்கியமான எலும்பு. இரண்டாவது எலும்பு மெல்லியதாயும் நீண்டும் இருக்கும். இது அநேகமாக உள்ளெலும்போடு சேர்ந்திருக்கிறது. இது கீழ் சந்துக்கு சேர்ந்திருக்கிற தொழிய மேற்புறம் துடையெலும்புக்கும் கீழ்புறத்தில் பாத எலும்புக்கும் ஒட்டியுள்ள மாமிசங்கள் காலெலும்புகளோடு சேர்ந்து காலும், பாதமும், துடையும் செய்யவேண்டிய கார்யங்களுக்கு சகாயமாகின்றன. காலெலும்புகளுக்கும் துடை எலும்புக்கும் மத்தியில் முன்புறத்தில் ஓர் தட்டையான எலும்புண்டு.

## பாதம்

பாத எலும்புகள் ஏறக்குறைய கை எலும்புகளை யொத்திருக்கின்றன. கையெலும்பை விட கனமாய் இருக்கும். எட்டு எலும்புகளுக்கு ஏழு எலும்புகள் மாத்திரமுண்டு.

# மாமிச மண்டலம்

சரீரம் கட்டுவதிலும், அதற்கு ஓர் உருவம் கொடுப்பதிலும், அதன் பல காரியங்களையும் செய்வதிலும் சகாயமாக நிற்பது மாமிசம். சரீரத்தின் எல்லா பாகத்திலும் மாமிசத்தைப் பார்க்கலாம். சுருங்குதல் விரிதலென்னும் இரண்டு குணங்கள் மாமிசத்தின் இயற்கை குணங்கள். இதில் சிலது நமது

## கீழ்கை

சுமார் உருண்டையான இரண்டு நீட்டெலும்புகள் கீழ்கைக்கு ஆதரவு. இவைகள் மேற்புறத்தில் மேற்கையின் கீழ்பாகத்தில் ஓர் சந்தாக சேர்க்கப்பட்டு கையை மடக்கவும் நீட்டவும் உதவுகிறது. கீழ்புறத்தில் இந்த இரண்டு எலும்புகளும் கையின் எலும்புகளோடு சேர்ந்து கீழ்கையோடு கையை மடக்கவும் நீட்டவும் முடியும். மாமிச கண்டங்கள் இவைகளில் ஒட்டப்பட்டு மேற்புறத்தில் மேற்கையோடும் கீழ்புறத்தில் கை, கைவிரல்களோடும் சேர்க்கப்பட்டு கையை பல கார்யங்களுக்கு உதவும்படி செய்கின்றன.

## கை

கீழ்கையின் கீழ்புறத்தின் எட்டு சிறு எலும்புகள் இருவரிசைகளாக அணிக்கப்படுகின்றன. மேற்புறத்தில் கீழ்கையோடு சந்தாக ஏற்பட்டு கையை மடக்கவும் நீட்டவும் சகாயமாகிறது. கீழ்ப்புறத்தில் கையின் ஐந்து எலும்புகளோடு சேர்கின்றன. கையின் ஐந்து எலும்புகள் கைவிரல்களின் முதல் எலும்போடு சேர்ந்து கைவிரல்களை மடக்கவும் நீட்டவும் சந்துகளாகின்றன. பெரியவிரலை விட்டு மற்ற ஒவ்வொரு விரலுக்கும் மும்மூன்று எலும்புகளுண்டு. பெரிய விரலுக்கு எலும்பு இரண்டு மாத்திரம். தசைகளாலும் நார்களாலும் சந்து ஏற்பட்டு விரல்களை நீட்டவும் மடக்கவும் கூடும். மேற்கைக்கு கீழ்கைக்கும் ஒட்டியுள்ள மாமிச கண்டங்கள் கையெலும்புகளுக்கு சேர்க்கப்பட்டு கைகளை நீட்டவும் மடக்கவும் பல வேலை செய்யவும் சகாயமாகின்றன.

## துடை

பலமாயும் உருண்டையாயுமுள்ள ஓர் நீட்டெலும்பு துடைக்கு ஆதரவு. இதன் மேற்பாகம் அல்லது தலைபுட்டவெலும்பிலுள்ள வட்டமான குழியில் சேர்கிறது. இந்த கீலின் சகாயத்தினால் துடையை பல திசைகளில் அசைக்கக்கூடும். இதன் கீழ்புறம் காலெலும்போடு சேர்ந்து ஓர் சந்தாகிறது. இதனால் காலை துடையோடு மடக்கவும் நீட்டவும் கூடும். இந்த துடையெலும்பு பலமான மாமிச கண்டங்களால் கட்டப்பட்டிருக்கிறது.



மேற்புறத்தல் வயிற்றுக் கூண்டோடும் கீழ்புறம் காலோடும் சேர்கின்றன. இந்த மாமிசங்களின் சகாயத்தினால் துடையையும் காலையும் மடக்கவும், நீட்டவும், உட்காரவும் பல காரியங்களை செய்யவும் கூடும்.

## கால்

காலுக்கு சம்பந்தப்பட்ட எலும்புகள் இரண்டு. இவைகளில் உட்புறமிருப்பது கனமாயும் பலமாகவும் இருக்கிறது. இது துடையெலும்போடு சேர்ந்து ஓர் கீலாகிறது. இதனால் காலை மடக்கவும் நீட்டவும் கூடும். இந்த எலும்பின் கீழ்புறம் பாதவெலும்போடும் சேர்ந்து ஓர் கீலாகிறது. இதனால் பாதத்தை மடக்கவும் நீட்டவும் கூடும். இது காலின் முக்கியமான எலும்பு. இரண்டாவது எலும்பு மெல்லியதாயும் நீண்டும் இருக்கும். இது அநேகமாக உள்ளெலும்போடு சேர்ந்திருக்கிறது. இது கீழ் சந்துக்கு சேர்ந்திருக்கிற தொழிய மேற்புறம் துடையெலும்புக்கும் கீழ்புறத்தில் பாத எலும்புக்கும் ஒட்டியுள்ள மாமிசங்கள் காலெலும்புகளோடு சேர்ந்து காலும், பாதமும், துடையும் செய்யவேண்டிய கார்யங்களுக்கு சகாயமாகின்றன. காலெலும்புகளுக்கும் துடை எலும்புக்கும் மத்தியில் முன்புறத்தில் ஓர் தட்டையான எலும்புண்டு.

## பாதம்

பாத எலும்புகள் ஏறக்குறைய கை எலும்புகளை யொத்திருக்கின்றன. கையெலும்பை விட கனமாய் இருக்கும். எட்டு எலும்புகளுக்கு ஏழு எலும்புகள் மாத்திரமுண்டு.

# மாமிச மண்டலம்

சரீரம் கட்டுவதிலும், அதற்கு ஓர் உருவம் கொடுப்பதிலும், அதன் பல காரியங்களையும் செய்வதிலும் சகாயமாக நிற்பது மாமிசம். சரீரத்தின் எல்லா பாகத்திலும் மாமிசத்தைப் பார்க்கலாம். சுருங்குதல் விரிதலென்னும் இரண்டு குணங்கள் மாமிசத்தின் இயற்கை குணங்கள். இதில் சிலது நமது

இச்சைக்குட்பட்டவை. மற்றவை உட்படாதவை. இதை யனுசரித்து மாமிசம் இரண்டு வகைப்படும்.

கை, கால், முண்டம், தலை, கழுத்து, எலும்புகளுக்கு ஒட்டியுள்ள மாமிசங்களும் தொண்டை, வாய், உதடு, கண், ஆசன துவாரம், மூத்திர துவாரம், இவைகளுக்கு சம்பந்தப்பட்ட மாமிசங்களும் நமது இச்சைக்குட்பட்டவை. மார்பு கூண்டிலுள்ள ரத்த கோஷமும் ரத்த நாடிகளும், சுவாச கோஷம், ஜீர்ணகோஷம், மூத்திர கோஷம், முதலியவைகளிலிருக்கும் மாமிசங்கள் நமது இச்சைக்கு வசமாகாதவை. ஆனால் பல பழக்கத்தினால் இதையும் நமது இச்சைக்கு வசமாக்கக்கூடும்.

இச்சித்தோ இச்சிக்காமலோ நாம் செய்ய வேண்டிய காரியங்களெல்லாம் இந்த மாமிசங்களின் உதவியினால் செய்யவேண்டும். பேசுவதும், பார்ப்பதும், ரத்த ஓட்டம், விழுங்குவதும், ஆகரசலனையும், மல மூத்திர விசர்ஜனையும், உட்காருவதும், நடப்பதும், ஓடுவதும் பிடிப்பதும், சுருக்கமாகச் சொல்லின், சர்வ கார்யமும் மாமிசம் செய்ய வேண்டும். இது ஓர் முக்கிய கருவியாயினும் இதற்கு மனமும் வாயும், நரம்பும் சகாயமாக இருத்தல் வேண்டும். இவைகளின் சகாயமின்றி மாமிசம் கேவலம் ஜடம்.

# இரத்த மண்டலம்

இரத்தமும் அது தங்குமிடமாகிய இருதயமும் அது ஓடும் குழாய்களாகிய சுத்த அசுத்த ரத்தநாடிகளும் இந்த மண்டலத்திற்கு சேர்ந்தவை. நாம் தின்னும் ஆகாரம் இரசமாய், ரத்தமாய், சரீரத்திலுள்ள எல்லா பாகத்திற்கும் பரவி தேகத்திற்குபுசிப்புக் கொடுக்கிறது. ஓர் பாகத்திற்கு ரத்தம் ஓடாமலிருந்தால் அந்த பாகம் வளராமல் சாகும். எந்த காரணத்திலாவது இரசம் ரத்தமாக மாறாமலிருக்குங்கால் தாதுக்களுக்கு போஷனைக் குறைந்த சரீரம் நசிக்கும்.

## இரத்தம்

இரத்தம் சிவப்பாயும் ஏறக்குறைய பால்போல் மந்தமாயிருக்கும்.



இதில் கோழி முட்டை வெள்ளை போன்ற ஓர் விதமான ஜலபாகமும் ரத்த குறு கடன்களும் ஓர் விதமான நாரும் கலந்திருக்கும். வாயு முதலிய வஸ்துக்களோடு கலந்தால் ரத்தம் கட்டும். இது ரத்தத்தின் இயற்கையான குணமாய் இருக்கிறது. காயம் பட்டு இரத்த நாடி உடைந்து ரத்தம் சுரக்கும்பொழுது ரத்தத்தின் நிறமாவது மந்தமாவது குறைந்தால் இது ரத்தத்தின் வியாதியென்று சொல்லவேண்டும். ரத்தத்தின் குணங்கள் தின்ற ஆகாரங்களை ஒத்திருக்கும். ஜீர்ண கோஷத்தினால் மற்ற வியாதி தோஷத்தினாலும் இரத்தத்தின் இயற்கைக் கெடும்.

## இருதயமும் இரத்த நாடிகளும்

மார்பு கூண்டுக்குள் இரு நுரையீரல் மத்தியில் இருதயம் இருக்கிறது. இது மாமிசத்தினால் செய்துள்ள ஓர் கனமாக பை ஓர் தாமரை மொக்கை ஒத்திருக்கும். ஓர் கனமான தோல் பைக்குள் இது அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த பையிலமைக்கப்பட்ட இருதயம் இரு நுரையீரல்களின் மத்தியில் மார்பின் முள்ளந்தண்டிற்கு நாரினால் கட்டப்பட்டிருக்கிறது. இது இருதயத்தின் அகன்ற மேல் பாகம். இவ்விடத்தில்தான் ரத்த நாடிகள் இருதயத்திலிருந்து போக வர இருக்கின்றன. இதன் கீழ்ப்புறம் இடது திசையும் கீழ் திசையும் நோக்கி நிற்கிறது. மார்பு கூண்டின் மத்தியில் சரியாக இராமல் இடது பக்கத்தில் சாய்ந்திருக்கிறது. இதன் கால் பாகம் வலது பக்கத்திலும், முக்கால் பாகம் இடது பக்கமாகவும் சாய்ந்திருக்கிறது. ஓர் மாமிச கண்டம் இருதயத்தை இடது பாகமாகவும் வலது பாகமாகவும் பிரிக்கிறது. பிரிந்த ஒவ்வொரு பாகமும் இரண்டு அறைகளாக பிரிக்கபடுகின்றது. மேலறைக்கு ஆதனம் என்றும் கீழறைக்கு விஸர்க்கம் என்றும் பெயர். ஆசனத்திலிருந்து விஸர்க்கத்திற்கு ரத்தம் ஓடுவதற்காக ஓர் துவாரமுண்டு. விஸர்கத்தினின்று ஆதானத்திற்கு ரத்தம் திரும்பாதபடி இந்தத் துவாரங்களில் கவாடங்களுண்டு. இடது துவாரத்தில் இரண்டு கவாடங்களும் வலது துவாரத்தில் மூன்று கவாடங்களுமுண்டு. வலது பக்கத்தில் அசுத்த ரத்தமும் இடது பக்கத்தில் சுத்த ரத்தமுமுண்டு. இடதறையினின்று வலது அறைக்கும் ரத்தம் போவதில்லை.

## சுத்த ரத்த நாடிகள் அல்லது தமனிகள்

இடது விஸர்கத்திலிருந்து ஓர் பெரிய குழாய் புறப்படுகிறது. இது மஹாதமனி எனப்படும். இது மேற்புறமும் பின்புறமுமாகப் போய் வளைந்து பிறகு இருதயத்தின் பின் புறத்தில் முள்ளந்தண்டின் எதிரில் கீழ்முகமாகப் பாய்ந்து விதானத்தின் துவாரம் செய்து கொண்டு ஏறக்குறைய தொப்புளின் எதிரில் இரண்டாகப் பிரிகிறது. இதன் ஆரம்பத்தில் இருதயத்திற்கு இரண்டொரு சிறு நாடிகள் புறப்படுகின்றன. இவைகளின் மேற்புறத்தில் மூன்று அல்லது நான்கு தமனிகள் புறப்பட்டு இடது இரண்டு, இடது கைக்கும் இடது கழுத்து தலைக்கும், வலது இரண்டு, வலது கைக்கும், வலது கழுத்து, தலைக்கும் போகின்றன. இந்த மஹாதமனி போகும் வழியில் மார்புக் கூண்டில் அதற்குள்ளிருக்கும் அவயவங்களுக்கும் வயிற்றுக் கூண்டில் அதிலிருக்கும் அவயவங்களுக்கும் கிளை கொடுத்துக் கொண்டு போகும்.

இரண்டாகப் பிரிந்த மஹாதமனி மறுபடியும் இரண்டாகப் பிரிந்து ஒன்று அடிவயிற்றுக்கும் மற்றொன்று துடைக்கும் போகின்றன. துடை நாடி வயிற்றின் வெளியே வந்து துடையின் முன்பாகத்தில் ஓடி, பிறகு உட்புறமாகச் சாய்ந்து முழங்காலின் பின்புறத்திற்குப் போய் அவ்விடம் இரண்டாகப் பிரிந்து ஒன்று காலின் முன்புறத்திற்கும் மற்றொன்று பின்புறத்திற்கும் போகின்றன. பின் புறத்தின் நாடி நேர் கீழ்முகமாய்ப் போய் பாதத்திற்கு வேண்டிய சிறு நாடிகளாக முடிகின்றது. இந்த நாடிகள் போகும் வழியில் எலும்பு, மாமிசம் தோல் முதலியவைகளுக்கு கிளை கொடுக்கும்.

மஹாதமனியினின்று பிறந்து தலைக்கும் கழுத்துக்கும் போகும் நாடி, மார்புக் கூண்டிலிருந்து மேற்புறமாகப் போய் காதுக்குப் பக்கத்தில் இரண்டாகப் பிரிந்து ஒன்று தலையின் வெளிப்பாகத்திற்கும், மற்றொன்று தலையின் உட்புறத்திற்கும் போகின்றன. இது போகும் வழியில் கழுத்துக்கும், தலைக்கும் மூளைக்கும் வேண்டிய கிளைகள் கொடுக்கும். கைக்குப் போகும் நாடி மார்பிலிருந்து வெளியே வந்து புஜத்தின் முன்னெலும்பின் பின்புறமாக அக்கிளுக்கு வந்து சேர்கிறது. பிறகு மேற்கையின் உட்புறமாயும் கீழ் புறமாயும் போய் முழங்கையின் எதிரில் இரண்டாகப் பிரிகிறது. ஒன்று கீழ்கையின் பின்புறமாகவும் மற்றொன்று உட்புறமாகவும் கைக்குப் போய் சேர்கின்றன. கீழ்க்கையின் வெளிப்புறமாக ஓடும் சுத்த நாடியையே வைத்தியர்கள் நாடிப் பரீக்ஷைக்காக உபயோகிப்பார்கள்.



## கேச நாளங்கள்

சுத்த ரத்த நாடிகள் அநேக சிறு சிறு கிளைகளாக மாமிசங்களும், எலும்பு முதலிய தாதுக்களுக்கும் முண்டத்திலும் தலையிலுமுள்ள அவயவங்களுக்குப் போய் முடிவில் கண்ணுக்குப் காணப்படாத சிறு நாளங்களாக முடிகின்றன. இவைகளே கேச நாளங்களெனப்படும்.

## அசுத்த ரத்த நாடிகள் அல்லது சிரைகள்

மாமிசம், தோல் முதலிய தாதுக்களில் முடிகின்ற கேச நாளங்களுக்கொத்த சிறு நாளங்கள் பெருகி சிறு சிறு அசுத்த நாடிகள் அல்லது சிரைகள் ஆகின்றன. சிரைகள் தமனிகள் போல் குழாய்கள், ஆனால் பெருத்தும் மெலிந்தும் இருக்கும். இவைகளில் ஆங்காங்கு கவாடங்கள் இருக்கும்.

பாதம், கால்களிலிருந்து சிரைகளுக்கெல்லாம் ஒன்று சேர்ந்து துடைக்குப் போகின்றன. பிறகு அடிவயிற்றுக்குப் போய்ச் சேர்கிறது. வயிற்றுக்குள்ளிருக்கும் சிரைகள் இதோடு சேர்ந்து ஓர் பெரிய சிரையாய் விதானத்தைக் கடந்து வலது ஆதானத்தில் சேர்கிறது. இருகைகள், தலை, கழுத்து இந்த ஸ்தானங்களினின்று வரும் சிரைகள் ஒன்றாக சேர்ந்து வலது ஆதானத்தில் முடிகிறது.

வலது ஆதானத்தில் விழுந்த அசுத்த ரத்தம் வலது விஸர்கத்திற்குப் போகிறது. வலது விஸர்கத்திலிருந்து ஓர் பெரிய தமனி புறப்படுகிறது. இது புப்புஸ தமனியெனப்படும். இது இரண்டாகப் பிரிந்து ஒன்று இடது நுரையீரல்களுக்கும் மற்றொன்று வலது நுரையீரலுக்கும் போய் கடைசியில் சிறு கேச நாளங்களாக முடிகின்றன. நுரையீரல்களுக்கு அனுப்பப்பட்ட ரத்தம் சுத்தமான பிறகு அந்த சுத்த ரத்தம் மறுபடியும் இருதயத்திற்குப் போகிறது. வெகு சூக்ஷ்மமான ரத்தநாடிகள் சேர்ந்து ஒவ்வொரு நுரையீரலினின்று இரண்டு இரண்டு நாளங்களாக நான்கு நாளங்கள் இடது ஆதானத்தில் வந்து சேர்கின்றன.

## இரத்த ஓட்டம்

மனம் பிராணவாயு, நரம்பு, மாமிசம் இவைகளின் சகாயத்தினால் இருதயம் சுருங்குவதினால் இருதயத்திலிருந்து ரத்தம் நாடிகளுக்குப் போகும். இடது விஸர்கத்திலிருந்து சுத்தரத்தம் மஹாதமனிக்குத் தள்ளப்பட்டு அதிலிருந்து கணக்கற்ற சிறு குழாய்கள் மூலமாக சுத்த ரத்தம் உடல் முழுவதும் பரவுகிறது. சுத்தமான ரத்தம் தாதுக்களோடு கலக்குங்கால் அசுத்தமாகிறது. அசுத்த ரத்தம் பெரிய சிரைகளின் மூலமாக வலது ஆதானத்திற்கு வருகிறது. வலது ஆதானத்திற்கு வந்து சேர்ந்த ரத்தம் வலது விஸர்கத்திற்கு அனுப்பப்பட்டு, அவ்விடத்திலிருந்து அது புப்புஸ தமனி மூலமாக இரு நுரையீரல்களுக்குப் போகிறது. இந்த ரத்தம் சுத்த பிராணவாயுவுடைய சூக்ஷ்மமான வாயு பைகளோடு சேர்ந்து சுத்தமாக்கப்பட்டு மறுபடியும் நான்கு குழாய்கள் மூலமாக இடது ஆதானத்திற்குப்போய் அதிலிருந்து இடது விஸர்கத்தில் வந்து சேர்கிறது.

இருதயத்தின் துடிப்புத் தமனிகளின் மூலமாக கைக்கு ஸ்பரிஷிப்பதே நாடி சோதனையாகும். இதன் விவரம் வேறிடத்தில் கூறுவோம்.

## நிண நீர்க்குழாய்களும் கோளங்களும்

தாதுக்களினின்று சிரைகளின் மூலமாக ரத்தம் முழுவதும் இருதயத்திற்குச் சேர்வதில்லை. இரத்தத்திலிருந்து கொஞ்சம் ஜலபாகம் கசிக்கும். இதுவே நிணநீர் எனப்படும். இந்த நீணநிரும் தனியே குழாய்களின் மூலமாக இருதயத்திற்குப் போய் சேரும். இந்த நிணநீர்க் குழாய்கள் போகும் வழியே ஆங்காங்கு சிறு சிறு கோளங்கள் இருக்கும். பாதத்திலோ கையிலோ காயம் ஏற்பட்டால் துடைச்சந்திலாவது அக்கிளிலாவது நெரிக்கட்டுவது இந்து கோளங்கள் பெருகுவதாகும்.



# சுவாச மண்டலம்

மார்புக் கூண்டின் இரு பக்கங்களிலும் இரண்டு நுரையீரல்கள் உண்டு. இவைகளும் இரு மூக்குத் துவாரங்கள், தொண்டை, சுரேந்திரியம், சுவாச நாளமும், அதன் கிளைகளும் சுவாசகோசத்திற்குச் சேர்ந்தவை.

## மூக்குத் துவாரங்கள்

இவைகள் மேல் தவடை எலும்புகளின் மேற்புறமிருக்கும் துவாரங்கள், இரண்டு தூவாரங்களுக்கு மத்தியில் ஓர் விதமான சதை நின்றுக் கொண்டு ஒன்றை மற்றொன்றின்றும் பிரிக்கும். இந்த துவாரங்கள் தொண்டையின் மேற்புறத்தில் முடியும்.

## தொண்டை

இது வாயின் பின் பாகம், மூக்குத் துவாரங்களுக்குப் பின்புறமாகவும் கழுத்து முள்ளந்தண்டுக்கு முன்புறமாகவும் இருக்கும். தொண்டையின் பின்புறத்தில் அன்னவாகி என்னும் அன்னக் குழாயும் அதனெதிரில் சுரேந்திரியமும் இருக்கிறது.

## சுரேந்திரம்

வாயின் பின்புறத்தில் நாக்கின் அடியிலும் சுவாச நாளத்திற்கு மேற்புறமும் அன்னவாகிக்கு எதிரிலும் இருக்கும் ஓர் கருவி. இது சுவாசநாளத்தின் தலைப்பாகம். இது தொனிக்கு மூலஸ்தானம், இதன் மேற் துவாரத்தில் நாக்குப் போன்ற ஓர் தசை இருக்கும். இது திறந்து கொண்டே இருக்கும். நாம் குடிக்கும் ஜலபாதார்த்தங்களும் அன்னம் முதலிய உணவுகளும் இந்த சிறு நாக்கின் மேற்புறமாக போய் இதன் பின் புறமுள்ள அன்னவாகியில் போய் விழ வேண்டும். உணவு பதார்த்தங்கள் சுவாச நாளத்தில் விழுந்து சுவாசத்திற்கு தடையாகாதபடி இந்த சிறுநாக்கு காப்பாற்றுகிறது.

இது சுரேந்திரியத்திற்குக் கீழ்புறத்தில் அதன் தொடர்ச்சியாகப் போகும் ஓர் குழாய். இது சதைகளாலும் நார்களாலும் செய்யப்பட்டு இதன் முக்காற்பாகம் முன்புறமும் முருந்தினாற்

செய்தமோதிரங்கள் வரிசையாயிருக்கும். இவைகளை இதன் கிளைகளிலும் பார்க்கலாம். இது அன்னவாகியினெதிரில் மார்புக் கூண்டுக்குள்ளே போய் இரண்டாவது விலாவெலும்பின் எதிரில் இரண்டு கிளைகளாகப் பிரிந்து இடது, இடது நுரையீரலுக்கும், வலது, வலது நுரையீரலுக்கும் போகின்றன. நுரையீரல்களில் இவைகள் கணக்கற்ற சிறு நாளங்களாகின்றன. கடைசியில் கண்ணுக்குப் பார்க்க முடியாத சூக்ஷ்மமான வாயுப் பைகளாக முடிகின்றன.

## நுரையீரல்கள்

மார்பின் இரு பக்கங்களிலும் தங்கும் அவயங்கள் இவை. இதன் மேற்புறம் கூசாயும் கீழ்புறம் அகன்றும் இருக்கும். வலது ஈரல் கொஞ்சம் பெரியதாகவும் இருக்கும். இவைகளின் மத்தியில் மேற்புறத்தில் இருதயமும், அதற்குச் சேர்ந்த ரத்த நாடிகளும் இருக்கும். இந்த நாடிகளோடு இந்த ஈரல்கள் மார்பின் முள்ளந்தண்டுக்குள் கட்டப்பட்டுள்ளன. இருதயம் இடது பக்கத்தில் அதிகமாகச் சாய்ந்து இருப்பதனால் இடது ஈரலில் அது தங்குவதற்காகவே ஒரு பள்ளமிருக்கும். கீழ்புறத்தில் இரு ஈரல்களும் விதானத்தின் மேற்புறத்தில் தங்குகின்றன. வலது ஈரலுக்கும் விதானத்திற்கு அடியில் கல்லீரலும் இரைப்பையும் இருக்கும். இடது பக்கத்தில் இரைப்பையும் மண்ணீரலும் இருக்கும். மார்புக் கூண்டின் உட்புறமிருக்கும் ஓர் மெல்லிய தோல் இந்த நுரையீரல்களின் சுற்றம் ஓர் கவசமாக இருக்கிறது.

ஈரல்கள் கணக்கற்ற சூக்ஷ்மமான வாயுப்பைகளாலும், சுத்த ரத்த நாடிகளாலும் அசுத்த ரத்த நாடிகளும் வாயுவினாலும் ரத்தத்தினாலும் நிறைந்த பஞ்சுபோல் மெதுவான ஓர் கருவி.

## சுவாசம்

இருதயத்திலிருக்கும் பிராணவாயுவின் பிரேரேபணை பாலும், மூளையும் நரம்புகளின் சகாயத்தினாலும் சுவாச கார்யம் நடக்கிறது. இருதயமும் அதிலிருக்கும் ரத்தமும் பிராணவாயுவும், நரம்புகளும் ஒன்றோடொன்று சேர்ந்திருக்க வேண்டும். இதிலேதேனும் ஓர் பாகத்திற்கு ஊனம் வந்தால் சுவாச கார்யம் கெடும். இந்த கருவிகளோடு வெளியேயுள்ள சுத்த பிராணவாயுவும் உதவவேண்டும். இதன்றி மூச்சுக் கார்யம் நடைபெறுவதில்லை.



மூக்கு துவாரங்களின் மூலமாக தொண்டைக்கும் தொண்டையிலிருந்து சுரேந்திரியத்திற்கும் அதிலிருந்து சுவாச நாளத்திலிருந்து இரு நுரையீரல்களுக்கும் வெளிப்புறத்திலிருந்து வாயு பிரவேசிக்கிறது. இதுவே மூச்சு வாங்குதல், அல்லது உஸ்வாசமெனப்படும். சுவாச நாளத்திற்குள்ளே போன வாயுப் பைக்குள்ளே சேர்ந்து, அவைகளின் சுற்றிருக்கும் அசுத்த ரத்தத்தோடு கலக்கிறது. சுத்த வாயு அசுத்த ரத்தத்தில் கலந்த பிறகு அந்த ரத்தத்திலுள்ள அசுத்த வாயு இவ்வாயுப் பைக்குள்ளே சேர்கிறது. மூச்சு வாங்குங்கல் நுரையீரல்களும் மார்புக் கூண்டும் அதன் தசைகளும் விதானமும் விரியும். பிறகு இவைகள் சுருங்கும். இவைகள் சுருங்குவதனால் உள்ளேயிருக்கும் அசுத்தமான வாயு வெளியே வரும். இதுவே மூச்சு விடுதல், நிஸ்வாசம் அல்லது ஸ்வசம் எனப்படும்.

மூச்சு வாங்குவதனாலும், விடுவதனாலும் தேகம் சுத்தமாகும், இரத்தம் மற்ற தாதுக்களோடு கலக்கும்பொழுது அவைகள் அசுத்தமடைகின்றன. அவைகள் இடைவிடாமல் சுத்தமாக்கப்படின் சரீரத்தில் விஷம் தங்கி ஆரோக்கியத்தைக் கெடுத்து பிராண ஆபத்திற்கு இடந்தரும். மூச்சு வாங்கும் காற்றும் சுத்தமாக இருத்தல் வேண்டும். ஓர் சிறு அறையின் ஜன்னல்களையும் கதவுகளையும் மூடி, அதற்குள்ளே ஜனங்கள் நெருங்கியிருந்தால் அவ்விடத்தில் துர்வாசனை யுண்டாவதற்கும் மயக்கம் அல்லது மரணம் சம்பவிப்பதற்கும் அவ்விடத்தில் ஜனங்கள வெளியேவிட்ட அசுத்தக்காற்று தங்குவதே காரணமாகும். ஆகவே நாம் இடைவிடாமல் சுத்த காற்று இருக்கும் வெட்ட வெளியில் தங்கினால் நமது ரத்தமும் தேகமும் சுத்தமாய் நோயில்லாமல் வாழக்கூடும்.

நாம் ஓர் நிமிடத்தில் சுமார் 20 தடவை சுவாசம் விடுகிறோம். இதுவும் பழக்கத்தினால் வித்தியாசப்படும். விஸர்கத்திலிருந்து நுரையீரல்களுக்கு வந்த அசுத்த ரத்தத்தோடு நாம் வெளியிலிருந்து வாங்கிக் கொண்ட சுத்த வாயு கலந்து சுத்தமாகிறது. சுத்தமான ரத்தம் வேறு நாடிகளின் மூலமாக இருதயத்திற்குப் போய்ச் சேர்கிறது.

சுவாச கோசமும், அதன் காரியத்தையும் கவனித்துத் தெரிந்து கொண்டால் நாம் நோயின்றி வாழக்கூடும். அசுத்தமான நகரங்களிலிருக்கும் கெட்ட காற்றைச் சுவாசிப்பதே நோய்க்கு ஹேதுவாகும். இயற்கையிலே சுருங்கிய பல விதமான மார்புக் கூண்டுடையவர் வெட்ட வெளியே இருந்து நமது ஆரோக்கிய நூலிற் கூறப்பட்ட தேகப்பயிற்சியைச் செய்பவர்களுக்கு சுகமுண்டு.

# ஜீரண மண்டலம்

மனிதனின் போஷணைக்கென்றே சுவாசக்கோஷத்திற்கு அடுத்துள்ளது. அன்ன கோஷமாகும். போஷணைக்குச் சுத்த காற்றும், சுத்தஜலமும் ஆகாரமும் வேண்டும். ஜலபானத்திற்காகவும், அன்னத்திற்காகவும் தனியே கருவிகளுண்டு. இவைகளை அன்னகோஷம் அல்லது ஜீரண கோஷமென்பார்கள்.

வாய், தொண்டை, அன்னவாஹி, இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல், மலப்பை, ஆசனம் அல்லது மலத்துவாரம் இவைகள் அன்ன கோஷத்திற்குச் சேர்ந்த பாகங்களாகும். கல்லீரலும், கனையம் என்னும் ஓர் கருவியும் இந்த கோஷத்திற்குச் சேர்ந்தவைகள்.

## வாய்

இது ஏறக்குறைய ஓர் குதிரையின் குளம்பைப் போல் வளைந்த கீழ் தவடை எலும்பினாலும் மேலிரண்டு தவடை எலும்புகளாலும் கட்டப்பட்டுள்ளது. இதில் கீழ் தவடை எலும்பு மாத்திரம் கன்ன எலும்போடு கீலாகச் சேர்ந்து அசையும், மேல் தவடை எலும்புகள் அசைவதில்லை. இந்த எலும்புகள் மேலும் கீழும் தோல்களாலும் தசைகளாலும் மூடப்பட்டுள்ளன. வாயைத் திறக்கவும் மூடவும் இந்தத் தோல்களும் தசைகளும் சகாயமாகவே இருக்கின்றன.

இது முன்புறத்திலும் பின்புறத்திலும் திறந்துள்ளது. முன்புறத்தில் தசையினாலும் தோலாலும் செய்யப்பட்ட உதடுகளும் இருக்கின்றன. ஜலம் முதலிய பான திரவியங்களைக் குடிக்கவும், கட்டியான அன்னம் முதலிய உணவுப் பதார்த்தங்களை உட்கொண்டு மெல்லவும் இவைகள் உதவியாய் சகாயமாக நிற்கின்றன. இந்த உதடுகள் பேசும் கருவிகளில் ஓர் பாகம், உதடுகளுக்கு நோய் வந்தால் பேசவும், ஜலம் குடிக்கவும் அன்னம் தின்னவும் முடியாது.



வாயின் பின்புறம் தொண்டையாகும். குடித்த ஜலபதார்த்தங்களும் அன்னமும் தொண்டையின் பின்புறத்திலுள்ள அன்னவாகியில் விழவேண்டும். வாயின் கீழ்ப்புறம் கீழ்த்தவடையெலும்பின் ஓரத்தில் ஒட்டியுள்ள தசைகளாலும் தோலாலும் மூடியுள்ளது.

## நாக்கு

சுரோந்திரத்திற்கு முன்புறத்திற்கு ஒட்டியுள்ள தட்டையான ஓர் மாமிச கண்டம், ஓர் கிளைக்கு ஓர் இலை ஒட்டிக் கொண்டு ஆடுவது போல் இருக்கும். இது ஞானேந்திரியங்களில் ஒன்று. இதன் சகாயத்தினால் நாம் ருசி தெரிந்துகொள்ளக்கூடும். நாக்கு கெட்டால் நாம் ருசியறிவதில்லை. இது கர்மேந்திரியங்களிலும் ஒன்றாகும். தொண்டையும் தொனிக்கு சகாயமாக இருக்கும் கருவிகளும் நாக்கின் சகாயங்கொண்டே பேசவேண்டும். நாக்கின் தொழில் கெட்டால் பேசமுடியாது. நாக்கின் ஞானகர்ம காரியங்கள் வாயு, தசை நரம்பின் சகாயத்தினால் நடக்கவேண்டும், இவைகளின், சகாயமின்றி நாக்கு தனது காரியங்களைச் செய்யமுடியாது. மூளையிலிருந்து இதற்கென்றே நரம்புகள் வந்து சேர்கின்றன.

உப்பு, காரம், புளிப்பு, கயிப்பு, துவர்ப்பு, மதுரம் என்னும் அனைத்து ருசிகளை நாக்கு தெரிந்து கொள்ளும் திறமையுடையது. நாக்கின் ருசி எந்த விதத்தினாலும் கெட்டால் ஆரோக்கியம் கெட்டதென்று அறியவேண்டும். கொஞ்சம் ருசி குறைந்ததே நோய்வராதபடி வேண்டிய முயற்சிகளைச் செய்தல் வேண்டும்.

## உமிழ்நீர் கோளங்கள்

வாயில் அடிப்பாகத்தில் மூன்று விதமான கோளங்களுண்டு, இவைகளினின்று உமிழ் நீர் சுரந்துகொண்டே வரும், நீரும் நாக்கிலிருந்து உண்டாகும் ரசமும் தின்னும் உணவுப்

பொருட்களோடு கலந்து ஜீர்ணத்திற்கு, சகாயமாகின்றன. ஜீர்ணத்திற்கு சகாயமாக இரைப் பையிலும் குடல்களிலுமுள்ள ரசங்களும் பித்த முதலிய ரசங்களும் இருந்த போதிலும் உமிழ் நீரே ஜீர்ணத்திற்கு முக்கியமான ஓர் ரசமாகும்.

## பற்களும் மெல்லுதலும்

நாம் தின்னும் பதார்த்தங்களை நன்றாக மென்று தின்பதற்காகவே பற்கள் முளைத்துள்ளன. உட்கொண்ட ஆகாரத்தை நீர்வடிவமாகும் வரையில் மெல்ல மெல்ல மென்றாலொழிய அது உமிழ் நீரோடு கலந்து ஜீர்ணமாகுவதில்லை. கட்டியான உணவுப் பொருட்களைச் சரியாக மெல்லுவதனால் பற்களும் உறுதியாகின்றன. மெல்லுவதனால் பல் நோய் வருவதில்லை. வாய், தவடை, முகம், கண், மூக்கு இவைகள் செவ்வனே வளர்ந்து முகத்திற்கு ஓர் ஒளி தரும் (காந்திவரும்). மென்று தின்னாவிட்டால் அஜீர்ணமும் அதனால் அநேக விதமான நோய்களும் உண்டாகும் சமைக்காத கெட்டியான தானியம், கொட்டை, கிழங்கு, காய், பழங்களே மென்று தின்பதற்கு சரியான உணவு. ஒருவேளை சமைத்தாலும் அதுவும் கட்டியாகவே இருத்தல் வேண்டும்.

## தொண்டை

இது வாயின் பின்புறத்திலிருக்கும். வாய்க்கு வந்த ஜலமாவது அன்னமாவது இதன் வழியாக அன்னவாகிக்குப் போய் சேர வேண்டியது. தொண்டையிலும், வாயிலும் இருக்கும் சதைகளின் சகாயத்தினால் நாம் உணவுகளை விழுங்கவேண்டும். தொண்டையிலுள்ள கோளங்களும் தசைக்களும் கெட்டுத் தமது தொழில் செய்யாவிட்டால் கார்யம் நடவாது.

## அன்னவாகி

கழுத்து முள்ளந்தண்டிற்கு எதிரில் தொண்டைக்கும் சுரேந்திரியத்திற்கும் சுவாசநாளத்திற்கும் பின்புறமுள்ள ஓர் நாளம் இது. அநேகமாகத் தசையினாலேயே செய்யப்பட்டுள்ளது. மார்பு முள்ளந்தண்டுக் கெதிரில் நேர் கீழாகப் போய் விதானத்தின் பின்புறம் துவாரம் செய்து வயிற்றுக் கூண்டுக்குள் அகன்று



இரைப்பையாக முடிகிறது. இதன் சுருங்குதல் விரிதலின் மூலமாகத் தொண்டைக்கு வந்த உணவு இரைப்பைக்குப் போய்ச் சேரவேண்டும்.

## இரைப்பை

வயிற்றுக் கூண்டுக்குள்ளே நுழைந்து பெருகி, ஏறக்குறைய முக்கால் சந்திர வடிவமுள்ள ஓர் பை இரைப்பையாகும். இரைப்பையாகப் பெருகின இந்தக் குழாய் மறுபடியும் சுருங்கி சிறு குடலாக முடிகிறது. இரைப்பை மாமிசத்தினாலும் தோலாலும் செய்யப்பட்ட ஓர் பை. இதற்கு விரியவும் சுருங்கவும் சக்தியுண்டு. இதனுள் தங்கும் பொருளின் அளவுக்குத் தக்கவாறு இதன் அளவும் வடிவமும் வேறுபடும். விதானத்தின் கீழ்புறத்தில் கல்லீரலுக்கு இடது பக்கமாகவும், மண்ணீரலுக்கு வலது பக்கமாகவும் வயிற்றின் மேற்புறத்தில் இரைப்பை தங்குகிறது. வயிறு முழுவதையும் மூடும் மெல்லிய தோல் இரைப்பையை சுற்றுமுள்ள கல்லீரல் முதலிய கருவிகளோடு கட்டவைக்கிறது. இதற்குப் பின்புறத்தில் முள்ளந்தண்டுக்கு இரு பக்கத்தில் இரு குண்டிக்காய் களுண்டு.

இரைப்பையின் உட்புறம் மெல்லிய தோலும் ஜீர்ணமும் செய்யக்கூடிய ரசம் உற்பத்தியாகும் கோளங்களுமுண்டு. இரைப்பையின் ஜீர்ணசக்தியினாலுண்ட அன்னம் (ஜீரணமாக செரிக்க) வேண்டும். பற்களால் நன்கு மெல்லப்பட்டு உமிழ்நீரில் கலந்துள்ள உணவு இரைப்பையில் சுலபமாக ஜீர்ணமாகும். அப்படிக்கில்லாவிடின் ஜீர்ண சக்திக் குறைந்து இரைப்பையின் தொழில் கெட்டு நோய் தோன்றும். வயது, தொழில், ஆரோக்கியம், ரத்தபலம் முதலியவைகளை அனுசரித்து இரைப்பையின் ஜீர்ணசக்தி பேதப்படும். சாதாரணமாக சுமார் மூன்று மணிக்குள்ளே நின்ற பதார்த்தம் இந்தப் பையில் ஜீர்ணமாகிறது. இரைப்பையில் ஜீர்ணமான உணவுப் பொருள் ரசமாக பிறகு இரத்தத்தில் கலக்கிறது. ஜீர்ணமாகாத பாகம் இதன் தொடர்பாகமான சிறு குடலுக்குள் தள்ளப்பட்டு அங்கு ஜீர்ணமாகிறது.

## சிறுகுடல்

இரைப்பை சுருங்கி சிறு நாளமாகிறது. இது சிறு குடலெனப்படும். இது ஏறக்குறைய அன்னவாகி போன்ற ஓர் நாளம். இது சுமார் 20 அடி நீளமாயிருக்கும். இதன் தொடர்பே பெரிய குடலாகும். வயிற்றுக் கூண்டு இதன் மற்ற கருவிகள்போல் இதுவும் ஓர் மெல்லிய தோலால் மூடப்பட்டு இது குடலை அநேக சுருக்கங்களாகச் சுருக்கி வயிற்றின் முள்ளந்தண்டெலும்புக்குள் கட்டியிருக்கிறது. வயிற்றின் பெரும்பாகத்தில் இந்தக் குடல் தங்கும். இதன் மேற்புறத்தில் சுமார் ஓர் அடிப்பாகம் ஜீர்ணத்திற்கு முக்கிய பாகமாகும். இந்தக் குடற்பாகம் கல்லீரலின் அடிப்புறத்திற் போய் கனையத்தின் தலையைச் சுற்றுகிறது. இந்தச் சிறு குடலின் பாகமும், பித்தப்பையும் கனையமும் இருக்குமிடமே ஜடராக்கினிக்கு மூலஸ்தானமாகும். இந்த ஜீர்ணத்திற்கு வேண்டிய சமான வாயு தங்கும். சிறுகுடலின் இந்த பாகத்திற்கு தான் ஓர் குழாய் மூலமாக பித்தப்பையிலிருந்து பித்தமும் கனையத்திலிருந்து அதன் ரசமும் கலந்து வந்து சேர்கிறது. வாயிலும் இரைப்பையிலும், ஜீர்ணமாகாத பாகம் இவ்விடத்தில் ஜீர்ணமாகின்றது. பித்தமும் கனையத்தின் ரசமும் உற்பத்தியாகும். இந்த ஸ்தானம் செவ்வனே இருக்கும் வரையில் சரியான ஜடராக்கினியுண்டு. ஜீர்ணசக்தியுண்டு, ஆரோக்கியமுண்டு. இந்த ஸ்தானம் கெட்டால் ஜீர்ணசக்தி கெடும். இதனால் ரத்தம் கெடும். ரத்தக் கெடுதியினால் சகலவிதமான நோய்களும் சம்பவிக்கின்றன.

## பெருங்குடல்

அடிவயிற்றின் வலது மூலையில் கொஞ்சம் கொஞ்சமாக பெருகி வந்த சிறுகுடல் பெரிய குடலாகத் தொடர்ந்து போகிறது. இவ்விடத்தில் குடல் பெருகி இதில் மேற்புறத்திலிருந்து கீழ்புறமாகத் திரும்பக்கூடிய ஓர் கவாட்டமுண்டு. இந்தப் பெருத்த குடலின் கீழ்ப்புறத்திலும் வெளிப்புறத்திலும் சிறு குழாய் போன்ற ஓர் கருவி இருக்கிறது. இது வெளிப்புறத்தில் மூடப்பட்டும் உள்ளே குடற்குள்ளே விரிக்கப்பட்டுமுள்ளது. இது லம்பிகையெனப்படும்.



ஆரம்பத்திற் பெருத்த பெரிய குடல் மறுபடியும் கொஞ்சம் சுருங்கி வயிற்றின் வலது பக்கத்தில் மேல் திசையாகப் போய் கல்லீரலின் கீழ்ப்புறம் வளைந்து இரைப்பையின் கீழ்ப்புறத்தில் வயிற்றின் குறுக்கே போய் இடது பக்கத்தில் மண்ணீரலின் கீழ்புறம் வளைந்து வயிற்றின் இடது பக்கத்தில் நேர் கீழ்ப்புறமாகப் போய் அடிவயிற்றில் இடது மூலையில் மலப்பையாக முடிகிறது. இது போகும் வழியில் தனக்குச் சுற்றியிருக்கும் கருவிகளுக்கு வயிற்றுக் கூண்டைமூடும் மெல்லிய ஓர் தோலால் கட்டப்பட்டுள்ளது.

இது சுமார் 8 அடி நீளமும் சிறு குடலுக்குச் சுமார் 3 பங்கு கனமாகவும் இருக்கும். சிறுகுடல் போல் இதற்கு ஜீர்ணமாக்கும் சக்தியில்லை. சிறுகுடலில் ஜீர்ணமாகாத திப்பியாகிய மலம் பெருங்குடலின் மூலமாகத் தள்ளப்பட்டு மலப்பையில் வந்து சேர்கிறது.

## மலப்பை

பெருங்குடலின் தொடர்பாகமான அகன்ற குடலிது. இது அடிவயிற்றின் இடது மூலையில் தங்குகிறது. இதன் முன்புறத்தில் மூத்திரப்பை இருக்கும். ஸ்திரீகளின் கர்ப்ப கோஷம் இவை இரண்டுக்கும் மத்தியிலிருக்கும். பெருங்குடலிலிருந்து மெல்ல மெல்லத் தள்ளபட்ட மலம் இதில் தங்கி அபான வாயுவினால் நாளுக்கு இரண்டொரு முறை வெளியே தள்ளப்படுகிறது. பழக்கத்தினாலும் மற்றக் காரணங்களினாலும் மலவிஸர்ஜனை காலம் வேறுபடும்.

## ஆசனத் துவாரம்

இரு பிட்டங்களுக்கு மத்தியில் மல விசர்ஜனத்திற் கேன்றேயுள்ள ஓர் துவாரம். இது மலப்பையின் கீழ் முகமாகும். இது வட்ட வடிவமான தசையினால் நிர்மிக்கப்பட்டுள்ளது. மல விஸர்ஜன காலத்தில் இது தானே விரியும். இதை நம்மிஷ்டப்படி திறக்கவும் கூடும்.

## கல்லீரல்

வயிற்றின் வலது மேற்புறத்தில் வலது மார்புக் கூண்டுக்கும் விதானத்திற்கும் கீழ்புறம் தங்கும் ஓர் கருவி. இதன் வலம்பக்கம் பெருத்தும் அகன்றுமிருக்கும். இடது பக்கத்திற் குறுகியும் மெலிந்துமிருக்கும். இந்த இடது பாகம் வயிற்றின் மத்திய ரேகை வரையிலும் இரைப்பை ஸ்தானம் வரையிலும் விஸ்தரிக்கும். வயிற்றுக் கூண்டுக்குள்ளேயிருக்கும் குடல் முதலியவைகளினின்று வரும் சிரைகளெல்லாம் ஒன்று சேர்ந்து இதிற் கலக்கும். ஜீர்ணத்திற்குப் பேருதவியாயுள்ள பித்த ரஸம் இதில் உற்பத்தியாகிறது. இந்தப் பித்தம் வந்து சேருவதற் ஓர் பித்தப்பை இதிலுண்டு. இந்த பையிலிருந்து ஓர் நாளம் மூலமாக இதன் அருகிலேயுள்ள சிறு குடலிற் சேரும் முன்பு கனையத்திலிருந்து வரும் அதன் ரஸத்தோடு கலந்து குடலிற் சேரும்.

## கனையம்

இரைப்பையில் கீழ்புறத்தில் வயிற்றின் குறுக்கே, தங்கும் ஓர் கருவி, இடது பக்கத்தில் மண்ணீரல் வரையிலும் இடது பக்கத்திற் சிறுகுடலின் மேற்பாகம் வரையிலும் விஸ்தரிக்கும். இதன் பின்புறம் இரு குண்டிக்காய்களிலிருக்கும். இதன் ரசம் ஓர் குழாய் மூலமாகச் சிறு குடலுக்குப் போய்ச் சேர்கிறது. சேர்வதற்கு முன்பு பித்த ரஸத்தோடு கலக்கிறது. இதன் ரசமும் பித்தமும் கலந்து வாயிலும் இரைப்பையிலும் ஜீரணமாகாத உணவைச் ஜீரணிக்கச் செய்கிறது.

## ஜீர்ணம்

நாமுண்ணும் ஆகாரம் வாயிலிருக்கும் உமிழ் நீர், இரைப்பையின், ரசம, வாயுபலம், ரத்தபலம், இவைகளினால் பக்குவமாய் ஜீர்ணமாக வேண்டும். வயது, காலம், தேசம், தொழில், ஆரோக்கியம் முதலியவைகளை அனுசரித்து ஜீர்ணம் வித்தியாசப்படும். நாக்கு ருசியைக் கவனியாது சுலபமாக ஜீர்ணிக்கக்கூடிய சுத்தமான ஆகாரத்தை அளவோடு சாப்பிட்டால் ஜீரணமாகும். மாந்தம், அஜீர்ணம், மலபந்தம், வாந்தி, பேதி முதலிய பாதைகளிராது. அளவுக்குட்பட்ட சுத்த



ஆகாரத்தை நன்றாக மென்று சாப்பிட்டால் உணவு ஜீர்ணமாய் சரீரத்திற்கு புஷ்டி (பலம்) தரும்.

# மூத்திர மண்டலம்

சரீர போஷணைக்கென்று உட்கொண்ட அன்னம், ஜலம், வாயு முதலியவைகள் தேகத்தைப் போஷித்தபிறகு அதிலிருந்து மலங்கள் கழிந்துக் கொண்டு இருக்கும். மூத்திரம் மலத்திரவியங்களிலொன்று. இது உற்பத்தியாய் வெளியே போவதற்கு சரீரத்தில் தனியே இதற்கென்று கருவிகளுண்டு.

இரு குண்டிக்காய்கள், அவைகளிலிருந்து மூத்திரத்தை மூத்திரப்பைக்கு தள்ளும், நாளங்கள், மூத்திரப்பை, மூத்திர விஸர்ஜனத்திற்காக மூத்திரப் பையிலிருந்து வெளிப்படும் மூத்திரக் குழாய் இவைகள் மூத்திர மண்டலத்திற்குச் சேர்ந்த கருவிகளாகும்.

## குண்டிக்காய்கள்

இவைகள் குண்டிக்காய்கள் வயிற்றின் மேற்பாகமாகிய இடுப்பு முள்ளந்தண்டின் இரு பக்கங்களிலும் விதானத்திற்கு கீழ்ப்புறத்திலும் தங்கும் கருவிகள், இவைகள் அவரை விதைப் போன்ற வடிவமுடையவைகளாய் சுமார் நாலரை அங்குலம் நீளமாயும் இரண்டரை அங்குலம் அகலமாயும் 1 அங்குலம் கனமாயும் இருக்கும். இதன் சுருங்கின பாகம் முள்ளந்தண்டுக்கு எதிராகவும் இருக்கும். இந்தச் சுருங்கின பாகத்தின் தான் தமனிகளும் சிரைகளும் போக வரவும் ஸ்தானமாயிருக்கும். இவ்விடத்திலிருந்தே குண்டிக்காயிலிருந்து உற்பத்தியான மூத்திரம் மூத்திரப் பைக்குப் போக மூத்திர நாளம் புறப்படுகிறது.

சரீரத்தில் அநேக கருவிகளுண்டு. அவைகளில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சக்தியும் தொழிலுமுண்டு. கல்லீரலுக்குப் பித்த உற்பத்தியும் அண்டத்திற்கு சுக்கில தாதுவும் உற்பத்தியாக்கும் திறமையுள்ளதுபோல குண்டிகாய்களுக்கு மூத்திரம் உற்பத்தியாக்கும் சக்தியுண்டு. குண்டிக்காய் முழுவதும்

ஒரு விதமான தசைதான். மஹா தமனியின் கிளைமூலமாக இதற்குள்ளே பிரவேசிக்கும் சுத்த ரத்தத்திலிருந்து குண்டிக்காய்கள் ஒவ்வொரு கணமும் மூத்திரத்தைப் பிரித்துக் கொண்டே வரும்.

## மூத்திர குண்டிக்காய் குழல்

ஒவ்வொரு குண்டிக்காயின் சுருங்கிய உட்பாகத்திலிருந்து ஓர் குழாய் புறப்படும். இதன் மூலமாகக் குண்டிக்காயிலிருந்து மூத்திரப்பைக்கு மூத்திரம் போக வேண்டும். இது ஆரம்பத்தில் குண்டிக்காய்க்குள் அகன்றிருக்கும். பிறகு சுருங்கி வயிற்றுக் கூண்டின் பின்புறத்தில் முள்ளந்தண்டின் ஓரமாகப் போய் மூத்திரப் பைக்குள்ளே முடிகிறது. இது சுமார் முக்காலடி நீளமாயிருக்கும். இந்தக் குழாய் மூலமாகக் குண்டிக்காயிலிருந்து மூத்திரம் மூத்திரப் பைக்குள் இடைவிடாமல் விழும்.

## மூத்திரப்பை

இது அடிவயிற்றின் முன்னெலும்புக்குப் பின்புறத்தில் தங்குகிற ஓர் பை. தோலாலும் தசையினாலும் செய்யப்பட்டது. மேற்புறம் அகன்றும் கீழ்ப்புறம் சுருங்கியும் இருக்கும். வயிற்றுக் கூண்டின் உட்புறத்தையும் அதற்குள் தங்கும் கருவிகளையும் மூடும் ஓர் தோலானது. இந்தப் பையிக்கு கவசமாக இருக்கிறது. இந்தத் தோல் இந்தப் பையை சுற்றியிருக்கும் குடல் எலும்பு முதலியவைகளுக்குக் கட்ட வைக்கிறது. இதன் வடிவமும் அளவும் அதற்குள் தங்கும் மூத்திரத்தின் அளவுக்கேற்றவாறு மாறும். இது அதிகமாகப் பெருகினால் இதில் சுமார் முக்கால்படி மூத்திரம் தங்கும்.

இதன் மேற்புறத்தில் இரு பக்கத்தில் இரண்டு துவாரங்களுண்டு. இரண்டு குண்டிக்காய்களிலிருந்து இதற்குள் மூத்திரம் இடைவிடாமல் மூத்திரப்பைக்குள் விழுந்துகொண்டே இருக்கும். இதன் முன்புறம் கீழ் புறமுள்ள சுருங்கிய பாகத்திலிருந்து ஓர் குழாய் புறப்படுகிறது. இதன் மூலமாக மூத்திரம் வெளிப்படவேண்டும்.



இது மலப்பைக்கு முன்புறமிருக்கிறது சிறு குடல்களின் சுருள்கள் இதற்கு மேற்புறமிருக்கும் ஸ்திரீகளின் கர்ப்ப கோஷம் மூத்திர பைக்கும், மலப்பைக்கும் மத்தியிலிருக்கும்.

## மூத்திரப்பைக் குழாய்

இது மூத்திரப் பையின் கீழ்புறத்திலிருந்து புறப்படுகிறது. இதன் மூலமாக மூத்திரப்பையிலிருந்து மூத்திரம் வெளியாக வேண்டும். இந்தக் குழாய் ஸ்திரீகளுக்குக் குட்டையாய் சுமார் இரண்டு அங்குலம் நீளமாயிருக்கும். புருஷர்களுக்கு நீண்டும் மத்தியில் கொஞ்சம் வளைந்தும் இருக்கும். இது சுமார் 8 அங்குலம் நீளமிருக்கும்.

## மூத்திர விஸர்ஜனம்

குண்டிக்காய்களிலிருந்து மூத்திரப் பைக்குள் விழுந்த மூத்திரம் சுமார் 4 மணிக்கொரு முறை மூத்திரப்பை கொஞ்சம் நிரம்பினதும் மூத்திரம் பெய்யவேண்டுமென்னும் உணர்ச்சி உண்டாகிறது. இதனால் நாம் மூத்திர விஸர்ஜனை செய்கிறோம். தின்னும், ஆகாரம், குடிக்கும் பான திரவியங்கள், தொழில், பழக்கம், காலம், முதலியவைகளினால் மூத்திர விஸர்ஜனை காலம் வித்தியாசப்படும். இவைகளை அனுசரித்து மூத்திரத்தின் அளவும் குணமும் வேறுபடும்.

## மூத்திரம்

ஆகாரம் முதலியவைகளை அனுசரித்து இது பல ஜனங்களிடத்தில் பலவிதமாக இருக்கும். இதில் அதிக பாகம் ஜலமேயாகும். ஓர் விதமான மூத்திர சத்தும், சில உப்புச் சத்துக்களும் புளிப்புச் சத்துக்களும் கலந்திருக்கும். இதற்கு ஓர் விதமான மூத்திர வாசனையுண்டு. நிறத்தில் ஏறக்குறைய வைக்கோல் அல்லது வெண்மை மஞ்சள் நிறமாக இருக்கும். எந்தக் கல்மஷங்களும் இரா. கொஞ்சம் சிலேஷ்மம் கலந்திருக்கும். நாளொன்றுக்கு ஒருவன் முக்கால்படி மூத்திரம் பெய்கிறான்.

# உற்பத்தி மண்டலம்

ஆணுக்கும் பெண்ணுக்கும் சந்ததி விருத்திக்கென்றே ஜனனேந்திரியங்களுண்டு. இருப்பினும் இவைகளின் செய்கை ஆணினிடத்தில் சுமார் 18 வயது வரையிலும் பெண்ணிடத்தில் சுமார் 14 வயது வரையிலும் காட்டுவதில்லை. இந்த இந்திரியங்கள் மூத்திரக் கருவிகளோடு சேர்ந்திருக்கும். இந்த இந்திரியங்கள் வளருங்கால் சரீர மொத்தம் வளர்ந்து ஸ்திரீ புருஷர்களிடத்தில் காம இச்சை உண்டாகிறது. இரு வகுப்பினரிடத்தும் இந்த ஸ்தானம் வேறுபடும்.

## உற்பத்தி மண்டலம் - புருஷர்கள்

இரு அண்டங்களும் இவைகள் தங்குவதற்குத் தசையாலும் தோலாலும் செய்த ஓர் பையும், ஒவ்வொரு அண்டத்திலிருந்து புறப்படுகிற ஓர் விந்து நாளமும் தங்குவதற்கென்றேயுள்ள ஓர் பையும் ஆண் குறியும் ஆண் உற்பத்தி மண்டலத்திற்குச் சேர்ந்தவை.

இவைகளில் அண்டங்கள் சுக்கில தாதுவுக்கு மூலஸ்தானமாகும். ஆண் குறிக்குக் கீழ்புறம் இரு துடைகளுக்கு மத்தியில் தொங்கும் ஓர் பையின் இரு பக்கங்களில் இரண்டு அண்டங்கள் இருக்கின்றன. இது வடிவத்தில் ஏறக்குறைய அண்டாகரமாயும் ஏறக்குறைய ஓர் ஜாதிக்காயின் ப்ரமாணமுடையதாயிருக்கும். அண்டத்திலிருந்து வெகு சூக்ஷமமான நாளங்கள் உற்பத்தியாகி இவைகள் ஒன்றாகச் சேர்ந்து அண்டத்தின் மேற்புறம் ஓர் பெரிய நாளமாகிறது. அண்டத்திலிருந்து உற்பத்தியாகும் தாது இந்த நாளத்தின் மூலமாகப் போக வேண்டும்.

## சுக்கில தாது நாளம்

இது அண்டத்தின் மேற்புறத்தில் தோன்றி அதன் பின்புறத்தில் போகிறது. இதோடு அண்டத்திற்கு சம்பந்தப்பட்ட நரம்புகளும் ரத்தநாடிகளும் போகும். இந்த நாளம் அண்டத்தை விட்டு வெளிப்புறமாகவும் மேற்புறமாகவும் போய் வயிற்றில் மத்திய ரேகைக்கு புட்ட எலும்பின் எதிர் நுனிக்கும் மத்தியில் அடிவயிற்றிற்கு ஓரத்தில் அடிவயிற்றுக்கு ஓரத்தில் அடிவயிற்றிற்குள் நுழைகிறது. இது அடி வயிற்றுக்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக சுமார் ஓர் அங்குலம் நீளமுள்ள சிறு கால்வாயில் போகும். இந்தக் கால்வாயின் உள் துவாரத்தின் மூலமாகத்தான் குடல் வாதத்தில் குடல் வெளிவருகிறது.

அடி வயிற்றுக்குள்ளே பிரவேசித்த இந்த நாளம் மூத்திரப் பையின் கீழ்புறமாக வந்து மூத்திரப்பைக் குழாய் ஆரம்ப ஸ்தானத்திலிருக்கும் பைக்குள் சேர்கிறது.

## சுக்கில தாதுப் பைகள்

மூத்திரப்பைக் குழலின் ஆரம்பத்தின் இருபக்கங்களிலிருக்கும் பைகள் பீஜத்திலிருந்து சுக்கில்தாது நாளமூலமாக வரும் சுக்லம் இவைகளில் தங்கும். இந்த பைகளிலிருந்து மூத்திரப்பைக் குழாய் அல்லது நீர்த் தாரையில் ஓர் சிறிய நாளமூலமாக விந்து விழும்.

## சுக்கில தாது

இது பீஜத்தில் உற்பத்தியாகி ஓர் நாளம் மூலமாகச் சுக்கில தாதுப் பைக்குள் தங்குகிறது. இந்த தாது சுமார் 16 வயதுக்கு மேற்பட்டு உற்பத்தியாகிறது. ஆயினும் அநேகமாக ஆண் வயதிற்கு வந்து 2–3 வருடங்களுக்குப் பிறகே இந்த விந்துக்கு உற்பத்தியாகும் திறமையுண்டு. சிலருக்கு உற்பத்தியாகும் தன்மையில்லாமலிருக்கக்கூடும்.

இந்த சுக்கில தாது ஆணுக்குப் பலமும், தைரியமும், ஆனந்தமும், ஆரோக்கியமும் தருகிறது. எல்லா விதமான சக்திகளும் விந்து நஷ்டமானாலும் சரியான வயதிற்கு வந்த பிறகும் மிதமிஞ்சி எந்தக் காரணத்திலாவது விந்து நஷ்டமானாலும் எல்லாவிதமான சக்தியும் சுகமும் நஷ்டமாகின்றன. ஆரோக்கியத்தையும் மற்ற சுகங்களையும் விரும்புகிறவன் தனது விந்து நஷ்டமாகாமல் காப்பாற்றிக் கொள்ள வேணடும்.

## உற்பத்தி மண்டலம் - ஸ்திரீகள்

ஸ்திரீகளின் அடிவயிற்றில் மூத்திரப் பைக்கும் மலப்பைக்கும் மத்தியில் உற்பத்திக்குச் சம்பந்தப்பட்ட கருவிகள் தங்கும்.

கர்ப்பாசயமும் அதனிருப்பக்கங்களிலிருக்கும் சினைப் பைகளும், சினைப்பைகளிலிருந்து கர்ப்பாசயத்திற்கு வரும் நாதச் குழல்களும் யோனியும் ஸ்திரீ உற்பத்தி மண்டலமாயிருக்கும்.

## கர்ப்பாஸயம்

அது யோனிக்கு நேராக அடி வயிற்றிலிருக்கும் ஓர் மாமிசப்பை. இதன் மேற்புறம் அகன்றும் கீழ்புறம் சுருங்கியுமிருக்கும் இதன் அளவு தேகத்தை அனுசரித்து வித்தியாசப்படும். சுமார் 4 அங்குலம் நீளமாயும் இரண்டரை இங்குலம் அகலமாயும் 1 அங்குலம் கனமாயுமிருக்கும் கர்பந்தரித்த பிறகு இதன் அளவு மாறும்; இதன் முகம் உண்டையாயிருக்கும். இதில் சுருங்கிய ஓர் துவாரமுண்டு. இது மேற்புறத்திற்போய் கர்ப்பாஸயத்தின் குழிக்குள் பிரவேசிக்கும்.

முகத்தின் மேற்புறம் கொஞ்சம் சுருங்கியிருக்கும். இதுவே இதன் கழுத்துப் பாகமாகும். கழுத்தின் மேற்புறம் கர்ப்பாஸயத்தின் உடலாகும். இது கீழ்ப்புறம் சுருங்கியும் மேற்புறம் அகன்றுமிருக்கும். உடலின் இரு பக்கத்தில் இரு துவாரங்களுண்டு. நாதக் குழல்கள் இரண்டு இவ்விடங்களில் சந்திக்கின்றன. இந்தத் துவார மூலமாகச் சினைப் பைகளிலிருந்து ஸ்திரீயின் விந்துவாகிய சோணித் தாது கர்ப்பாசயம் வந்து சேர்கிறது.

## நாதக் குழல்கள்

கர்ப்பாசயத்தின் மேற்புறத்தில் இரு பக்கங்களில் சேரும் நாளங்களிவை. இந்தக் குழலின் மற்றோர் முனை சினைப்பைக்கு ஒட்டியிருக்கும். அது சுமார் 4 அங்குல நீளமாயிருக்கும். இந்தக் குழலின் மூலமாக ஸ்தரீயின் தாது கார்ப்பாசயத்திற்கு வந்து சேர்கிறது.

## சினைப்பைகள்

புருஷர்களுக்கு பீஜம்போலிருக்கும் கருவிகள் இவை. சினைப்பை ஏறக்குறைய ஓர் இலுப்பைக் கொட்டையை ஒத்திருக்கும். இது சுமார் ஒரு அங்குலம் நீளமாயும் முக்கால் அங்குலம் அகலமாயும் அரை அங்குலம் கனமாயுமிருக்கும். இது



நாதக்குழலில் ஓர் முனைக்குக் கட்டப்படுகிறது. சூக்ஷமமான நாளங்களின் மூலமாக இதிலுற்பத்தியாகும் தாது நாதக் குழலுக்குப் போய்ச் சேருகிறது.

சுமார் 14 வயது ஆனபிறகே சினைப்பைகள் வளர்கின்றன. இதுவே ஓர் பெண் புஷ்பதியாகும் காலம். புஷ்பவதியாயும் சில வருடங்களுக்குப் பிறகே ஸ்திரீ புருஷர்களுடைய தாதுக்கள் கலந்து பிண்டம் உற்பத்தியாக வேண்டும். ஸ்திரீயின் தாதுவாவது புருஷன் தாதுவாவது கெட்டாலும் இருவகுப்பினரின் தாது கெட்டாலும் பிண்டம் உற்பத்தியாவதில்லை.

# நரம்பு மண்டலம்

நரம்பு சப்த தாதுக்களிலொன்று. இது தேகத்திலெங்கும் பரவியிருக்கிறது. சகல விதமான உணர்ச்சியும் நரம்புமூலமாக உண்டாகிறது. நரம்பு கெட்டால் எந்த உணர்ச்சியும் உண்டாவதில்லை.

நரம்புக்கு மூலஸ்தானம் தலையிலிருக்கும் மூளையும் அதிலிருந்து முள்ளந்தண்டுக்குள்ளே இறங்கும் நரம்புக் கொடியுமாகும். கண்ணால் காண முடியாத பூதக்கண்ணாடியினாலேயே பார்க்கக்கூடிய சூக்ஷமமமான ஓர் விதமான இலைப் போன்ற சாலங்களை மூளையிலும் முள்ளந்தண்டு நரம்புக் கொடியிலும் பார்க்கலாம். இவைகளை மூளையின் வெளிப்புறத்திலும் முள்ளந்தண்டுக் கொடியின் உட்புறத்திலும் காணலாம். இச்சாலங்கள் சாம்பல் நிறமுடையதாகையால் மூளையில் வெளிப்பாகம் சாம்பல் நிறமாயிருக்கிறது.

மூளையிலும் முள்ளந்தண்டு நரம்புக் கொடியிலுமிருக்கும் சாலங்களிலிருந்து கண்ணுக்குத் தெரியாத சூக்ஷமமான நார்கள் புறப்படுகின்றன. இம்மாதிரியான அநேக நார்கள் சேர்ந்து ஓர் பெரிய நாராகிறது. இவ்விதமான பல நார்கள் சேர்ந்து ஓர் பெரிய நரம்புக் கொடியாகிறது. நரம்பு தத்துவத்திலும் மனோ தத்துவத்திலும் அநேக நாட்களாக அனுபவமுடைய வைத்திய

நிபுணர்களே தெரிந்து கொள்ளக்கூடும். பல சாதனைகளின்றி இதையறிவது கஷ்டம். சாதாரண வாசகர்கள் தெரிந்து கொள்ளுமட்டும் சில விஷயங்களை இங்கு உரைப்போம்.

ஞானேந்திரிய கர்மேந்திரியங்கள், மனம், புத்தி இவைகளின் காரியங்களெல்லாம் நரம்பு மண்டலத்தின் சகாயத்தினாலேயே நடக்கவேண்டும். நரம்பு மண்டலம் கெட்டால் இவைகளெல்லாம் அல்லது இவைகளில் ஓர் பாகம் கெடும். மூளையிலிருந்தும் முள்ளந்தண்டு நரம்புக் கொடியிலிருந்தும் தோல் வரையில் பரவும் நரம்புகளின் மூலமாக நமக்கு எல்லா விதமான உணர்ச்சியுமுண்டாக வேண்டும். ஆனால் நரம்போடு மனம் கலக்காமல் எந்த உணர்ச்சியும் உண்டாவதில்லை.

சாதாரணமாக நம்மை ஒருவர் தொட்டால் நமக்குத் தெரிகிறது. குஷ்டம் முதலிய வியாதிகளின் நரம்பின் செய்கை கெடுவதனால் தொட்டால் உணர்ச்சியுண்டாவதில்லை. நரம்பு கெடாமலிருந்தும் நமது மனம் ஏதோ ஓர் இடத்தில் இலக்ஷ்யமாக வைத்த காலத்திலும் நமக்கு உணர்ச்சியுண்டாவதில்லை. தூக்கத்தில் மனதடங்கியிருக்கும் காலத்தில் ஒருவர் நம்மைத் தொட்டால் நமக்குத் தெரிகிறதில்லை. காதும், கண்ணும், மூக்கும் மற்ற இந்திரியங்களும் தமது காரியங்களைச் செய்யா. அப்படியே நரம்பையும் இதன் உணர்ச்சியையும் கெடுக்கும் ஔடதங்களை உபயோகிப்பதினாலும் இச்சாலங்கள் கெடும். முள்ளந்தண்டு நரம்புக் கொடியிலிருந்து தோலுக்கு போகும் ஓர் நரம்பை அறுத்தால் தோலின் அப்பாகத்தைத் தொட்டால் உணர்ச்சியுண்டாவதில்லை.

ஒருவர் தொடுவதையறிவதுபோல் சீதம், சூடு, எரிச்சல், நோய் என்னும் தோலின் கார்யங்களும் நரம்பினால்தான் அறிய வேண்டும். நரம்பு கெட்டால் இக் குணம் தோலுக்கில்லை.

கேட்பதும், பார்ப்பதும், ருசியறிவதும், வாசனையும் நரம்பின் குணங்களாகும். இந்த ஞானேந்திரியங்களில் ஒவ்வொன்றுக்கும் தனியே நரம்புண்டு. அதனதன் நரம்பு கெட்டால் அதன் காரியம் நடவாது. இந்த இந்திரியங்களின் மற்றக் கருவிகள், அந்தந்த இந்திரியத்தின் காரியத்திற்கு சகாயமாயிருப்பினும் நரம்பே முக்கியமான கருவியென வேண்டும்.



சகலவிதமான கர்மங்களும் நரம்பே செய்ய வேண்டும். தாதுக்களெல்லாவற்றிற்கும் தலையாக நிற்கும் நரம்பின்றி எக்காரியமும் நடவாது. கண்ணைத் திறப்பதும், மூடுவதும், ஆட்டுவதும், வாயைத் திறப்பதும், விழுங்குவதும், பேசுவதும், மூச்சு வாங்குவதலும், விடுதலும், இருதயத்தின் சுருங்குலும் விரிதலும் அன்னபானாதிகளின் சலனையும் அவைகளின் ஜீர்ணமும், மல மூத்திர விஸர்ஜனமும், ஸ்திரீ புருஷர்களின் ஜனனேந்திரிய காரியங்களும், கை கால்களை நீட்டுவதும், மடக்குவதும், ஆட்டுவதும், ஓடுவதும், நடப்பதும், உட்காருதலும், பிடிப்பதும் முதலிய எல்லா விதமான கையின் செயல்களும் நரம்புகளின் சகாயத்தினால்தான் நடக்க வேண்டும். இவைகளுக்குச் சம்பந்தப்பட்ட நரம்புகள், கெட்டால் இந்தக் காரியங்கள் நடக்கமாட்டா. மாமிசமும் மற்றத் தாதுக்களும், நரம்புக்குச் சகாயமாக இருத்தால் வேண்டும். நரம்பு சரியாக இருப்பினும் மாமிசம் முதலிய தாதுக்களுக்கு ஊனமிருந்தாலும் இக்காரியங்கள் நடவாது.

நரம்பு மண்டலத்திற்கும் மனோ புத்தியின் காரியங்களுக்கும் நெருங்கின சம்பந்தமுண்டு. முளையும் மற்ற நரம்புகளும் கெட்டால் புத்தியும் மனமும் கெடும். ஞானேந்திரியங்களாகிய காது மூக்கு முதலியவைகளின் சக்தி நரம்புச் சக்திதான். நரம்பின் சக்தி குறைந்தாலும் விபரீதமானாலும் இந்த இந்திரியங்களின் காரியங்கள் கெடும்.

ஒவ்வொரு ஞானேந்திரியமும் பரமாயிருப்பின் புத்தி கூர்மையாக இருக்கும். புத்தியும் அதன் விசாரணை செய்யும் சக்தியும் நரம்பினுடையதாகும். அப்படியே தைர்யம் வீர்யம், அடக்கம், சாத்வீக குணம் முதலிய அனோ குணங்களும் நரம்புக்குச் சேர்ந்தவைகள். எந்தக் காரணத்தினாலாவது முளை கெட்டால் மனமும் ஞானேந்திரிய, கர்மேந்திரியங்களின் செய்கைகளும் கெடுகின்றன.

மூளைக்காவது, முள்ளந்தண்டு, நரம்புக்கொடிக்காவது அடிபட்டால் மயக்கமும், பிரக்ஞை தவறுதலும், கை கால்கள் அசைதல், வாக்கு, மலமூத்திர விசர்ஜன முதலிய காரியங்களும் கெடுகின்றதாகப் பார்க்கின்றோம். விபரீதமான எண்ணங்களினால் மனமும் புத்தியும் கெடுவதாகவும் முளையும் நரம்புகளும்

கெடுவதாகவும் பார்க்கின்றோம். மூளையிலும் முள்ளந்தண்டுக் கொடியிலும் பலவித சக்திகளுடைய சக்கரகளுண்டு. ஹடயோகிகளில் தோன்றும் வினாதமான சக்திகளெல்லாம் இந்த நரம்புச் சக்கிரங்களில் அடங்கி இருக்கின்றன.

பிரம்மச்சரிய விரத்தினாலும் பிரணாயாமம் முதலிய தேகப்பயிற்சியினாலும் சுத்த யோசனையினாலும் சாத்வீகமான மிதாஹாரத்தினாலும் நரம்பின்பலம் விருத்தியாகும். ஸ்திரீ பூருஷர்கள் தமது பிரஹ்மச்சரிய விரத்தைக் கெடுத்துக் கொள்ளுவதனாலும், கள், சாராயம், காப்பி, டீ முதலிய லாகிரிப் பதார்த்தங்களை உபயோகிப்பதனாலும் அபரிமிதமான ஆக்காரத்தினாலும், ஸ்திரீ புருஷ போகத்தினாலும் துராலோசனைகளாலும் நரம்பின் பலம் குறையும். ஸ்தூல சரீரத்தின் பலத்திற்கும் மனோ புத்தியின் பலத்திற்கும் நரம்பின் பலமே மூல காரணமாகையால் நரம்பின் பலம் குறையாதவண்ணம் ஒவ்வொருவனும் எத்தனிக்க வேண்டும்.



# மனோ தத்துவம்

ஆரோக்கியமாக இருப்பதற்கும் நோயை வரவழைப்பதற்கும் மனமே, காரணமாகும். இதுவரையில் விவரித்துள்ள எலும்பு, மாமிசம், ரத்தம் முதலியவைகள் கூடிய ஸ்தூல சரீரத்திற்கும் மனதிற்கும் நெருங்கின சம்பந்தமுண்டு.

ஏற்கெனவே மனம் ஆனந்தமாக இருக்கும், நோயும் வியாதியுன் மனத்தினதன்று. தைரியம், வீர்யம், ஆனந்தம் மனத்தின் குணமாகும். ஆனால் சேர்க்கை தோஷத்தினாலும் அஞ்ஞானத்தினாலும் மனம் தன்நிலை தவறி துன்பப்படுகிறது. பயம், ஆசை, சந்தேகம், விபரீதம், சபலம், முதலியவைகள் மனத்தின் நீச குணங்களுக்கு நாம் வசமாய் துன்பப்படுகின்றோம்.

ஞானம் உதயமாகுங்கால் மனம் நமது வசமாகும். அப்பொழுதுதான் நமக்குத் துக்கமில்லை, வியாதியில்லை, நமது சங்கற்பங்களாலே நாம் சுக துக்கங்களை அடைகின்றோம். "நான் மூடன்: நான் சக்தியற்றவன்: நான் நோயாளி; நான் பாபிஷ்டன்; நான் எப்பொழுதும் துன்பத்தை அனுபவித்தே தீரவேண்டும்" என்றும் இத்தகைய நீச யோசனைகளினால் நாம் மூடர்களாயும் தைரியமில்லாதவர்களாயும், பலவீனர்களாயும், துன்பப்படுபவர்களாயும், நோயாளிகளாயும், கஷ்டப்படுகின்றோம்.

அற்ப ஜந்துவாகிய எறும்பையும், தேளையும் பாம்பையும், எலியையும் நாயையும் பார்த்து பயப்படுவதற்குக் காரணம் நமது அஞ்ஞானமே. பயமும் சந்தேகமும் நம்மை யமலோகத்திற்கு அனுப்புகின்றன. அற்ப நோய் வந்தாலும் அதை இடைவிடாமல் விபரீதமாக யோசித்து வருவதனால் நோய் பெருகுகிறது. நோய் அற்பமாயினும் அது தீராதென்று நம் எண்ணிக் கொண்டே வந்தால் அது அப்படியே முடிகின்றது. பெரிய நோயாயினும் அது அற்பமென்றும் அது தீருமென்றும் நாம் யோசித்துக் கொண்டே வந்தால் அதுவும் அப்படியே முடியும். பக்கத்து வீட்டில் பெரியம்மையாவது வாந்திபேதியாவது கண்டிருந்தால் அது நம்மைப் பீடிக்கும் என்ற பயமே நம்மை பாதிக்கின்றது.

ஒருவர் நமக்கு அன்போடு பால் கொடுத்த காலத்தில் அதை நாம் குடிக்கிற காலத்திலாவது குடித்த பிறகாவது அதில் விஷங்கலந்திருக்குமென்று நாம் விபரீதமாக யோசித்துக் கொண்டே வந்தால் அதனால் ஆபத்து சம்பவிக்கும். ஒரு வேளை ஒருவர் விஷம் கலந்து கொடுத்து உணவுப் பொருட்களை நாம் சந்தேகமும் பயமும் இல்லாமல் புசித்தால் அதில் ஆபத்தில்லை.

நம்பிக்கையே அனேக நோய் நிவாரிணிக்குக் காரணமாகும். நோயாளிக்கு நம்பிக்கையுள்ள வைத்தியனிடத்திலோ மந்திரவாதியினிடத்திலோ சிகிச்சை செய்து கொண்டால் நோய் தீருகின்றது. வைத்தியனாவது மந்திரவாதியாவது எவ்வளவு நிபுணனாயிருப்பினும் அவனிடத்தில் பக்தியில்லாவிட்டால் நோய் தீருவதில்லை.

விபூதியும், வேப்பிலையும், துளசித் தளமும், கங்கோதகமும் மஞ்சள் தண்ணீரும் நம்பிக்கையினால்தான் பலிக்கின்றன.

மனக்கவலையே அநேக தீராத நோய்களுக்கும் பைத்தியத்திற்கும் காரணமாகும். ஒருவனுக்கு ஓர் பெண்ணிடத்திலாவது பணத்திலாவது மற்ற ஏதேனுமோர் பொருளினிடத்தாவது இருக்கும் பலமான பற்றே அநேக நோய்களுக்குக் காரணம்.

பற்றற்ற மனமும், ராகம், துவேஷம், கவலை, பகை முதலியவைகளில்லாமல் சுத்தமான நிச்சிந்தையுடைய மனமும் சுக வாழ்க்கைக்கும் ஆசாபாசங்களால் தவிக்கும் மனம் துக்கத்திற்கும் ஏதுவாகும். அன்புடைய மனமே துன்பத்தை நாசப்படுத்தும்.

இவ்விதமான சூக்ஷ்ம மனோ தத்துவத்தை நன்குணர்ந்து வைத்திய சிகிச்சை செய்தல் வேண்டும்.



# சாகாக்கலை

## செத்தபின் முக்தி ஏது?

'ஓ' என்ற எழுத்துக்கும், அ, உ, (எண்ணில் எட்டு – இரண்டு) என்று எழுத்துகளுக்கும் பொருள் தெரியாதவர்கள் தமிழ் மொழியின் சிறப்பை அறியாதவர்கள். அப்படிப் பட்டவர்கள் அஞ்ஞானிகளென்று சித்தர்கள் சொல்லுகின்றனர்.

ஆயினும் புலவர்கள் தமிழ் மொழியைப் பற்றி பேசும் போது தமிழில் இயல், இசை, நாடகம் உள்ளன. வேறெம்மொழியிலும் இவை கிடையா! ஆகவே தமிழ் எல்லாமொழிகளுக்குள் சிறந்ததென ஆரவாரம் செய்கின்றனர்.

சிலர் தமிழ்மொழியே தெய்வமென்று வெத்துப் பாட்டு பாடுகின்றனர். அரசியல்வாதிகள் தங்கள் கிளர்ச்சிகளுக்கு அம்மொழியை ஓர் ஆயுதமாக உபயோகிக்கின்றனர்.

இயல், இசை, நாடகம் வேறு மொழிகளிலும் உள்ளதென்பதை அறிந்தாரில்லை. ஏனெனில் பிற மொழிகளை அவர்கள் ஆராய்ந்தார்களில்லை.

தமிழ்மொழி மிக மிக சிறந்ததென்பதில் ஐயமில்லை. ஆயினும் அதன் சிறப்பு அதில் ஆழ்ந்து புதைப்பட்டுக் கிடக்கும் ஓர் கலையினாலாகும். அதைப் பற்றி ஒரு சிலரே அறிவார்களென்பதை நாம் நிச்சயமாகச் சொல்லலாம். அக்கலையை அறியவே தமிழ் மொழியை கற்றல் வேண்டும்.

## சாகாக்கலை

வடமொழியிலும் இக்கலை புதைபட்டுக் கிடந்துள்ளது தமிழ்புலவர்களைப் போல் அதைப் பயின்றோர் அக்கலையைப் பற்றி ஆராய்ந்தார்களில்லை.

அறிஞர்கள் மரணமின்றி வாழலாமென்றும், அம்மரணத்தை சுலபமாக நீடுழி காலம் வரை தவிர்க்கலாமென்றும் உறுதி கூறுகிறார்கள். வேத, , புராணங்களின் சாரம் சாகாக் கலையை விளக்குவதாகும்.

**"உடம்பார் அழியின் உயிரார் அழிவார்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"**

என்கிறார் – திருமூலர்

"உடல் அழிந்தால், அதாவது, உடல் பிணமாக விழுந்தால், உயிர் அதனை விட்டுப் பிரிகிறதென்பதாம் உயிர் போனபிறகு உடல் பிணமென்னும் பெயரடைகிறது. உடலும் உயிரும் போனபின் ஒருவன் உண்மை ஞானம் பெற முடியாது. உண்மை ஞானத்தையடைய உயிரும் உடலும் வேண்டும். ஆகவே உடம்பை வளர்க்க ஓர் உபாயம் கண்டு கொண்டேன். அவ்வுபாயத்தைக் கொண்டு உடம்பை அழியா நிலைக்கு உயர்த்தினேன்" என்றார் திருமூலர்.

அது எப்படியெனில் உடலையும் உயிரையும் இணைத்து வளர்த்தேன் என்கிறார். இந்தப் பாடலின் பொருளை நாம் ஊன்றி சிந்திக்க வேண்டியுள்ளது. உடலும் உயிரும் போய்விட்டால் மெய்ஞ்ஞானம் அடைய முடியாதென்று அழுத்தம் திருத்தமாய் சொல்கிறார் திருமூலர்.

அவர் மூவாயிரம் வருடங்கள் உடலுயிரோடு வாழ்ந்தாரென்பது மரபு. அதில் நாம் சந்தேகம் கொண்டால் சைவ சித்தாந்தத்திலேயே சந்தேகங் கொண்டவர் களாவோம்.

இங்கு மற்றொரு பாடலைக் குறிப்பிடத்தக்கது

**"உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி**
**உடம்பிடை நின்ற உயிரை அறியார்**
**உடம்பொடு யிரிடை நட்பறியாதார்**
**மடம்புகு நாய்போல் மயங்கு கின்றாரே"**
– திருமூலர்

என்னும் பாடலில் நாம் அறிவது என்னவெனில் உடம்புக்கும் உயிருக்குமுள்ள நட்பை அதாவது இயற்கையின் சேர்க்கையை நாம் அறியாமற் போயின் நாய் போன்றவர் களாவோமென்று சொல்கிறார் திருமூலர். உடம்பு உடம்பைத் தழுவி என்ன பலன் என்கிறார். உடம்பினுள்ளிருக்கும் உயிரை அறிந்தாலல்லலா?



இப்படிச் சித்தர்கள் நூல்களில் பல பாடல்கள் நாம் காண்கிறோம். முழுக்க முழுக்க ராமலிங்க வள்ளலார் மரணமிலாப் பெருவாழ்வைப் பற்றியே வலியுறுத்தினார். சாவையும் பிறப்பையும் தவிர்த்திட விரும்பீர் வையகத் தேயுறு மரண வாதனையைத் தவிர்த்த வாழ்க்கையதே வாழ்க்கை என்றெல்லாம் பறை சாற்றினார்.

"உறியில் தயிருள்ளது: மத்தும் உள்ளது: கடைந்து வெண்ணெய் எடுத்து உண்ணாது வெண்ணெய் கலைந்து போக விடுகிறீர்களே! ஐயோ! காலன் வந்தால் இறந்துவிடப் போகிறீர்களே" என்கிறார் கருவூரார். கீழே பாருங்கள்,

**உறியிற் றயிரிருக்க வோர் மத்திருக்க**
**அறியாமல் வெண்ணெய்க் கலையும் நெறியாய்க்**
**கறந்து கொள்ளல் விட்டய்யோ காலனார் வந்தால்**
**இறந்து விடப் போறீ றினி – என்கிறார்**

செத்து விட்டால் சிவத்தை எங்கு பார்ப்பது? மக்கள் சவத்தையல்லவா பார்ப்பார்கள். ஆகவே சாவைத் தவிர்த்துத்தான் சிவ பாதமடைய வேண்டுமென்கின்றனர் சித்தர்கள்.

சாவானது இயற்கைக்கு கொடுக்க வேண்டிய கடன் எனச் சொல்லப்படுகிறது. அற்ப ஆயுளுடைய தாய் தந்தையின் ஏதேச்சையான சேர்க்கையின் காரணமாக இயற்கையின் நியதிப்படி தோன்றி தனக்கேற்ற இயற்கை உணவு கொண்டு வளர்ந்து, கடைசியில் இயற்கை தன் முழு கடனுக்காக அவனுடைய உயிரை கவர்ந்து கொள்ளும்போது இறக்கிறான்.

உடலின் சத்தும் அதன் உழைப்பும் சீக்கிரத்திலோ தாமதமாகவோ நிலை கொள்ளாது உருவத்தை அழித்து அதன் உறுப்புகளை வெவ்வேறாக்கும் மனிதனின் நிலையற்ற தன்மை வாழ்க்கையில் ஒரு வெறுப்பை உண்டு பண்ணுகிறது. இவ்வெறுப்பானது, தினமும் உலகத்தில் எங்கு நோக்கினும் காணப்படும். வாழ்க்கை போராட்டம் முதுமையின் கஷ்டங்கள்: சாவின் அவதி, இவைகளால் இன்னும் அதிகமாகிறது.

இக்கேடுகள் எல்லாம் வினைப்பயன் என்று சமாதானம் செய்து கொள்வது அறிவாளிக்கு எளிதல்ல, ஏனெனில் அதை எப்படி விளக்கினும் அனுபவித்தேயாக வேண்டியுள்ளது. சாவு

என்பது திடீரென வாழ்க்கையை முடிவு செய்வதை சிந்தித்தா "இந்த கோரமான், பயங்கரமான சாவை அடியோடு ஒழிக் முடியாவிடினும் தவிர்க்க முடியாதா." என்னும் கேள் அறிவாளிக்கு எழுகிறது.

இக்கேள்விக்கு சித்தர்கள் தான் அழுத்தம் திருத்தமா "முடியும், சாவு தவிர்க்கக் கூடியதே" என்று சொல்கின்றன உடலை வலிவு பெறச் செய்து அதாவது காயசித்தி செய் அதனால் மறுமலர்ச்சி உண்டாக்கி கால வரம்பின்றி சாவை தவிர்த்து உலகில் வாழலாம்: அல்லது உடலை சூக்குமமாக் பிரணவ தேகமாக்கி, ஞானதேகம் பெற்று பேரொளியில் கலந் ஆனந்தமயத்தில் நிறைவு பெறலாமென்கின்றனர். இதுவே மாற்றிப் பிறப்பதாம்.

இவ்விரண்டினுள் சாவு நீங்கிய நிலையில், சித்தர்கள் இவ்வுலகில் தங்களால் ஆகவேண்டிய காரியம் ஏதேனுமிருந்தாலொழிய தூல உடலுடன் இவ்வுலகிலை வாழ்வார்களேயல்லாமல் இரண்டாவதாக சொல்லப்பட்ட கடவுள் தன்மையை யடைவதையே விரும்புவார்கள்.

ஆகம உபநிஷத்துக்களின் கருத்துகளுக்கு ஏற்றவாறு மறுபிறப் உண்டென்பதை சித்தர்கள் ஏற்றுக் கொண்டாலும் தூல உடலை மாற்றி மறுமலர்ச்சி யடையச் செய்தவனுக்கே மேற்கூறிய நிலைகள் எய்துமென்றும் இயற்கைக் கடனான மரணத்தில் மோட்சமுண்டென்பவனுக்கு விடுதலை கிடையாதென்றும் கூறுகிறார்கள். இவ்வித மறுமலர்ச்சி பெற்று வாழ்பவர்கள் இருக்கிறார்களாவென்னும் கேள்வி நம்முள் உதிக்கிறது.

நம் நாட்டிலேயே சாவைத்தவிர்த்த ரிஷிகளும் முனிவர்களும் பலர் உள்ளனரென்பதை அறிந்தவர்களுக்கு மேற்படி கேள்வி உதிக்காது. ஆகவே பிறந்தோரெல்லாம் இறந்தே தீர வேண்டுமென்னும் மொழி தவறு என்பது நாம் உணரவேண்டியுள்ளது.

சித்தர்கள் கருத்தப்படி எவ்வளவு புனிதமான பிறப்பு எய்தினும் இறப்பின் பிடியில் அகப்பட்டால் பிறப்பு இறப்பென்னும் சுழலில் சிக்கி சுழன்று கொண்டேயிருத்தல் வேண்டும்.



**இருந்திருந் தேமமெல்லா மிறந்தபின் சவமேயாச்சு**
**திருந்திட நின்ற நந்திதிரும்பியும் பிறப்பானப்பா**
**பொருந்திடும் ஞானமின்றிப் போனவர் பிறப்பாரென்பார்**
**வருந்திடு மறிவின் வித்தை மாயத்தை காணார்தானே**
**மாயத்தைக் கண்டசித்தர்மதியதைப் பெருக்கிக் கொண்டு**
**காயத்திலிருக்கும்போது கர்த்தனைக்கலந்து கொள்வார்**
**நேயத்தை விட்டபோது நேர்சிவந்தன்னிற் சேரார்**
**மாயத்தைக் கண்டு சூட்சவாசியில் வாழுவாரே**

*(சுப்பிரமணியர் ஞானம்)*

என்பதை அறிக

உடம்பின் மறுமலர்ச்சியால் தான் மரணத்தைத் தவிர்க்க முடியும். இயேசுநாதர் வான் நோக்கி கிளம்பிச் சென்றதாக கூறப்படுவது ஒரு உண்மை; சித்தனின் அடையாளமாகும். அதைப்போன்றே வள்ளலாரும் பூட்டிய அறையிலிருந்து மறைந்தார்.

இதற்கு மாறான கருத்துள்ளவர்களின் கூற்றையும் நாம் கவனிக்கற்பாலது. இவர்களில் பெரும்பாலோர் சித்தர்கள் போலவே மறுபிறப்பை ஒத்துக் கொள்பவர்களே. ஆனால் பிறந்தவன் மரணத்தினின்று தப்பிக்க முடியாதென்றும், பிறப்பு இல்லாவிடில் இறப்பு இல்லையாகையால் சாகாதிருக்க வேண்டுமாயின், பிறவாதிருக்க வேண்டுமென்று வாதம் செய்கிறார்கள். ஆனால், நம் முயற்சியின்றியே, நாம் பிறவி எடுக்கிறோமே அதை எப்படி தவிர்ப்பது என்று கேட்டோமானால் அதற்கு அர்த்தமற்ற விளக்கங்களே வெளிவருகிறது. ஆண்-பெண் சேர்க்கையென்னும் பிறப்பின் வேரை அறுத்து உலகத்திலிருந்து பிறப்பை ஒழித்து சாவென்னும் பயங்கரத்திலிருந்து விடுவிக்கவும் முற்படமாட்டார்கள். ஆனால் அதற்கு மாறாக அவர்கள் உற்பத்தியில் அதிகமான வேதம் கொண்டவர்களென்றே சொல்ல வேண்டியுள்ளது. இன உறவினால் மறு பிறப்பை அடைந்து ஆத்ம ஞானத்தையடைந்து பிறகு உடலை விட்டு இறப்பதே மறுபிறவி எடுக்காதிருக்க வழி என்றும் சொல்லுகின்றனர்.

அதாவது ஒருவர் எவ்வளவு ஞானவானாயினும். அந்த ஜன்ம அவனுக்கு கடைசி ஜன்மமாயினும் அவன் மறுபிறப் எடுக்காதிருக்க தானாக வேண்டுமென்று சொல்கின்றார்.

ஆனால் இவ்வித முக்திநிலை இவ்வுலகத்தோர் காண கூடியதல்ல.

இக்கருத்துக்கு மாறாக உண்மை ஞானமடைந்தவனுக்கு தூ உடல் இல்லையாகையால் அவனுக்கு இறப்பில்லை பிறப்புமில்லையென்று அறிஞர்களாகிய சித்தர்கள் சொல்கின்றன இறந்த பிறகு சாவில்லாத ஓர் நிலை ஒருவர் அடைகிறானென்று வாதம் சித்தர்களால் முழுக்க முழுக்க புறக்கணிக்கப்பட்டதாகும் காரணம், ஒரு உடல் பிணமாக விழும்போது அதனுள்ளிருக்கு உயிர் முன் கூட்டியே வேறொரு உடலைப் பற்றி கொள்கிறதென்றும், இறந்தபிறகு மறு உடலில்லாமல் செய் கொள்வதென்னும் வாதம் வீண் வாதமென்று பொருளற்றதென்றும் சொல்கின்றனர்.

உலக அனுபவப்படி முதலில் பிறப்பில்லாவிடில் சாவில்லை ஆனால் இதற்கு மாறாக சாவில்லாவிடில் முன் பிறப் இருந்திருக்க முடியாதென்னும் கருத்து சரியில்லை. ஏனெனி ஜீவன் முக்தனாய் உடம்புடன் வாழ்ந்து பரமுக்தனாய் மறையு சித்தனுக்கு சாவில்லாவிடினும் பிறப்பு இருந்திருக்கிறது அன்றியும், இறந்தோரெல்லாம் பிறந்தவர்களாதலால் பிறந்தோரெல்லாம் இறப்பவர்களே வென்னும் வாதம் தவறானதாகும்.

இப்பிறவியிலேயே ஒருவன் மறுபிறவி அடையாத ஜீவன் முக்தனானாலும் பிறவி எடுத்த காரணத்தால் இறந்து படவேண்டுமென்று வைதீகர்கள் சொல்கிறார்கள். அவன் இப்பிறப்பில் செய்த சாதனைகள் சாவுக்குப்பிறகு முக்தியடை உதவும் என்றும் சொல்வர்.

சுத்த சித்த மார்க்கத்தின் படி அப்படிப்பட்டவன் முக்தனல்ல. சீவன் முக்தி ஒருவன் அடைவதென்பது இவ்வுடம்பு இருக்கும்போதேதான். அப்படிப்பட்டவனுக்கு மற்றொரு பிறவி இல்லாமை மட்டுமல்ல: நிச்சயமாக இவ்வுடம்பு இறவாநிலை அடைவதேயாகும்.



ஏனெனில் முக்தியடைந்தவன் உடலும் உயிரும் பிரிக்க முடியாதவாறு இணைந்திருக்கும். அவன் உடல் மற்ற பிராசிகளைப்போல் கஷ்ட நஷ்டங்களுக்கு அப்பாற்பட்டதாகும். அவன் தன் உடலை அமலமாக்கிக் கொண்டவன்: உடலை அமர தேகமாக்கிக் கொள்ளும் இரகசிய உபதேசத்தை தன் குருவிடம் பெற்றவன். அவன் இவ்வுலகத்தில் அதீதமான சூக்கும உடம்புடன் இருந்து பிறகு வெட்ட வெளியில் கலந்து ஆனந்தமயத்தையடைவான். உடலை பிணமாகவிட்டு பிறகு முக்தியடைவதே வழியென்று சொல்பவன், மேலே நாம் சொன்ன விடுதலையடைந்து ஆத்ம ஆனந்தத்தை பெறும் நிலையை அறிந்து கொள்ள முடியாது சித்தர்கள் கருத்தில் ஒருவன் எவ்வளவு அறிவாளியாயிருப்பினும் பிணமாக அவன் உடலை துறந்தவன் முக்தனாக முடியாததாம்.

நடைப்பிணங்களை மாமேதையென்றும், பேரறிஞனென்றும், ஞானியென்றும், மகானென்றும், மகா வீரனென்றும், அவர்கள் சாவினால் உலகத்துக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டமுண்டாகிவிட்டதென்றும் பேசும் போலிகள், கபடதாரிகள், மேற்சொன்ன விருதுகளின் உண்மைப் பொருளை அறியா மூடர்களென்று சித்தர்கள் சொல்வராயினர்.

ஒரு உண்மை முக்தன் உண்மை சித்தனாவான். அவன் மரணத்தை வெளிப்படையாக வென்றவன். பிறப்பு இறப்பு என்னும் சூலத்திலிருந்து விடுபட்டவனே உண்மை முக்தியடைந்தவனாக கொள்ளல் வேண்டும்.

இறக்கும் முன்னரே ஒருவனுக்கு மற்றொரு உடலில் வாசனை ஏற்பட்டு விடுகிறதென்பர். ஏனெனில் உயிர் புது உடம்பின் பற்றுதலான பிறகே பழைய உடம்பை விடுகிறது. தூல உடலால் காப்பாற்றப்பட்ட உயிர் தற்போது காவல் செய்யும் தூல உடம்பு காலகதியால் விழும் போலிருந்தால் தன் காவலுக்கு மற்றொரு தூல தேகத்தைத் தேடிக் கொள்ளாதிருக்காது.

ஒருவன் தன் வீட்டை காலி செய்ய வேண்டிய நிலை ஏற்படின் மற்றொரு வீட்டை அமர்த்திக் கொண்டு தானே முன் வீட்டை காலி செய்ய முடியுமென்கிறார் வள்ளலார்.

அசுத்த பொருளுக்கு என்றும் அழிவு உண்டு. சுத்தமானதற்கு அழிவில்லை. அசுத்தமான தூலத்தை அமிலமாக்கி அமிலமாகவிருக்கும் சூக்குமத்தில் தூலத்தை இணைக்கும்

தந்திரத்தை அறிந்து கொள்ள ஓர் உண்மை முக்தனின் உதவி அவசியமாகும். இதைத் தான் திருமூலர் உடம்பை வளர்க்கும் உபாயம் மறிந்தேனென்கிறார்: அதோடு நில்லாமல் உயிரையும் வளர்த்தேனென்கிறார். உடம்பொடுயிரிடை நட்பரியா தார் நாய்க்கு ஒப்பாவர் என்கிறார்.

உடம்பின் அசுத்த மாயை எவ்வளவு அழுக்கற்றதாயினும் அதன் இயற்கையான அழிவை தவிர்க்க முடியாது; மரணத்திற்கு உட்பட்டே ஆக வேண்டும். ஆனால் அப்படிப்பட்டவனுக்கு மறுபிறப்புகள் பல இல்லாமல் உண்மையான சித்தமார்க்க முக்தனை அடையத் தூண்டி சாவைத்தவிர்க்கும் வழியைக் காட்டுமென்க.

அசுத்தமாயை சுத்தமாயை நிலையை அடைந்ததும் மரணம் தவிர்க்கப்படுகிறது.

இவ்வித அழிவற்ற உடலை "பிரணவதேகமென்பர். அப்படிப்பட்ட உடல் தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளத் தகுதியாகிறது. பிரணவ தேகமுள்ளவனை ஜீவன் முக்தனென்றும் சொல்வர். இப்படிப்பட்டவன் அசுத்தமாயை நிறைந்த இவ்வுலகத்திலும், சுத்தமான தேவ உலகிலும் தொடர்புள்ளவனாவான். ஆனால் அவனுக்கு இவ்வுலக வாசனை சிறிது காலமே. ஏனெனில் அவன் நிரந்தரமான ஆத்ம விடுதலைப் பெற உள்ளவன் இந்த பரம முக்த விடுதலை நிலையில் அதிசுத்தமான ஒளிவீசும் உடலுடன் (ஞானதேகம்) இவ்வுலகத்தில் தொடர்பை முழுவதும் விட்டுவிடுகிறான். இவ்வுலகில் ஆத்ம ஞான மார்க்கத்தில் சாதனை புரிவோருக்கு உதவுவதற்காக அவ்வித முக்தன் பிரணவதனுவுடன் இருப்பதுண்டு. அது முடிந்ததும் தன் உடலுடன் பட்டப்பகலில் வெட்டவெளியில் கலந்து மறைந்து விடுகிறான்.

மனித உடல் சுத்தியாகி புதியதொரு சரீரமாக மாறி சுத்தமான உயிருடன் கலந்தவுடன் சாவு தவிர்க்கப்படுகிறது. உடலும் உயிரும் வெவ்வேறாக இருக்கும் வரையில் மறுபிறப்புக்கு அந்நிலை வழிதேடும் வகையில் அமைகிறது.

செத்தவன் சாகா நிலையடைகிறனென்று சொல்வது மடமை. உயிர் என்பது மரணமற்றது. எப்போதும் அது சாகாது. உடலை விட்டுப்போன உயிர் சாகா நிலை அதாவது முத்தி அடைகிறதென்பது முரண்பாடான பேச்சு, ஆகவே, உடலை



அமலமாக்கி உயிருடன் பிணைத்து ஒன்றாக்கி மறுமுறை இரண்டும் பிரியாத வண்ணம். அதாவது மரணத்தை தவிர்ப்பதே சித்த முறையாம்; உண்மை முக்கதி நிலையாம்.

'பாவத்தின் பரிசு மரணம். மரணம் ஓர் சோதனை' யென்கிறார் வள்ளலார். மரணமடைந்தவன் பாவ புண்ணியம் என்னும் இவ்வினைக்குட்பட்டவனாகும். இவ்விரு வினைனையும் அனுபவிக்க அவன் உயிர் மற்றொரு உடலைப் பற்றியேயாக வேண்டும். அப்படி இருக்க இறந்து பட்டவன் மோட்சமடைகிறானென்னும் கூற்று விவேகமற்றது.

ஆகவே மரணமற்ற நிலையை அடைய சில சாதனங்கள் அவசியமாகின்றன. அந்தச் சாதனங்கள் யாவை? எப்படிச் செய்வது?

ஆசையற்ற இடமே அத்வைதம் உலக இன்ப துன்பங்பளிலுள்ள ஆசாபாசங்கள் அற்றுப்போக கற்பம் உண்ணவேண்டும். உடலை அமமலமாக்கின் இருள்தேகமான இவ்வுடலுள்ள அழுக்குகள் வெளியேற்றப்பட்டு ஜீவ அணுக்கள் கட்டுப்படுகின்றன. புத்தம் புதிதான சீவ அணுக்கள் உடலில் பரவுகின்றன மனம் தெய்வீகத்தில் திசை திரும்புகிறது அசுத்த உடலினால் அதாவது இருள் தேகத்தினால் நவதுவாரங்கள், கபத்தினால், முடப்பட்டு, தசவாவு தன்னிலையில் இயங்காது மனோசஞ்சலகளை உண்டாக்குவதல்லாமல் ஆசாபாசங்களில் ஆசையைத் தூண்டி சுகதுக்கங்களை அனுபவிக்க நேரிடுகிறது. சுத்த சரீரமுடையவர்களுக்கு இவ்வித சலனங்கள் உண்டாகாது ஒரு கால் பூர்வ வாசனையால் உண்டானாலும் ஒரு நிமிடத்தில் தன் உண்மை நிலையை உணர்ந்துவிடுகிறான். தன்னை தான் உணர்ந்து ஆசாபாங்களில் தடுக்கி விழமாட்டான். அப்படிப்பட்டவன் எப்போதும் சிவமோனத்தில் லயிக்கிறான். அக் காரத்தால் ஜீவ அணுக்கள் தெய்வீகத் தன்மையடைகிறது. தான் நினைத்தகாரியம் முடிகிறது. தேகம் பல மாறுதல்கள் அடைந்து பிரணவ தேகமடைந்து ஞான தேகம் பெற்று ஞான சித்தியடைகிறான். ஒருவனுக்கு ஞானதேகம் கிட்டினால் ஞானசித்தி கிட்டுவது சுலபமாகிறது வெறும் லோகோ ஞானமுடையவன் அல்லது சாஸ்திர ஞானமுடையவன் மிருகங்களைப் போல் பசி, மூப்பு, மரணம், மறுபிறப்பு முதலிய சுழலில் சிக்கி அவதியுகிறான். மரணத்தைக் கொல்லும் சக்தி அவனுக்கில்லை; மரணம் அவனைக் கொல்கிறது. எவ்வித சித்தியும் அவன் பெறமுடியாமல் சாகிறான்.

இவ்வித தேவநிலையடைய ஆங்காங்கு சுற்ற வேண்டாம் இருந்த இடத்திலிருந்தே அதைப் பெறலாமென்கிறார் குதம்பை சித்தர்.

**“இருந்தவிடத் திலிருந்தே யறியாமல்**
**வருந்தித் திரிவதென்னோ - குதம்பாய்**
**வருந்தித் திரிவதென்னோ**
**காசி ராமேசுரம் கால்நோவச் சென்றாலும்**
**ஈசனைக் காணுவையோ - குதம்பாய்**
**ஈசனைக் காணுவையோ”** - என்பதைக் காண்க.

அதற்கு மாறாக உடல் அமலமடைந்தவனுக்கு பல விதமான சித்திகள் தானாகவே உண்டாகின்றன. அஷ்டமாசித்திகளும் பெறுகிறான். உடலின் தோற்றம் முதலில்எல்லோரைப்போல் தோன்றினும் பலவித ஆச்சரியமான மாறுதல்கள் உட்புறத்தில் ஏற்படுகின்றன. வெளித் தோற்றத்திலும் சில மாறுதல்களைக் காணலாம். நரை, திரை மாறும் பழைய நகங்கள் சுழன்று புதிய நகங்கள் தோன்றும். கைகால்களில் சட்டை கழலும். இம்மாறுதல்கள் உடலில் புத்தம் புதிய சீவ அணுக்களின் இயக்கத்தால் ஆவனவாகும். இம்மாறுதல்கள் கர்ப்பா சயத்தில் நேரும் மாறுதல்கள் போன்றது.

இப்புது அவயவங்களின் உதவியாலும் எளிய சாதனைகளின் உதவியாலும் தூலம் சூக்குமத்திலும், சூக்குமம் அதி சூக்குமத்திலும் ஒன்றிலொன்று அடங்கியிருக்கும் அழியும் உடலை அழியாததாக செய்யும் வழி அசாதாரணமானதும் இரகசியமானதுமாகும். இதனால் உடற்கூறுகள் சுத்தியாகி, தம் இயற்கைத் தொழில்களிலிருந்து சிறிதுசிறிதாக விடுபட்டு உலகப் பொருள்கள் எதுவும் தேவையற்றதாகிவிடும். இவ்வித மாறுதல்கள் ஒன்றின்பின் ஒன்றாய் அடைந்து அவன் உடல் பார்வைக்கு தூவமாய் தோன்றினாலும் நிழல் விழாது; அவன் கால்கள் பூமியில் படாது. ஸ்பரிசத்துக்கும் அப்பாற்பட்டதாகிவிடும். கடைசி நிலையில் பாமர மக்களின் கண்களுக்கு புலப்படாத ஆதி சூக்கும தேகமாகிவிடுகிறது.



ஒருவன் ஜீவன் முக்தனாகி விட்டானென்றும். மறு பிறப்பில்லையென்றும், அதே சமயத்தில் அவன் செத்துத் தானாக வேண்டுமென்றும், பாமர மக்கள் சொல்லும் கூற்று மடமையாகும்! இப்படிப்பட்டவர்கள் “உண்மையை அறிந்துகொள்ள முற்படாமல் மனோ சாந்திக்காக அதாவது மரணத்திற்கேற்ற வேதாந்தம் சித்தாந்தங்களை வகுத்துக் கொண்டவர்களாவரென்று” சொல்லவேண்டியுள்ளது. மரணமற்ற நிலையை அடைந்தாலொழிய, விடுதலையென்பது வெகுதூரமாகும். விடுதலையடைந்த சித்தன் தன் தூல உடலுடன் மறு முறையும் தோன்றக் கூடிய சக்தி வாய்ந்தவன். அகத்தியர் அவ்விதம் தோன்றியவரென்பது நூல்கள் மூலம் அறியலாம்.

உயிர் உடலின் உதவியின்றி வாழ முடியாது. ஒரு உடலை விடுமுன் மற்றொரு உடலை பற்றித்தானாக வேண்டும். அதேபோல் உடல் உயிரின்றி வாழ முடியாது. ஆகவே ஒரு உடல் விட்டு மற்றொரு புதிய உடலைப் பிடித்து பசி, பிணி, மூப்பு, சாக்காடு என்னும் கொடுமைகளை இடையறாது அனுபவிப்பதைக் காட்டிலும் இப்போதுள்ள உடலையே அமலாக்கி சுகதுக்கங்களை ஒழித்துக் கட்டுவது அறவாளி செய்யும் காரியமல்லவா? உயிர் எப்பொழுதுமே புதியதோர் உடலைப் பற்றிக் கொள்ளும் சுபாவம் உடையது. அழிவற்ற உடலை அடையும் போதுதான் அச்சுபாவம் அழிகிறது. ரூபம் இருந்தால்தான் உயிர் தன் சுபாவங்களை வெளிப்படுத்த இயலும். ஆகவே ரூபமற்ற உயிர் உயிரில்லாத உயிராக இருக்கவேண்டும். இந்நிலை மடமையும் பொருளற்றதும் ஆகும்.

உயிர் மற்றொரு உன்னதமான உடலை அடைய வேண்டிய அவசியம் இருந்தாலொழிய, புதிய உடலைத் தேடி அலையாமல் கையில் கிடைத்த உடலிலேயே நிரந்தரமாக மரணமற்று தங்கிவிடுவதே உண்மை முக்திநிலையாகும். சரியான முயற்சியினால் இது சித்திக்கும். சாவை வெல்லாமல் முக்தியடைவேனென்று ஒருவன் சொல்வானேயானால் அவன் தன்னைத்தான் ஏமாற்றிக் கொள்பவனாவான்.

சாவினால் மறுபிறப்பு உண்டாகிறது. ஆனால், பிறப்பினால் சாவைத் தவிர்க்கும் வழிவகைகள் உண்டு. சரியான பாதையில் முயற்சித்தால் சித்திக்கும்.

சாமவேதத்தைச் சார்ந்த பிரம்மஜாபாலமென்னும் உபநிஷத்தில் பின்பகுதியில் சாகாக் கலையினால் உடல் மாற்றம் செய்து அடையும் முக்திநிலையைப் பற்றியும் அதற்கு வழிவகைகளும் சொல்லப்பட்டிருப்பதாக அறிஞர்கள் கூறுகிறார்கள். சுத்தமார்க்கத்தைக் கூறும் முப்பத்திரண்டு உபநிஷத்துக்களில் முன்பகுதி பின்பகுதியென்று பிரிக்கப்பட்டு பின்பகுதி செயல் முறையை விளக்குவதால் அதை சுத்த மார்க்கத்தின் வழிவந்த சீடர்கள் தவிர, மற்றவர்க்கு புரியா வண்ணம் சிலேடை மொழியில் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இவைகள் நான்கு வேதங்குட்பட்டதாயினும் இம் முப்பத்திரண்டு உபநிஷத்துக்களும் தனி வழியில் பங்கீடு செய்யப்பட்டுள்ளது.

# மரணத்தைத் தவிர்க்கும் மருந்து

'தவிர்க்க முடியாததை தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்,' 'ஆறிலும் சாவு, நூறிலும் சாவு' பிறந்தவன் இறந்துதானாக வேண்டும், என்றெல்லாம் பாமர மக்கள் பேசிக் கொள்ளுவது எல்லோரும் அறிந்ததே. இதற்குக் காரணம் "சாகாக் கலை" என்பதொன்று இருப்பது பலருக்கு ஓரணுவளவு கூடத் தெரியாது; கேள்விப்பட்டதும் கிடையாது. அப்படி ஒரு கலை உள்ளதென்று கேள்விப்பட்டவர்கள் கூட அது சித்தர்களுக்குத்தான் உகந்ததெனவும் அதேதோ ஜாலவித்தையென்றும் எண்ணி சாகா நிலையைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்காமல் விடுகின்றனர்.

தவிர, வைதீகர்கள், வேதாந்திகள் எனப்படுவோரும் மேடைகளில் தாங்கள் எழுதும் நூல்களில் சாகும் வேதாந்தத்தைத்தான் பேசுவர்; எழுதுவர்; உடலைப் பிணமாக விட்டு உயிர் நீங்கிய பிறகுதான் முக்திநிலை அடையலாம் என்பது அவர்களின் சித்தாந்தம். இவர்களின் வாதம் சித்தர்களின் கருத்துக்கு புறம்பானதுமல்லாமல் முழு மூடத்தனமாகும்.



மேல்நாட்டு அறிஞர்களான ஸாக்ரடீஸ், பார்சல்செஸ், ஹெர்மஸ், பேசில் வாலன்டைன், அரிஸ்டாட்டில் முதலியவர்கள் சாகாக்கலையைப் பற்றி எழுதியுள்ளனர். அவர்களில் பாரசல்செஸ் என்பவர் சாகா நிலையை அடைந்தவர். இவர்களின் நூலோடு இந்நூலை ஒப்பிட்டால் இது அற்பமாகத் தோன்றுமென்பதில் ஐயமில்லை. ஆனால் அவர்களைக் காட்டிலும் எனக்கு தனிப்பட்ட வாய்ப்பு ஒன்று உண்டு. தமிழ் மொழியில் இச் சாகாக் கலையைப் பற்றி சித்தர்கள் எழுதி வைத்த புதைபொருளின் மாணிக்கத்தை ஆராய்ச்சி செய்வதில் எனக்குள்ள வாய்ப்புதான்.

இந்நூலில் காணும் சில அழுத்தம் திருத்தமான கருத்துகள் என்னுடைவையல்ல; எல்லாம் சித்தர்களின் கருத்துகள்; இந்நூலில் மேநாட்டு அறிஞர்கள், நம் நாட்டு அறிஞர்களின் கருத்துகளை என் அறிவிற்கெட்டிய அளவில் சுருக்கமாக எழுதியுள்ளேன்.

நான் நீதித்துறையில் பணியாற்றி, ஒய்வு பெற்று சொற்ப உபகார சம்பளம் பெறுபவன். வெகு சிலரே விரும்பி வாங்கிப் படிக்கக்கூடிய இவ்வித நூலை வெளியிட்டு அடையும் நஷ்டத்தை தாங்கக் கூடியவனல்ல. ஆயினும் யாராயினும் ஒருவர் இந்நூலால் நன்மையடைவார்களேயாயின் சாகாக்கலையைப் பற்றி மக்களிடையே பரப்ப வேண்டுமென்ற என் தீவிர குறிக்கோள் பயனடைந்து விட்டதென்னும் மகிழ்ச்சியை என் பொருள் நஷ்டத்துக்கு ஈடுகட்டிக் கொள்வேன்.

நம் நாட்டு மருத்துவத்தில் சிறு வயதிலிருந்து எனக்கு கவர்ச்சியுண்டு. கடுமையான சரும நோய்கள், வயிற்றுக் கோளாறுகள் முதலியவைகளை வியக்கத்தக்க அளவில் தீர்க்கும் சில நாட்டு மருத்துவர்களை சிறு வயதிலிருந்தே பார்த்து வந்துள்ளேன். இவ்வித மருத்துவர்களின் என் அன்னையும் ஒருவர். இக்கவர்ச்சி நாளடைவில் இம் மருந்தில் ஆராய்ச்சி செய்ய வாய்ப்பை ஊக்குவித்தது.

நம் நாட்டு மருத்துவத்தில் சித்த, ஆயுர்வேதா, யுனானி என மூன்று வகையுண்டு. சித்த வைத்தியம் தமிழ் மொழியில் சித்தர்களால் எழுதப்பட்டதாகும். பசி, பிணி, மூப்பு, சாக்காடு,

என்னும் பயங்கர நிலைகளிலிருந்து தப்பிக்கும் வழிவகைகளை சித்தர்கள் வகுத்தனர். ஆயுர் வேதம் வடமொழியில் எழுதப்பட்டதாகும், அதுவும் ஓரளவுக்கு சாகாக் கலையை பிரதானமாகக் கொண்டதாகும். மூன்றாவதான யூனானி மருத்துவம் உருது மொழியில் எழுதப்பட்டதாகும். மொகலாயர் இந்நாட்டை ஆண்டு கொண்டிருந்தபோது அரேபியா நாட்டிலிருந்து இங்கு வந்த ஹகீம்களால் எழுதப்பட்ட மருத்துவமாகும். தமிழன் என்ற காரணத்தால் நான் தமிழ் மொழியிலுள்ள சித்தர் கலையைப் பற்றி வேண்டிய வாய்ப்பேற்பட்டது.

உண்மை முக்தி நிலையென்னும் சாகாக்கலை ஆண்டவன் அருள் பெற்றவர்க்கே வாய்க்குமென்க. தன் அடியார்களுக்கென ஆக்கிப் படைத்த அமிர்தம் ஒன்று உண்டு. ராமலிங்க அடிகள் அதை அமுதமென்றும் தெய்வ மருந்தென்றும் சொல்லியுள்ளார். அவர் ஆனந்த களிப்புடன் பாடிய பாடல்களை கவனிக்கற்பாலது.

**நல்லமருந் திம்மருந்து - சுகம்**
**நல்கும் வைத்திய நாத மருந்து**
**அருள்வடிவான மருந்து - நம்முள்**
**அற்புதமாக அமர்ந்த மருந்து**
**இருளற ஓங்கு மருந்து - அன்பர்க்**
**கின்புறுவாக இருந்த மருந்து (நல்ல)**

**மாலயன் தேடும் மருந்து - முன்னம்**
**மார்க்கண்டனைக் காக்க வந்த மருந்து**
**காலனைச் சாய்த்த மருந்து - தேவர்**
**காணும் கனவிலும் காணா மருந்து (நல்ல)**

**வாய்பிடியாத மருந்து - மத**
**வாதமும் பித்தமும் மாய்க்கும் மருந்து**
**நோய்ப்பொடி யாக்கும் மருந்து நாம்**
**நோக்கிய நோக்கில் உள்நோக்கும் மருந்து (நல்ல)**



**பெண்ணாசை தீர்க்கும் மருந்து - பொருள்**
**பேராசையெல்லாம் பிளக்கும் மருந்து**
**மண்ணாசை தீர்க்கும் மருந்து - என்றும்**
**வல்ல மருந்தென வாழ்த்தும் மருந்து (நல்ல)**

**கோமளம் கூடும் மருந்து - நலம்**
**கொடுக்க துவஜம் கட்டி கொண்ட மருந்து**
**நாமளவாத மருந்து - நம்மை**
**நாமே யறியும் படி நண்ணும் மருந்து (நல்ல)**

**மூவர்க்கறிய மருந்து - செல்வ**
**முத்துக்குமரனை யீன்ற மருந்து**
**நாவிற் கினிய மருந்து - தைய**
**நாயகி கண்டே தழுவும் மருந்து (நல்ல)**

இவ்வமிர்தத்தை உண்டவனுடைய உடலும் உயிரும் பிணைக்கப்பட்டு சாகாநிலையை அவன் அடைகிறான்.

இந்நிலை அடைந்த குரு ஒருவனுக்குக் கிடைத்தால் சாவை எளிதில் அகற்றி விடலாம். ஒவ்வொரு மனிதனும் சாவைத் தவிர்ப்பதையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டுமென்பது சித்தர்களின் அவா.

மேல்நாட்டு அறிஞர்கள் இவ்வமுதத்தை வேதாந்த கல் (Philosopher's Stone) என்கின்றனர். இதை 'தெய்வீக நீர்' என்றும் சொல்வர். இதை சாப்பிடின் காலவரம்பின்றி சாவைத் தவிர்க்கலாமென்று சொல்கின்றனர். இப் பெரியார்களின் உயர்ந்த மொழிகளும் நம் நாட்டு சித்தர்களின் மொழிகளும் என்னை இக்கலையில் ஆராய்ச்சி செய்யத் தூண்டிற்று.

சித்தர்கள் வாழ்ந்த காலம் வரையறுத்து சொல்ல முடியவில்லை. குறிப்பிட்ட காலத்தில் வாழ்ந்தவர்களென்று சொல்வதும் தவறு. ஏனெனில் அவர்கள் எப்போதும் எக்காலமும் வாழ்பவர்கள். மற்றும் அவர்கள் பிறந்த இடம், வாழ்ந்த இடம் முதலியவைகளைப் பற்றி குறிப்புகள் எழுதவில்லை. ஆனால் நாம் அதற்காக வருந்த வேண்டியதில்லை.

ஏனெனில் அவர்கள் தங்கள் பொன்மொழிகளை சீடர்கள் மூலமாய் ஓலைச் சுவடிகளில் பதித்து வைத்தனர். ஆர்வமுள்ளவர்களுக்கு அவை பயன்படக்கூடிய முறையில் ஆக்கி வைத்தனர்.

நாம் மேலே குறிப்பிட்ட பாரசெல்ஸஸ் என்பவரைப் பற்றி குறிப்பாக அறிய வேண்டியுள்ளது. அவர் ஒரு ஞானசித்தன். அவர் 400 வருடங்களுக்கு முன் ஜெர்மானிய நாட்டில் பிறந்தவர். அவர் போற்றுதற்குரிய ரஸவாதி, மருத்துவர்; பசி, பிணி, மூப்பு, சாக்காடை வென்றவர். அவர் ஜெர்மானிய மொழியில் விரிவான நூல்கள் சாகாக்கலையைப் பற்றி எழுதியுள்ளார்.

நம் நாட்டு அகத்தியர், போகர், திருமூலர், கொங்கணவர் முதலிய சித்தர்களின் கருத்துகளோடு பாரசெல்ஸஸ் அவர்களின் மொழிகளை ஒப்பிட்டுப் பார்ப்பின் எல்லா நதிகளும் இறுதியில் கடலில் சேருவதுபோல் இவர்கள் யாவரின் மொழிகளும் ஒன்றாயிருப்பதைக் காணலாம்.

ஞானி என்பவன் சித்தன். சித்தன் என்பவனே ஞானி. ஆனால் ஞானிக்கும் சித்தனுக்கும் வேறுபாடு செய்வது அவ்வித்தையின் காரணமாகும். மரணத்தைத் தவிர்த்து ஞானசித்தி பெற்றவனே ஞானி; அறிஞன். அதாவது உண்மை நிலையையடைந்தவன். இதேபோல் ஞானி வேறு சீவன் முக்தன் வேறு என்றும் மக்கள் சொல்வது அறியாமையாகும்.

பக்தி, கர்மம், ஞானம் என யோகம் மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நெற்றியில் சமயக்குறி அணிந்து, வேதபுராணங்களை பிறர் காதில் விழும்படி படிப்பது, விக்கிரக ஆராதனை செய்வது போன்ற காரியங்களை செய்பவன் பக்தி யோகியென்றும், மண், பெண், பொன் முதலிய முச்சூலத்தில் உழன்றுகொண்டு இருப்பினும் தன் வர்ணத்துக்குரிய (பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்ர என்னும் நான்கு வகை வர்ணங்கள்) சடங்குகளை செய்பவனை கர்மயோகியென்றும், காவியுடுத்தி, தாடிவளர்த்து, தலையை மழுங்க சிரைத்து வேத சாத்திரங்களில் கேவலம் சாத்திர ஞானம் பெற்றவனை அல்லது பாமரமக்களை முட்டாளாக்கும் தந்திரங்களைக் கற்றவனை ஞானியென்றும், மகான் என்றும் மக்கள் புலம்புவதைப் பார்த்து சித்தர்கள் சிரிக்கலாயினர். மேற் சொன்ன மூவரும் தன்னைத்தான்



ஏமாற்றிக் கொள்பவர்கள்; உண்மையை அறியாத மூடர்கள் என்று முக்தர்கள் சொல்லலாயினர்.

**மூடனென்ற குருவப்பா ஆசானென்று**
**முட்டோடே வந்தவன் போல் மெச்சிக் கொள்வான்**
**பாடனென்ற பேரைப்போற் படித்துக் கொள்வான்**
**பண்பில்லாப் பாப்பாலே பகர்வான் மட்டை**

**கேடனென்ற ஏடுகற்ற பெயர்களெல்லாங்**
**கெதியாக நம்பியவன் கேள்விகேட்டு**
**நாடனென்ற சிவஞானம் வந்தாப்போலே**
**நலமாக தர்க்கித்து நடப்பான் பாரே**

**பாடலென்ற தமிழெல்லாம் பாடம் பண்ணிப்**
**பசப்பியே ஆண்டியர்கள் படித்துக் கொள்வார்**
**ஆடலென்ற ஆட்டமெல்லா மாடிக் கொண்டு**
**அழுக்கறுக்க மாட்டாம லலைந்தார் பாவி**

**நாடலென்ற சுயவாக்கு சொல்ல மாட்டார்**
**நான் பெரியோனென்று மெத்த நாட்டாஞ்செய்வார்**
**தேடலென்ற அறிவுநீதாற் சுயமே சொல்வான்**
**தெரியாத மூடனைத்தான் குருவென்பாரே –**

என்பதைக் காண்க

(சுப்பிரமணியர் சுத்த ஞான சைதன்யம்)

பக்தியென்பது ஆண்டவனிடத்தில் சிரத்தையென்று பண்டிதர்கள் விளக்கம் சொல்கிறார்கள். சிரத்தை என்பது நாம் மேலே கண்ட கபட நாடகங்களாகவே முடிகின்றன. சாகாநிலையடைந்து ஞான சித்தி பெறுபவனே ஞானியென்று மேலே சொன்னோம். மூன்றுவித யோகங்களைக் கொண்டு சாகாநிலையடைந்து ஞானசித்தி பெறுவதே ஓர் அறிஞனுடைய முயற்சியாகும். சாகாக்கலையில் சிரத்தை வைப்பதே பக்தியோகம். உண்மை நம்பிக்கை கிடைத்தவுடன் அக் கலையை அடையும் மார்க்கத்தில் ஈடுபடுவதே கர்மயோகம்; கர்மத்தால் சாகா உடலை மாற்றியமைத்து சூட்சுமமாக்கி ஞானதேகம் பெற்று ஞானசித்தியடைவதே ஞானயோகம்.

யோகம் என்றால் ஒன்றுடன் மற்றொன்றை சேர்ப்பதாகும். அவ்விரண்டு என்ன? உடல். உயிர், உடலையும், உயிரையும் பிணைப்பதே யோகம்; பிறகு அதை சூட்சுமமாக்கி மெய் என்னும் வெட்ட வெளியில் கலப்பதே யோகத்தின் முடிவு.

வைதீகத்திலேயே பிறந்து வளர்ந்து, வைதீகர்கள் மேடைப் பேச்சுகளைக் கேட்டு புராணங்கள், இதிகாசங்கள் முதலிய கட்டுக் கதைகளைப் படித்து, வைதீகத்திலேயே ஊறிப் போயிருக்கும் நமக்கு சித்தர்கள் சொல்லும் உண்மை முக்தி நிலை ஏதோ ஒரு சீட்டுக் கவிதைபோல் தோன்றுவதில் வியப்பொன்றுமில்லை.

இந்நூலின் சொல்லப்பட்ட சுத்த சித்த சன்மார்க்கம் ஒரு கைக்கெட்டாத தனிப்பட்ட மார்க்கமல்ல. இதுவே மெய்ப்பொருளை அறிவிக்கும் உண்மை வழி. மஹரிஷிகள், முனிவர்கள், முக்தர்கள் எனப்படுவோரெல்லாம் அம் மார்க்கத்தைக் கடைப்பிடித்தவர்களே. அவர்களே ஞான சித்தர்கள் என்பதை வாசகர்கள் மனதில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கோரமான மரணத்தை யடைபவனையும் ஞானியென்று உலகோர் போற்றுவது அறிவீனமாகும். சாஸ்திர ஞானம், லௌகீக ஞானம் பேரளவுக்கு பெற்றவனாயினும் அவன் செத்தால் ஞானியல்ல. அவன் பெயர் பிணம்.

உடம்பை குருவின் உதவியால் மறுமலர்ச்சியடையச் செய்து காலவரம்பின்றி சாவைத்தடுத்து உலகத்தோடொத்து வாழலாம். சாதாரணமாய் முக்தி நிலையடையப் பாடுபடும் விவேகிகளுக்கு வழிகாட்டுவதற்காகவே இவ்வுலகத்திடை சித்தர்கள் சஞ்சரிப்பர். முக்திநிலையடைந்த பின்னும் அவர்கள் எங்கும் போய்விடவில்லை. தாங்கள் உலகத்துக்கு செய்ய வேண்டிய நன்மைகள் ஏதேனுமிருப்பின் அம்முக்தர்கள் இச் சாமாத்திரத்தில் காரியானுகூலத்திற்குத் தகுந்த தூல ரூபத்தை அமைத்துக் கொள்வர். அந்நிலையையே அவதாரம் என்று மக்கள் சொல்வர். சாவின் பின் மோட்சம் என்று வைதீக மார்க்கத்தவர்களின் கூற்று உண்மை. முக்தி நிலை தெரிந்தவர்களுக்கு கேலிக் கூத்தென்பது விளங்கும். மோட்சமென்பது ஜீவாத்மா, பரமாத்மாவிடம் போய் ஐக்கியமாவதென்று வைதீகர்கள் சொல்கின்றனர். உடலை விட்டு வெளியேறிய சீவாத்மா, தன் வினைகளை பூர்த்தி செய்துகொள்ள மறு உடலை எடுத்தாக வேண்டிய நிமித்தயமிருக்கும்போது அது பரமாத்மா வென்றும் வெட்ட வெளியில் எப்படி கலக்க முடியும்.



செத்தவர்கள் வைகுண்ட பதவி அடைந்தனர். கைலாய பதவி அடைந்தனர் என்று மக்கள் பிதற்றுவதெல்லாம் உபசார வார்த்தைகளேயாகும். வைகுண்டம் கைலாயம் என்ற இடங்களில் சிம்மாசனத்தில் யாரோ ஒருவர் அமர்ந்து கொண்டிருப்பது போலும், அவர் திருவடியை செத்தோர் போய் அடைவரென்றும் மக்கள் மொழியின்படி பொருள்படுகிறது. அங்கு உட்கார்ந்திருப்பவர் யார்? நாராயணன் என்றும் சிவன் என்றும் சினிமாக்களிலும் நாடகங்களிலும் அட்டைப் படங்களிலும் பார்க்கும் வேடதாரிகளின் உருவங்கள் போன்றதென பாமர மக்கள் கருதுகின்றனர். இவ்வித மாயை என்னும் பிரமையை நீக்க வேண்டும். அரூபியாயிருப்பதல்லவோ பரம்பொருள்!

கற்பனை உருவங்களை கடவுளென்று வணங்குவதால் சித்தர்கள் சொல்லும் உண்மை முக்திநிலையின் விளிம்பையும் தொட முடியாது. பாமர மக்களுக்கு இந்நிலை விளங்காதென் பதற்காகவே பெரியோர்கள் உருவங்களை அமைத்து வணங்கச் சொல்லி தெய்வீகத்தில் ஈடுபாடு கொள்ளும்படி மக்களுக்கு கோவில்களும், தீர்த்தங்களும் அமைத்தனர். ஆனால், விசாரம் செய்து மேலோங்கிச் செல்லும் சாதகனுக்கு அவைகளெல்லாம் பயன்படாதென்பது உண்மை முக்தி நிலை அறிந்தோர்க்கு விளங்கும். ஆலய வழிபாடு ஓரளவுக்கு அவசியமாக இருப்பினும் அதுதான் முடிவு என்ற கருத்தை மக்களிடமிருந்து மெள்ள மெள்ள அகற்ற வேண்டும்.

சாகா நிலையடைந்த சித்தர்களைப் பற்றி மேலே நாம் குறிப்பாகப் பார்த்தோம். தமிழ்நாட்டில் அகத்தியர், நந்தீசர், திருமூலர், கருவூரர், கொங்கணவர் என பதினெண் சித்தர்களை மூல சித்தர்களென்பர். இவர்களிடமிருந்து சாகாக்கலையை கற்ற உத்தமர்கள் அநேகருண்டு. வடநாட்டில் நலநாத சித்தர்களென்றும் அவர்களுக்கு நவகோடி சீடர்கள் உண்டென்றும் சொல்லப்படுகிறது.

மேல் நாட்டவர்களில் இந்நிலை யடைந்தவர்கள் பலர் இருந்திருப்பினும், இப்பொழுதிருப்பினும் நமக்கு தெரியக்கூடிய அளவில் இருப்பவர் மகான் பார்சல்செஸ் என்பவரே. இவர்கள் யாவருமே தங்கள் உச்ச நிலைக்கு தக்கவர்களை மேலேற்றும் முயற்சியில் இருப்பவர்களே. மக்கள் நலனுக்காக தூல உடலுடன் சில காலம் வாழ்வரென்பதைப் பற்றியும் மேலே சொன்னோம்.

மிருகங்களைப் போல், அறிதான மனிதப் பிறப்பெடுப்பவர்களும் உண்டு. உறங்கி மக்களைப் பெற்று சாவதை நோக்கி சித்தர்கள் மிகவும் வருந்துகிறார்களென்பதை அவர்கள் பாடல்களிலிருந்து அறிகிறோம். ஐயோ! இறந்துவிடப் போகிறீர்களே! வாருங்கள் வாருங்கள்! உண்மை நெறியைக் காட்டுகிறோமென்று அறைகூவுகின்றனர்.

அத்தகைய சித்தர்களில் ஒருவர் 125 வருடங்களுக்கு முன் 19–வது நூற்றாண்டில் நம் பாட்டனார் காலத்தில் வாழ்ந்தார். அவருக்கு வள்ளலார் என்னும் புனைப்பெயர் உண்டு. அவர் பெயர் ராமலிங்கம், அவர் தென் இந்தியாவில், தென் ஆற்காடு மாவட்டத்தில் மருதூர் என்னும் கிராமத்தில் பிறந்து, பிறகு வடலூர் என்னும் சிற்றூரில் வசித்து (1823–1874) மறைந்தவர். அவர் வாழ்க்கை வரலாறு நமக்குத் தெளிவாய் கிடைத்திருப்பினும், அது ஓர் எளிமையான வாழ்க்கையாகவே தோன்றும். இவர் லௌகீக வாழ்க்கையில் வியப்பும் குறிப்பிடத்தக்கதுமான சம்பவங்கள் ஒன்றுமே இல்லை யென்று சொல்லலாம். சிறு வயதிலிருந்தே தெய்வீகத்தில் ஈடுபாடு கொண்டதினால் அம்மார்க்கத்தில் அவர் அடைந்த அனுபவ நிலைகள் தான் குறிப்பிடத்தக்கது. அவர் மரணமிலாப் பெரு வாழ்வு பெற்று ஞானசித்தியடைந்துபூட்டிய அறையிலிருந்து மறைந்தாரென்பதைக் காட்டிலும் வியப்பான நிகழ்ச்சி உலகத்தில் வேறெதுவாக இருக்க முடியும்.

அவர் இயற்றிய பாடல்களுக்கு 'அருட்பா' என்பர். பல்லாயிரக்கணக்கான பாடல்கள் நிறைந்தது. பல பாடல்கள் அச்சில் வராதவை. அருட்பாவை மக்கள் மிகவும் உற்சாகத்துடன் படிப்பர். ஆனால் அவர் அடைந்த நிலையைப் பற்றி சிந்திப்பவர்கள் வெகு சிலரே.



இவரைப் போன்ற மகான்கள் மேல்நாட்டிலும் உண்டு. முன் குறிப்பிட்டு மகான் பார்சல்ஸெஸ் பல நூல்களை எழுதியுள்ளார். அவர் நூல்களில் சில பகுதிகளை "யோலந்திய கோமி" என்ற ஒரு அமெரிக்கர் ஜெர்மானிய மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார். அதில் அம் மகானைப் பற்றி தன் முகவுரையில் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்.

"பாரசெல்ஸஸ் பெரியதொரு விருந்துண்டபின் அன்னாரின் விரோதிகள் மலை உச்சியிலிருந்து அவரை உருட்டித் தள்ளி விட்டதனால் இறந்துவிட்டாரென்னும் ஒரு கதை உண்டு, குடிபோதையில் அவர் மாடியிலிருந்து விழுந்து இறந்தார் என்பது மற்றொன்று, அவர் வைரக் கற்களை இழைத்து தின்று அவ்விஷத்தால் இறந்தாரென்பது மற்றொன்று. இதற்கு மாறாக அவர் சாகா நிலையடைந்து அமரத்துவம் அடைந்தார்" என்று மற்றொரு சாரார் சொல்வர்.

இவைகளில் அவர் சாகா நிலையடைந்தவரென்பதுதான் உண்மை. அவர் வாழ்க்கையை அறிதோர்களுக்கு அவர் நூல்களைப் படித்தோருக்கு பின் சொன்ன கூற்றே உண்மையென்பது விளங்கும். அவர் வகுத்துக் கொண்ட ஒழுக்கம், மற்ற லௌகிக நியதிகளுக்கு அப்பாற்பட்டதாயினும் பல எதிர்ப்புகளிடையே தன் நிலையை விட்டுக் கொடுக்காதவர் அவர், ஓர் மருத்துவ நிபுணர். ஒருவேளை மருந்தைக் கொடுத்து பல நோய்களை தவிடு பொடியாக்குவதில் வல்லவர். பட்டம் பெற்ற மருத்துவர்கள் அவர் செய்யும் வியக்கத்தக்க மருத்துவத்தை பாராட்டாது, பொறாமையினால் கூட்டம் சேர்ந்து அவரை நாடு கடத்தினர். தங்களுடைய வருமானத்தில் அவர்களுக்கு குறிக்கோளே தவிர நோயாளியின் உடல் உயிரல்ல என்று பாரசெல்சஸ் மருத்துவர்கள் தாக்கினார்.

"பாவிகளே! நீங்கள் காய்ந்து சருகாகி விழுந்து விடுவீர்கள். ஆனால் நான் பசுந்துளிர்களை விட்டுக் கொண்டேயிருப்பேன்" என்றார். அவர் உடலை மாற்றியமைக்கும் கலையில் வல்லவர். எப்போதும் பசுமரம் போல் அன்றும் இன்றும் உயிருடன் நம்முடனிருக்கிறார். ஆனால் அவர் தக்கோர் கண்களுக்கே புலப்படுவார் என்று மேற்சொன்ன யாகோமி எழுதியுள்ளார்.

இந்த உண்மை, ராமலிங்க அடிகளார் வாழ்க்கையி பார்க்கலாம். தூல தேமில்லா நிலையெய்தி அவர் நிழல் கீ விழாமல் போய்விட்டது. "மக்காள்! நான் மரணமிலா பெருவாழ்வு பெற்றுவிட்டேன்; நீங்களும் வாருங்கள்; வ காட்டுகிறேன்." அறை கூவினார். சாவைத் தடுத்து சிரஞ்சீவியா வாழலாம்; ஞான சித்தியடைந்தபின் செத்தோர்களையு எழுப்பலாமென்றார். வேதங்கள் சாகாக்கலையைப் பற்றி ப இடங்களில் சொல்லப்பட்டிருந்தும், அது பண்டிதர்களுக் விளங்காப் பொருளாக உள்ளமையால் உண்மை நிலை அறியா குருடர்களுக்கு குருடன் வழிகாட்டுவதுபோல் சாஸ்திரங்க படிக்கும் பண்டிதர்கள் மேடைகளில் பேசி வருகிறார்கள்.

உண்மை வழியை காட்டுகிறேனென்று சொன்ன ராமலிங்கரை இவ்வுலகோர் புறக்கணித்தார்கள். மிகவும் வெறுப்புற்றவரா 'ஐயோ! நான் கடையைத் திறந்து வைத்தேன்; வாங்குவாரில்லை மூடிவிட்டேனென்று சொல்லி மறைந்தார், அவரிட சென்றார்களெல்லாம் மண், பெண், பொன் முதலி சாதனங்களையடைவதற்கே யல்லாது உண்மை அறிவதற்கல்ல.

மகான் பாரசெல்ஸஸ் முடிவைப் பற்றிய கதைகளைப் போலே ராமலிங்கர் முடிவைப் பற்றியும் பல வகைக் கதைகள் பரவின.

ராமலிங்கர் சாதி, சமயம், மதங்களையும் அதனால் விளைந் மூட நம்பிக்கைகளையும் கடுமையாக தாக்கினார். கடவு அருள் பெற எல்லா சீவராசிகளிடத்தும் அன்பும், தயவும் காட் வேண்டுமென்று உபதேசித்தார். சமரச சன்மார்க்கமே சாக நெறியென்றார். சாகா நிலைப் பெற்றவரே சன்மார்க்கியென்றார்.

மகான் பாரசெல்ஸ்ஸும் வகுப்பு வாதங்களை கண்டித்தா மதம், சமயம் முதலியவைகளிலுள்ள தத்துவங்களை மாத்திர அவர் ஆதரித்தார். மருத்துவர்களின் ஆணவம், ஆடம்பர முதலியவைகளை தாக்குவதின்றி கிறிஸ்துவ குருமார்களையு தாக்கினார். "அறம், ஏழ்மை, தயை நிரம்பியது கிருஸ்துவ மதமே தவிர கிருஸ்துவ ஆலயங்களில் செய்யும் ஆடம்பரமா கிரியைகளல்ல" என்று ஓயாது பிரசாரம் செய்தார்.

லோபிகளான தனவந்தர்கள் தங்கள் பணத்தை மதுவுக்கும் வேசியர்களுக்கும் இறைப்பார்களே தவிர பசிப்பிணியில் வாடு



ஒருவனுக்கு ஒருபிடி அன்னமும் கொடார்களென்று ராமலிங்கர் வருத்தத்துடன் பாடுகிறார். சடங்குகள், சமயக் கோட்பாடுகள் யாவையும் அவைகளை ஆதரிக்கும் சாத்திரங்களையும் தாக்கினார். அவ்வித சாத்திரங்களை குப்பையில் போட்டு எருவாக்கி புஞ்சையில் போடுவதே நல்லதென்றார்.

தமிழ் மொழிக்கு தந்தையென்று சொல்லப்படும் அகத்திய முனிவர் சொல்கிறார், "மனிதப்பிறவி அறிதானது. ஆனால் இறந்து விட்டால் அது எதற்கு உதவும்" என்கிறார். மனிதன் இவ்வுடலுடன் ஆயிரக்கணக்கான வருடங்கள் வாழலாம். பதினென் சித்தர்களில் ஒருவரான திருமூலர் மூவாயிரம் வருடங்கள் தூலத்துடன் இருந்தாரென்பது மேலே சொன்னோம்.

சாகாக் கல்வி விட்டு மற்ற கல்வி கற்று என்ன பயனென்கிறார் சித்தர்கள். ஏன் அங்குமிங்கும் ஓடித் திரிகின்றீர்கள். காசி, ராமேஸ்வரம் சென்று நீங்கள் கண்ட பலனென்ன; கடவுளைக் கண்டீர்களாவென்று கேட்கிறார் குதம்பை சித்தர், இருந்த இடத்திலிருந்தே அமரத்வம் பெறலாமெனகிறார்.

இயேசு ஒரு ஞானசித்தர், இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் சக்தி வாய்ந்தவர். கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட லாசரஸை பல வருடங்களுக்கு பிறகு கல்லறையை நெருங்கி "லாசரஸ் எழுந்து வா" என்றதும் அவர் எழுந்து வந்தார். தூல தேகமற்ற ஏசுவை சிலுவையில் ஏற்றி ஆணிகள் அடித்தனரென்பது பொருத்தமற்ற கூற்றாகத் தோன்றுகிறது. இறந்தவரை எழுப்பக் கூடிய சித்தனை கொன்றார்களென்றும், அவர் இறந்து விட்டாரென்று சொல்வதும் அவர் அடைந்து நிலைக்கு முரண்பாடானது. கிருஸ்துவ வேதமான பைபிளில் காணும் மொழிகளைத் தாக்குவதாகவோ, ஏதோ ஒரு சர்ச்சையை கிளப்புவதாகவோ யாரும் கருதத் தேவையில்லை. இயேசு இறந்தாரென்னும் வார்த்தையை அகற்ற வேண்டும். சாகா நிலையடைந்தவரை செத்தாரென்பது மடமையென்பதை என் கருத்து.

மக்கள் பாவத்தைத் துடைக்க சிலுவையில் உயிர் துறந்தாரென்பதும் பொருளற்ற கூற்றாகும். தன் சாவினால் பாவிகள் எப்படி புனிதமாவார்கள். அவர் திரிகால ஞானிதான்.

செத்தாலும் கடவுளென்பவர் செத்தாலும் உலகத்தில் பாவிகள் கூட்டம் நிரம்பி வழியுமே தவிர குறையாது. ஏசுநாதர் காலத்தில் இருந்த பாவிகளை விட அவர் மறைந்த பிறகு கொடும்பாவிகள் உலகத்தில் அதிகமாகிவிட்டனர். யுத்தத்தின் பேரால் அவரை பின் பற்றும் மதத்தவர்கள் செய்த கொலைகள் எண்ணிட முடியுமா? ஒரு துரோகமும் நினைக்காத குழந்தைகளையும் பெண்களையும் அணுகுண்டுகளினால் இலட்சக்கணக்கில் ஒரு நிமிடத்தில் ஹிரோஷிமாவில் கொன்று குவித்தது எப்படி மறக்க முடியும். இன்றும், என்றும் இவ்வித கொலைகள் தொடர்ந்து நடக்குமென்பதில் நாம் ஐயம் கொள்ள வேண்டியதில்லை. இவ்வித கடின சித்தமுடையவர்கள் இவ்வுலகம் உள்ளவரை பிறப்பார்களென்று ஏசுநாதர் அறியாரா? பாவத்தின் பரிசு மரணம். சாகிறான் பாவி. ஏசுநாதர் சாவதற்கு ஓர் பாவியா. செத்த பிறகு உயிர்தெழுந்தாரென்பது முக்கியமல்ல. பாவம் செய்யாதீர்கள்; என்னைப் போன்றே நீங்களும் சாகா நிலைபெறலாமென்று சொன்ன இயேசுநாதர் இறந்து விட்டாரா? இதை ஆழ்ந்து சிந்திக்கற்பாலது.

மகான் ஆதிசங்கரர் சாகவில்லைல. அவர் கொள்கைக்கு அத்வைதம் என அவர் நாமம் சூட்டவில்லை. ஆனால் வேதாந்திகளென்போர் அவர் மொழிகளுக்கு 'அத்வைத நியாயம்' எனப் பெயரிட்டனர். மேலும் அவர் கற்பனை உருவத்திற்கு கஷாயம் உடுத்தினர். கஷாயம் உடுப்பது வயிற்றுப் பிழைப்புக்கு என்றும், வீண் வேஷமென்றும் அவர் கண்டித்தார். இலக்கணம் படித்துக் கொண்டு காலத்தை வீணாக்கும் பண்டிதர்களைப் பார்த்து வருந்தினார். சாதி, மதங்களை வெறுத்தார்; அதற்காக மக்கள் அவரை சாதி பிரஷ்டம் செய்தனர். அவர் தாய் இறந்தபோது சவத்தைத் தூக்கவும் ஆள் இல்லாமல் தானே தோளின் மேல் தூக்கிக் கொண்டு போனார். இவர் அஷ்டமா சித்திகளை பெற்றவர்; கூடுவிட்டு கூடு பாய்ந்தவர். ஆகவே இவரும் ஓர் ஞான சித்தர் என்பதை அறிகிறோம். ஆனால் அவரால் நிறுவப்பட்டதென்னும் மடங்களில் பலர் மடாதிபதிகளாக இருந்து இறந்து போனார்கள். ஒருவராவது அவர் அடைந்த சாகா நிலையை பற்றி சிந்தித்ததாகத் தெரியவில்லை.



இறந்தோரை எழுப்பக்கூடிய சக்தி வாய்ந்தவர்களில் சம்பந்தரும் ஒருவர். இறந்து எரிக்கப்பட்ட பெண்ணின் எலும்பைத் தொட்டு அங்கம் பூம்பாவையாக எழச் செய்த நிகழ்ச்சியைப்பற்றி சைவ சமய நூல்களிலும் காணப்படுகிறது.

ஆகவே சாவைத் தவிர்த்து முக்தி பெறுவதே உண்மை நிலையென்பதை நாம் ஒருவாறு உணருகிறோம்.

ஆங்கில அகராதியிலே வேதாந்தி (Philosopher) என்னும் பதத்துக்கு வேதாந்தக்கல் (Philosopher stone) அதாவது மட்ட உலோகங்களைத் தங்கமாக்கும். தெய்வ மருந்தை அறிந்தவன் என்று பொருள் சொல்லப்பட்டுள்ளது. வேறெந்த மொழியிலும் இவ்வகைப் பொருத்தமான பொருள் வேதாந்திக்கு சொல்லியிருக்க முடியாதென நினைக்கிறேன். தங்கமாக்கும் ரசவாத மருந்தைச் செய்து அதைக் கொண்டு ரசத்தைத் தங்கமாக்கி பெண்டு பிள்ளைகளுக்கு தங்கக் கட்டிகள் விட்டுப் போகிறவனை வேதாந்தியென்று எந்த முட்டாளும் சொல்லமாட்டான். ரசவாத மருந்தை அம்மேதாவிகள் தங்கள் உடலை அமலமாக்குவதற்காக பயன்படுத்தியவர்கள் என்பதை அறிதல் வேண்டும். ஆகவே உடலை அமலமாக்க முயற்சி செய்பவனை கூட மேற்படி அகராதியில் வேதாந்தி எனப் பொருள் கூறப்பட்டுள்ளது. அப்படியிருக்க நான்கு புத்தகங்களைப் படித்துவிட்டு வன்மையாகப் பேசக் கற்றுக் கொண்டு அழகான மொழியில் புத்தகம் எழுதுவோரையெல்லாம் மகானென்றும் வேதாந்தி யென்றும் சொல்வது விவேகமற்ற செயலாகும்.

இம்மருந்தை ரசவாத மருந்தென்றும் சொல்லலாம். இம்மருந்து தெய்வீகமானது. தேவர்களுக்கும் கிட்டாது. ஆனால் மனிதர்கள் கையில் அகப்படக்கூடியது; இதை காயகற்பம் என்று சொல்வர். மருந்து என்பது பிணிகளை நீக்கக் கூடியது. மனிதன் பிணிகளால் இறக்கிறான். அசம்பாவிதமான மரணங்கள் தனிப்பட்டது. மனிதர்களுக்கு 4448 வியாதிகள் உண்டாகிறதென்றும், அவைகளை நீக்க சொற்ப செலவில் மூலிகைகள், உப்புகள், பாஷாணங்கள் முதலிய மருந்துகளை சித்தர்கள் வகுத்துள்ளனர். பிணிகளை நீக்கக் கூடிய மருந்துகளுக்கு குருமருந்து சேர்ந்தால் எதிர்பார்க்கும் அளவுக்கு பயன் தரும் என்றும் அக்குருமருந்தே கற்ப மருந்தென்றும் சித்தர்கள் சொல்லலாயினர். முதலில்

குருமருந்தை முடித்துக் கொண்டு மற்ற மருந்துகளைத் து மருந்தாகக் உபயோகிக்க வேண்டுமென்றும் சொல் இக்குருமருந்தே ரசவாத சித்தியளிக்கக்கூடியது. அதுவே உட அமலமாக்கி நித்திய தேகமாக்கவல்லதாம்.

கட்டுதிட்டமான உடலைப் பார்த்தால் காயக் கற் சாப்பிட்ட உடல் போலுள்ளதென பாமர மக்களும் சொல்வ நாம் கேட்டுள்ளோம். ஆகவே ஒருவன் நல்ல மருந்துவனா விளங்க வேண்டுமாயின் இக் குருமருந்தை அறிய வேண்டுமென பார்செல்ஸஸ் உள்பட எல்லா சித்தர்களும் சொல்வராயினர்.

சித்தர்கள் தேகங்களை ஐவகையாகப் பிரித்துள்ளனர். அ இருள் தேகம், மருள் தேகம், சுத்த தேகம், பிரணவ தேகம், ஞா தேகம் என்பனவாகும். இதைப் பற்றி ஆசிரியர் எழுதியுள் சித்தர் மெய்பொருளென்னும் நூலில் விரிவாக சொல்லப்பட்டுள்ளது.

இருள் தேகத்தை அமலமாக்கி ஞான தேகமடைய மேற்சொன் தெய்வ மருந்தென்னும் கற்பம் வேண்டும். இம்மருந்து உடலை உயிரையும் பிணைத்து ஐக்கியப்படுத்தி விடுகிறது. இம்மருந்து சித்தர்கள் "மூப்பு" எனப் பெயர் சூட்டினர். இதை ஆங்கிலத்தில் வேதாந்தக்கல் (Philosopher stone) என்ப தமிழ்நாட்டு சித்தர்கள் இந்த மூப்புவை பல பரிபாஷை பெயர்களைக் கொண்டு அழைக்கின்றனர். அவைகளின் விவர ஆசிரியர் எழுதியுள்ள "மூப்புகுரு" என்னும் நூலில் விரிவா சொல்லப்பட்டுள்ளது. அப்பரிபாஷைப் பெயர்களில் எட்டிரண்டு என்னும் இரண்டு எழுத்துகளையே குறிப்பாக சித்தர்க சொல்லியுள்ளார். எட்டிரண்டின் பொருளை அறியாதவ விவேகமற்றவனென்று சொல்வர். "மூப்பு" என்னும் பொரு இந்த எட்டிரண்டு என்னும் அ–உ வில் அடங்கியுள்ளதாம். இதையே அகரம் உகரம் என்று சொல்வர்.

உண்மை வைத்தியன் வைத்தியத்துக்கெனப் பிறந்தவன். கல்லூரிகளில் பட்டம் பெற்றவன். வயிற்றுப் பிழைப்புக்கு வைத்தியம் செய்பவனாகும். ஏதோ ஒரு சிலர் அதற்கு விலக்காகலாம். இப் பட்டதாரிகளிடையே பொறாமையும் மடமையும் நிறைந்திருப்பதால் மற்றொரு சக வைத்தியனுக்கு புகழ் வருவதைத் தடுக்க ஒரு நோயாளியைக் கொல்லவும்



தயங்கானென்று மகான் பார்செல்ஸஸ் சொல்கிறார்.

ஓர் மருத்துவன் ரசவாதம், சோதிடம், வானசாஸ்திரம் அறிந்தவனாக இருக்கவேண்டுமென்றும், அவைகளுக்கும் உயர்ந்த ஒழுக்கத்தை யுடைவனாயிருக்க வேண்டுமென்றும்" பார்செல்ஸஸ் சொல்கிறார்.

"மருத்துவமென்பது மிக்கக் கவனத்துடனும், கடவுளிடம் அதிக பயத்துடனும் செய்யவேண்டியதொரு கலையென்றும், கடவுளிடத்தில் அச்சமில்லாதவன், கொலை, களவுக்கு அஞ் சாதவனாயிருப்பானாகையால் நோயாளிக்கும் தீங்கு விளைவிக்க அஞ்சமாட்டானென்று" பார்செல்ஸஸ் கூறுகிறார். நோயாளிக்கு ஓர் மருத்துவன் கடவுளுடைய பிரதிநிதியாவான்.

பார்செல்ஸஸ் அவர்களின் கருத்துப்படி நோயாள் ஒரு மனிதன் மரணம் அடைய வேண்டியதில்லை. எல்லா நோய்களையும் குறிப்பிட்ட காலத்தில் குணமாக்கி விடலாமென்று சொல்கிறார். அதற்கு, மேற்சொன்ன மூப்பு என்னும் குரு மருந்தை தண்டாயுதமாய் கையில் ஏந்தியவனாயிருத்தல் வேண்டும். உடலிலுள்ள எல்லாப் பிணிகள் நீங்கும்போதே தேகம் அமிலமடைகிறது; அதாவது சுத்தமடைகிறதென்பதாம். இந்த சுத்த தேகம் ஆயுளை நீட்ட வல்லது. மெய்ஞ்ஞானமடைய வழிவகுக்கிறது.

# ரசவாதமென்பது உண்மைதானா?

பாதரசத்தை தங்கமாக்குவதே ரசவாதமென்பது. மற்ற உலோகங்களான இரும்பு, செம்பு, வெள்ளி, நாகம், வங்கம் முதலியவைகளையும் தங்கமாக்க வல்லவர்கள் சித்தர்கள். ஆயினும் ரசத்தை தங்கமாக மாற்றுவதே உயர்ந்த கலை. இதற்கு குருமருந்து என்னும் மூப்பு வேண்டும். இந்த மூப்பு உருக்கிய உலோகங்களில் பட்ட உடனேயே 10 1/2 மாற்றுத் தங்கமாகிவிடும். இம் மருந்தைப் பற்றி விரிவாக ஆசிரியர் எழுதிய "மூப்பு குரு", "அமுத கலசம்" என்னும் நூல்களை பார்க்கத்தக்கது.

இக் குருமருந்தைக் கொண்டு தங்கம் செய்வது சித்தர்களின் குறிக்கோளல்லவென்றும், அதைக் கொண்டு உடலை

சூக்குமமாக்கி ஞானசித்தியடைவதே அவர்கள் முடிவென்பதையும் மேலே சொல்லியுள்ளது.

மண்தோன்றி, மனிதன் தோன்றிய காலத்திலிருந்து அறிவாளிகள் பசி, பிணி, மூப்பு, சாக்காடைத் தவிர்க்க வெகு பாடுபட்டிருக்கிறார்கள். பல ஆராய்ச்சிகள் செய்து இக் குருமருந்தை, அமிர்தத்தை, ஆண்டவன் அருளால் கண்டுபிடித்தனர். எளிமையான மூலிகைகளைக் கொண்டும் பசி, பிணி, மூப்பைத் தவிர்க்கக் கண்டுகொண்டார்கள். அவைகளைக் கொண்டே மரணத்தைத் தள்ளிப் போட்டனர். ஆனால் அதோடு நிறைவு பெற்றார்களில்லை. உடலையும் உயிரையும் நிரந்தரமாக இணைத்து சாகா உடலைப் பெற முயற்சித்தனர்; அதில் வெற்றி கண்டனர்.

ஆயினும் இவ்வமிர்தம் என்பது எதனால் செய்யப்படுவது அதை எப்படி தயார் செய்வது என்ற கேள்விகளுக்கு சித்தர்கள் எல்லோரும் பதில் அளித்துள்ளனர். ஆனால் அவர்கள் வெகு பிரயாசையுடன் கண்டுபிடித்த அம்மருந்தை பரிபாஷைகளில் சொல்லி மறைந்துவிட்டனர். நாம் அதைப் படிக்கும்போது ஏதோ புரிவதுபோலிருக்கும். ஆனால், புத்தகத்தை மூடிவிட்டு இது ஏதாயிருக்குமென்று சிந்தித்தோமேயானால் மூளை குழம்பிப் போகும். இம் மருந்து சாகா நிலையைக் கொடுக்க வல்லதாகையால் அதி விவேகிகளுக்கும், துன்மார்க்கருக்கும் எட்டக் கூடாதென்னும் கருத்தினால் தான் பரிபாஷையில் மறைத்து வைத்தோமென்று சித்தர்கள் சொல்கின்றனர்.

ஏனெனில், துன்மார்க்கர்கள் கையில் இது அகப்பட்டால் அதை தீய வழிகளில் பயன்படுத்தி மக்களுக்கு இன்னல்கள் உண்டாக்குவரென்றனர். நம் நாட்டு சித்தர்கள் எழுதியதுபோலவே மேனாட்டு அறிஞர்களும் பரிபாஷைகளில் எழுதி மறைத்து வைத்தனர். உதாரணமாக அதன் சொரூபத்தை விளக்கும்போது "நாதவிந்து கலாதிநமோ நமோ; வேத மந்த்ர சொரூபாநமோ நமோ', சொரூபமாயிருக்கக் கூடிய பொருள் நாதவிந்தால் கலக்கப்பட்ட தென்றனர். நூற்றுக்கணக்கான பெயர்களில் அதை அழைக்கலாயினர்.

இங்கு என் சொந்த அனுபவத்தை சொல்ல விரும்புகிறேன். சித்தர்கள் நூல்களில் பலவற்றை படித்துப்படித்து உண்மைப் பொருளை அறிய முயற்சித்தேன். ஆனால், அவ்வறிஞர்களின் பரிபாஷையைப் புரிந்து கொள்ள போதிய அறிவு பற்றாமல், கடவுள் அருள் கிட்டாமையினால் முடியாமற் போயிற்று. இதற்காக முப்பது வருடங்களில் பல இரவுகளை இவ்வாராய்ச்சியில் தூக்கமின்றி கழித்திருப்பேன். முடிவில் இந்நூல்களை இனிமேல் படிப்பதில் எள்ளளவும் பயனில்லை; சித்தர்கள் ஏமாற்றும் ஜாலவித்தைக்காரர்களென முடிவு செய்தேன். ஆனால் என் மனதில் ஏதோவொன்று இவ்வாராய்ச்சியை விடவேண்டா என்று தூண்டிக் கொண்டிருந்தது.



நான் வயதின் காரணமாக மூப்படைந்து வந்தேன். நோய்கள் வெளிப்படையாக தோன்றாவிடினும், மருத்துவன் என்ற முறையில் தீய பொருள்கள் உடம்பில் சேருவதை உணர்ந்தேன். சோர்வு துவங்கிற்று. இளமையில் என் வலிமையை துன்மார்க்கத்தில் விரயம் செய்துள்ளேன். ஆனால் அது மிக்க குறுகிய காலமே. மருத்துவனானதால் அவ்வபோது மூலிகை மருந்துகளை உண்டு அச்சிறு பிணிகளைத் தவிர்த்து வந்தேன். ஆயினும் உடலை நீட்டி இரவும் பகலும் பிரார்த்தனை செய்து வந்தேன்.

ரசத்தையும் மட்ட உலோகங்களையும் தங்கமாக மாற்றும் மருந்தே கற்பத்துக்கும் பயனளிப்பதென மேலே கண்டோம். ஆனால் அப்படி தங்கமாக்கும் மனிதனை நாம் கண்டதில்லையே? சொல்லப்போனால் தங்கம் செய்து தருகிறேனென்று மக்களை ஏமாற்றும் போலிச் சாமியார்களைப் பற்றியே கேள்விப்பட்டுள்ளோம். சிலர் பார்த்தும் இருக்கிறோம். அப்படி சில மக்களை ஏமாற்றி பணத்தையும் பொன்னையும் பறித்துக்கொண்டு போன சாமியார்களைப் பற்றி செய்தித்தாள்களிலும் படித்திருக்கிறோம். நானும் இக்காரணங்களினால் இக்கலையில் நம்பிக்கையற்றிருந்தேன். ஆனால் சித்தர்கள் சொன்ன மருந்துகளைச் செய்து பார்த்ததுமில்லாமல், பிணிகளை நீக்க அவைகளை கொடுத்தும் வியக்கத்தக்க பலனைக் கண்டுள்ளேன். சித்தர்கள் சொன்ன மருத்துப் பகுதியில் ஆழ்ந்த நம்பிக்கையிருந்தது. ஆனால் அவர்கள் சொல்லும் ரசவாதப் பகுதியில் நம்பிக்கை இல்லாமலிருந்தது.

ஆயினும் இவ்வித நம்பிக்கையற்ற நிலையை ஒரே நொடியில் ஒரு சாது 1951ம் வருடத்தில் சிதறடித்துவிட்டார். அவர் என் கண்முன் பாதரசத்தை தங்கமாக மாற்றியதைக் கண்டதும் என் முரணான கருத்துகள் நிலை குலைந்து போயிற்று. அதோடன்றி பணத்தின் மேலிருந்த ஆசை அன்றோடு அழிந்துவிட்டது. 'இவ்வளவு எளிமையில் தங்கம் செய்யமுடியும் போது மனிதர்கள் கேவலம் பொருளுக்காகவும் பதவிக்காகவும் என்னென்ன பாபங்கள் செய்கிறார்கள்; இது கேவலம்;' என்று உள்ளூர ஏதோ சொல்லிற்று. ஆனால் அந்த சாது உபயோகித்த மருந்து உடலுயிரை நீட்டும் மருந்தென்பதை அப்போது உணராமல் போய்விட்டேன்.

சித்திரை மாதம் பௌர்ணமி நாள், அன்றே நான் ரசவாதக் கலையைப் பார்த்தது. அன்றிரவு அந்த சாது என்னை வீட்டின் மொட்டை மாடிக்கு அழைத்துச் சென்றார். நடு இரவு, கையில் ஏதோ ஒரு பொருளை வைத்துக் கொண்டிருந்தார். இதோ பார் என்றார். இதுதான் அகரம் என்றார். இது ஓர் உபதேசமென்பதை நான் அப்போது உணரவில்லை. எல்லாமே எனக்குக் குழப்பம். ஊமையைப் போல் பார்த்து நின்றேன். அதோடு அவ்வத்தியாயம் முடிந்துவிட்டது. அந்த சாது புதுச்சேரியில் 40 ஆண்டுகளாக ஒரு தோட்டத்தில் பழைய வீட்டில் வசித்து வந்தார். அது ஓர் முஸ்லீமிற்கு சொந்தானது. வாடகையின்றி வசித்து வந்தார். உப்பின்றி பொங்கல் சாப்பிடுவார். இரவெல்லாம் கண்விழித்து ஏதோ எழுதிக் கொண்டும் படித்துக் கொண்டுமிருப்பார்.

நான் நீதிபதியாகயிருந்ததால் ஊருக்கு ஊர் மாற்றப்பட்டு அச்சாதுவின் தொடர்பு இல்லாமற் போய்விட்டது. அவருடன் தொடர்பு கொள்ளவேண்டும் என்ற அவாவும் போதிய அளவில் இல்லாமலிருந்தது. அவர் 1951–ஆம் வருடம் எனக்குக் காட்டிய பொருளைப் பற்றி நான் பிறகு சிந்தித்ததுமில்லை. பல வருடங்களுக்கு பின்தான் அவர் எனக்கு காட்டியது ஓர் முக்கியமாக உபதேசமென்பதை உணர்ந்தேன். இதோடு இங்கு நிறுத்திக் கொண்டு அமுதம் என்ற கற்பத்தைப் பற்றி ஓரளவுக்கு ஆராய்வோம்.



# அமுதம்

ரசவாதம் உண்மையா, பொய்யா என்னும் ஐயங்கள் எனக்குத் தீர்ந்துவிட்டது. ஆனால் நரம்பு, எலும்பு, தோல் முதலியவைகளினால் ஆக்கப்பட்ட இவ்வுடல் எப்படி மறுமலர்ச்சியடையக்கூடும்? நரை, திரை மாறும்; உடல் கற்தூணாகும் என்ற மொழிகளில் எனக்கு எள்ளவும் நம்பிக்கையில்லை. வயது முதிர முதிர உடலில் உள்ள சீவ அணுக்கள் பழுதுப்பட்டு, முதுமை, நரை, திரை, மூப்பு வருகிறது. அவ்வித சீவ அணுக்களை எப்படி உயிர்பிப்பது என்ற ஐயப்பாடுகள் ஒன்றின் மேல் ஒன்றாய் ஓங்கி வந்தன.

உடல் அமுதத்தால் மாறுபாடு அடையும்போது பழைய நகங்கள் கழன்று விழும். சட்டைகள் சுழலும், கண்கள் ஒளிபெரும், பற்களெல்லாம் விழுந்த புதிய பற்கள் தோன்றுமென்றும் சொல்லப்பட்டுள்ளது. இதெல்லாம் நம்பத்தகுந்த விஷயங்கலல்ல என்ற முடிவுடன் இருந்தேன். அப்படி மாறுபாடடைந்த மனிதன் நாம் யாரையும் கண்டதில்லை. ஆனால் காணாததெல்லாம் நம்ப முடியாதென்று சொல்வது மடமையல்லவா? இருப்பினும் மனிதனால் முடியக்கூடியதை நாம் பார்க்காவிடினும் நம்புவோம். சந்திர மண்டலத்திற்குப் போவேனென்று 20 வருடங்களுக்கு முன் ஒருவன் சொல்லியிருந்தானேயானால் அவனை பைத்தியக்கார மருத்துவமனைக்கு அனுப்பி விடுவோம். ஆனால் அது இன்று முடிந்துவிட்ட நிகழ்ச்சியாகி விட்டதல்லவா?

பலவிதமான கேள்விகளும் பதில்களும் என்னுள் போராடிக் கொண்டிருந்தன. 1969–ஆம் ஆண்டு வரையில் சாகாக்கலையைப் பற்றி ஆராய்ச்சி செய்ய முயற்சி செய்யவில்லை. ஒய்வுமில்லை. 1969–ஆம் ஆண்டுவரையில் நீதிபதியாயிருந்து ஓய்வு பெற்றேன். பிறகு இச்சாகாக் கலையைப் பற்றி தீவிரமாக ஆராய்ச்சியில் இறங்கினேன். சாகாக் கலையின் நுணுக்கங்களை ஆராயும்போது அந்த சாது எனக்குச் சொன்ன 'அகரம்' ஓர் உயர்ந்த உபதேசமென்பதை உணர்ந்தேன்.

காய சித்தியென்பது 40 வயதுக்கு மேல் 80 வயது வரையில் செய்யக் கூடுமாயின் அது மத்திபமென்று சித்தர்கள்

சொல்கின்றனர். 40 வயதிற்குள் முடிப்பதே உத்தமம்.

நான் 60 வயது தாண்டிவிட்டேன். "சித்தர்களால் புகழப்ப
சாகா மருந்து கிட்டினால் உபயோகிக்க அவா கொண்டே
அதன்றி அதன் உண்மையை அறிய வேண்டுமென்னும் பே
இருந்தது. நாளுக்கு நாள் இவ்வித அவா வளர்ந்துக் கொண்
வந்தது.

ஒருநாள் புறப்பட்டு புதுச்சேரிக்கு சென்று மேற் சொ
சாதுவை தரிசித்தேன். நான் ஓய்வு பெற்றுவிட்டதால் சாதுவு
தங்க அவாவென்று சொன்னேன், 'நல்லது' என்றார். ஆ
அவர் வாழும் இடம், அவர் உணவு முதலியன சுகத்தில் ப
என் போன்றவர்கள் ஒருநாள் கூட தாக்கு பிடிக்க முடிய
ஆகவே சென்னைக்கு வந்து என்னுடன் தங்க முடியுமா எ
வினவினேன். 'வருகிறேன்' என்று சொல்லி, சட்டி, குண்ட
முதலிய சாமான்களை எடுத்துக் கொண்டு என் காரில் வ
சென்னை சேர்ந்தோம்.

ஐந்து மாதங்கள் என்னுடனிருந்தார். கற்பத்தைப் ப
அவரிடம் பேசுங்கால், 'தான் அதை முடித்துவிட்டதாகவு
ஆனால் அதை உபயோகிக்க ஆண்டவன் உத்தரவில்லை
யென்றும் சொல்லி வந்தார். ஓர் விதமான மெழுகைக் காட்
இதுவே கற்ப மருந்தென்றார். ஓர் இரவு திடீரென என் வீ
அறையில் படுத்திருந்தவர் மறுநாள் காலை சித்தியடைந்தா

அவர் காட்டிய மருந்து ஒரு சிறிய கண்ணாடிக் குடுவையி
என் வீட்டு அலமாரியில் இருந்தது. அவர் சித்தியடைந்த பி
"மூப்பு குரு", "அமுதகலசம்" என்னும் இரு நூல்களை எழு
வெளியிட்டேன். சித்தர்கள் நூல்களிலிருந்து மூப்பூவைப்ப
நான் சேகரித்த சில மொழிகளை அவைகளில் எழுதினே
அதில் கற்பம் சாப்பிடுங்கால் வரும் நோய்கள், அதற்கு பத்தி
என்பதையெல்லாம் மூப்பு குரு நூலில் எழுதியுள்ளேன். அதி
கற்பம் சாப்பிடுங்கால் உப்பு, புளி சாப்பிடக் கூடாதென்று
இன்னும் பலவித பத்திய உணவுகளைப் பற்றியும், உடலி
கடுமையான மாறுதல்கள் உண்டாகுமென்றும், எழுதியுள்ள
உடல் அனலாகும்; புண்ணாகும்; பேதியாகும், ரத்தம் கழியு
தொழுநோயின் அறிகுறிகள் காணும், விந்து நீராகும், உடலி
96 தத்துவங்களும் யுத்தம் செய்யும் என்றெல்லா
எழுதியுள்ளேன்.



இவைகளை நினைக்கும்போது ஒரு பக்கம் . என் தகப்பனார் 65 வயதில் மரணமுற்றார். நானும் அவ்வயதை நெருங்கினேன். அலமாரிலிருக்கும் மருந்து உண்மையிலேயே கற்ப மருந்துதானா; கற்ப மருந்தாயினும் அதை உண்டு சமாளிக்கும் வலிமையுள்ளதாவெனும் ஐயப்பாடுகள் என்னை வாட்டின. ஆயினும் மரண பயம் ஒரு பக்கம் வாட்டிற்று. தாமதிப்பது கால விரயமாகும். அம் மருந்தை சாப்பிடாமலிருந்தாலும் சாகப் போகிறோம்; சாப்பிட்டுத் தான் இறந்தாலென்ன என்னும் முடிவுக்கு வந்தேன்.

சித்தர்கள் மொழிகளில் எனக்கு அசைவற்ற நம்பிக்கை யிருந்ததால், அவர்கள் என்னைக் காப்பாற்றுவர் என முடிவுக்கு வந்தேன். அலமாரியிலிருந்த மருந்தை உட்கொள்ள ஆரம்பித்தேன். 5.5.1973 முதல் காலை – மாலை ஒரு குன்றியளவு தேனில் கலந்து சாப்பிட்டேன். 48 நாட்கள் கடந்தன மருந்தும் முடியும் நிலைக்கு வந்துவிட்டது. ஆனால் உடலில் ஒருவித மாறுதலும் காணவில்லை.

மேல்நாட்டு ஞானிகள் பத்தியத்தைப் பற்றி ஒன்றும் சொல்லாவிடினும் நம் நாட்டு சித்தர்கள் உப்பு, புளி முதலியவை நீக்கவேண்டுமென்று சொல்லியுள்ளனர்.

நம் நாட்டு வெப்ப தட்ப நிலையை அனுசரித்தே இப்பத்தியம் சொல்லியிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ஆனால் நான் பத்தியம் ஒன்றுமே அனுசரிக்கவில்லை. கடுமையான வெயிலில் சுற்றினேன். புளியினால் ஆக்கப்பட்ட வத்தக்குழம்பு எனக்கு மிக்வும் பிரியமானது. இரவில் பிரதி தினமும் சாப்பிடுவேன். இப்படி 52 நாட்கள் கழிந்தன.

ஐம்பத்தி மூன்றாவது நாள் திடீரென உடல் முறுக்க ஆரம்பித்தது. மாலை நான்கு மணி இருக்கும். கோட்டுவாய் விடாமல் வந்துகொண்டிருந்தது. உடனே கடுமையான குளிரும் சுரமும் ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து பேதியாக ஆரம்பித்தது. வீடெல்லாம் நாற்றம். அனுபவமில்லாத என் இரு பெண்கள், மாப்பிள்ளை தவிர வேறு வீட்டில் யாரும் கிடையாது. கணக்கற்ற முறைகள் பேதி, என் நிலைமை இழந்து விழுந்தேன். இரவெல்லாம் அதே நிலை காலை 5 மணிக்கு ஓர் புகழ் பெற்ற தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன்.

மாலை 4 மணிக்கு என் சுய நினைவு வந்தது. வே... கட்டடத்திலிருப்பதை உணர்ந்தேன். மருத்துவமனையென... சொன்னார்கள்.

சிறுவயதில் ஒரு முறை தொண்டையில் ஆபரேஷனும், ஒ... ஊசியும் அறிந்ததைத் தவிர நான் ஆங்கில மருத்துவமே செய்... கொண்டதில்லை. மருத்துவமனையில் எனக்கு சலைனு... குளுகோசும் ஏற்றப்பட்டு வருவதை நோக்கினேன். உட... என்னை வீட்டுக்கு அழைத்துச் செல்லுங்கள் என வற்புறுத்தினே... ஆனால் என் மக்கள் வற்புறுத்தலின் பேரில் ஐந்து நாட்கள் தங்... வீடு திரும்பினேன். வீடு சேர்ந்து மாத்திரம் ஒருவர் உதவியா... மெள்ள நடந்து சென்று 6 முறைகள் பேதியாகிக் கொண்டிருந்தது... ஒரு நாள் திடீரென ஆசனவாயால் சுமார் மூன்றுபடி ரத்த... கொட்டிற்று மறுநாள் உடல் முழுதும் வெளுத்துவிட்டது. எ... பெற்றோர்கள் ரத்தம் முழுவதும் என் உடலிலிருந்து வெளியே... சென்று விட்டதாக ஓர் உணர்ச்சி. இந்த அளவிலும் கூட நான்... இறந்துவிடுவேனென்ற பயம் எனக்கு எள்ளளவும் இல்லாதது... ஓர் வியப்புக்குரிய விஷயம்.

ஏனெனில் என் உடலிலிருந்து உயிர்பிரியும் குறிகள் காணப்படவில்லை. உயிர் உடலில் நிலைத்து நிற்பதுபோல் ஒரு உணர்ச்சி. என் உடலை முதல் நாள் சோதித்து டாக்டர்கள் அன்று இரவு கழிந்தால்தான் பிழைப்பாரா இல்லையாயென்று சொல்ல முடியுமென்றனர். அதன் பிறகும் என்னுடைய உடல் நிலையைக்கண்ட என் நண்பர் டாக்டர் எஸ். சௌந்திரபாண்டியன் எம்.எஸ் (ஆர்த்தோபெடிக் சர்ஜன் – ஜெனரல் ஆஸ்பத்திரி) அவர்களுக்கும் என் உயிர் நிலைக்குமென்ற நம்பிக்கையில்லை.

இப்படி ஒரு மாதம் படுக்கையில் கழிந்தது. ஆனால் என் உள்ளங்கைகளிலும், கால்களிலும் தோல் உணர்வற்றுப் போவதைப் பார்த்தேன். நாற்பது நாட்களுக்குப் பிறகு தோல் பட்டையாக உறிய ஆரம்பித்தது. ஒரு சட்டை கழன்றது. பாதங்கள் உள்ளங்கைகள் மிருதுவாக பஞ்சு போல் ஆகிவிட்டது. கண்ணுக்குத் தெரியாததொரு தூசியின் மேல் கால் வைத்தாலும் அதை உணரக்கூடிய அளவு உண்டாகி விட்டது.

இப்படி ஒரு மாதமான பின் கை, கால்களிலுள்ள நகங்களெல்லாம் தேய்ந்து புது நகங்கள் வர ஆரம்பித்தன. பின்



ஒரு மாதத்துக்கெல்லாம் எல்லா நகங்களும் கழன்று விழுந்துவிட்டன. நாளுக்கு நாள் உணவைப் பெருக்கி வந்தேன். உப்பை மறுபடியும் சாப்பிட ஆரம்பித்தேன். ஆனால் புளியை அறவே விலக்கி விட்டேன்.

நான் மருத்துவமனையில் இருந்த மூன்று நாட்களுக்குள் என் மண்டை, கல்லீரல், நுரையீரல், இருதயம் முதலியனவெல்லாம் புகைப்படம் எடுக்கப்பட்டது. எல்லாம் தன்னிலையில் இருந்தனவென்று டாக்டர்கள் தங்கள் குறிப்பில் எழுதியுள்ளனர். நோய் இன்னதென கண்டு கொள்ளாத நிலை. ரத்தக் கொதிப்பு 120/80 அதாவது ஓர் வாலிபனுக்கு இருக்க வேண்டிய அளவு நீர் அதிகமாக இறங்காததால் என் நோய் (Urinary Infection) மூத்திர கோளாறு என டாக்டர் எழுதி வைத்தார். அதற்குக் காரணம் கட்டுக்கடங்காத பேதியென்பதை அவர்கள் கவனிக்கவில்லை போலும்.

இந்தச் சூழ்நிலையில் நான் மேற்படி மருந்து சாப்பிடுவதற்கு முன்னிருந்த என் உடல் நிலையைப் பற்றி சொல்ல வேண்டிய அவசியமுள்ளது. நான் 1969-ல் ஓய்வு பெற்றேன். 1971-ஆம் ஆண்டு என் பென்ஷனில் (உபகார ஊதியம்) ஒரு பகுதியை ஒருமிக்க அடைய அரசுக்கு மனு கொடுத்தேன். அரசு நியமித்த ஆங்கில மருத்துவக் குழு முன் உடல் பரிசோதனைக்கு நான் ஆளாக வேண்டியிருந்தது. அக்குழு என்னைப் பரிசோதித்து இரத்தக் கொதிப்பு அதிகமாயுள்ளதென, அதாவது 180/110 உள்ளதெனச் சொன்னார்கள். என் மனு அக்காரணத்தால் நிராகரிக்கப் பட்டது. அடுத்தாண்டு அதாவது 1972லும் மற்றொரு முறையும் மனுச்செய்தேன். இரண்டு முறைகளுக்கு மேல் மனு செய்ய முடியாது. மேற்படி மருத்துவர் குழு என்னை பரிசோதனை செய்து ரத்தக் கொதிப்பு மிக மிக அதிகம் (210/110) என்றதினால் என் இரண்டாவது மனுவும் முன் மனு கதியையடைந்தது.

இதற்குப் பின் தான் நான் மேற்படி கற்ப மருந்து சாப்பிட்டேனென்பது குறிப்பிடத்தக்கது. அதன் பிறகு சோதித்த பிரபல டாக்டர்கள் எனக்கு ரத்தக் கொதிப்பென்பதே கிடையாதென்றும் 120/80, தானுள்ளதென்பதையும் மேலே குறிப்பிட்டுள்ளேன். இதிலிருந்து நாம் அறிவதென்னவெனில்,

கற்ப மருந்து எல்லா பயங்கர நோய்களையும் பூர
குணமாக்கவல்லதென்பதை அறிகிறோம். 210/110 ஒருவனுக்
ரத்தக் கொதிப்பு இருந்தால் அவன் காற்றில் மிதப்பவன் போ
நடப்பான். தலை சுற்றும், கை கால்கள் சோர்வுறும் என்றே
ஒரு நாள் கை கால்கள் சுவாதீனமற்றுவிடும். ஹிருதயத் துடிப்
உண்டாகி மரணத்தை உண்டுபண்ணும். அப்படிப்பட்ட
பயங்கரமான நிலைகள் அனுபவிக்கக்கூடிய நிலையை மாற்
ஓர் வாலிபனின் ரத்த அழுத்தத்திற்கு மாற்றி அமைத்ததென்றா
அது ஓர் தெய்வ மருந்தென்பதில் ஐயமில்லை. ரத்தமின்மையா
வெளுத்துக் காணப்பட்ட என் உடலில் ரத்தம் உண்டா
ஆரோக்கியத்தைப் பெற்றேன்.

கற்பத்தின் விளைவால் உடலில் ஏற்படும் மாறுபாடுகளை
பற்றி மேலே படித்தோம். பாராசெல்சஸ் மகான் இம்மருந்
உடல் முழுதையும் சுத்தப்படுத்துவதல்லாமல் நகம்
தோல்வரையிலும் தாக்கி அவைகள் கழன்று விழுந்து புதிதா
வளருமென்று சொல்லியுள்ளார். அம்மருந்து ஓ
அமிலமென்கிறார். யேசுநாதர் அது தெய்வீக கெங்கை என்கிறா
ரிக் வேதத்தில் சொல்லப்பட்ட சோமபானம் என்னும் கற்பமருந்
மேற்படி கெங்கைக்கு ஒப்பானதென்று உணருகிறோம்.

நிற்க, என் சொந்த அனுபவத்தை இங்கு குறிப்பிட்டதற்
காரணம் நாம் சித்தர்கள் நிலையையடைந்து விட்டேனென்றல்ல
உடல் தூல நிலையிலிருக்கும் வரையில் சாவு ஏற்படக்கூடும்
இது வெட்டுப்படலாம்; நீர்; நெருப்பு; காற்றுக்கு அடங்கியதாகும்
ஆனால் சூக்கும உடல் இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது
சித்தசாத்திரங்களில் சொல்லப்பட்டவை முற்றிலும்
உண்மையென்பதை எடுத்துக் காட்டவே என் சொந்த
அநுபவத்தை எழுதலானேன். இவ்வித அனுபவம் பெற்றவர்கள்
கோடிக்கு ஒருவர் இருக்கலாம். ஏனெனில் சித்தர்கள் மொழியில்
எனக்கிருந்து ஆழ்ந்த நம்பிக்கையும், மரணத்துக்கும் அஞ்சாது
ஏதோ ஒரு மருந்தை சாப்பிடுவதற்கும் மன உறுதி எல்லோருக்கும்
வருவது துர்லபம். ஆகவே காயகற்பம் என்பது முற்றிலும்
உண்மையென்பதை அறிகிறோம்.



# கற்பம் எதனால் செய்தது?

இதைப்பற்றி முப்புகுரு, அமுத கலசத்தில் விரிவாக எழுதப்பட்டுள்ளமையால் மறுபடியும் அதையே திருப்பி எழுத மனம் இடம் கொடுக்கவில்லை. ஆகவே சுருக்கமாக முடித்துவிடுகிறேன்.

ஏசுநாதர் இதை உயிரை மறுமலர்ச்சி செய்யும் நீர் என்றும் இதை சாப்பிடுபவன் காலவரம்பின்றி உடலுயிருடன் வாழலாமென்றும் சொல்கிறார். மகான் பாரசெல்சஸ் முப்பூ என்னும் பொருளில், உப்பு, கெந்தகம், பாதரசம் உள்ளதென்றும், இவைகளை பிரித்து கூட்டின் ரசவாத மருந்தாகிய கற்பம் முடிந்துவிடுகிறதென்றும் சொல்கிறார். நம் நாட்டு சித்தர்கள் அதையே நாதம், விந்து என்கின்றனர். ஒரே பொருளில் இவ்விரண்டும் அடங்கியுள்ளதென்றும் இதை இரண்டாகப் பிரித்து கூட்ட வேண்டுமென்கின்றனர். ஒன்று உப்பாகவும் மற்றொன்று நீராகவும் உள்ளமையால் அதை அப்பு, உப்பு, அகர, உகரம், எட்டிரண்டு என்று சொல்வாராயினர்.

ஆயினும் அந்த பொருள் என்னவென்று கேட்டோமானால், அது ஒன்றுமில்லை, பஞ்ச பூதத்திலொன்று என்ற அகத்தியர் சொல்லி முடித்துவிட்டார். நம் சித்தர்களைப் போலவே மேல்நாட்டு சித்தர்களும் அது குரு பரம்பரையாய் உபதேசக் கிரமமாய் அறிய கூடியதேயொழிய சாத்திரங்கள் மூலம் அறியக்கூடியதல்லவென்று முற்றுப்புள்ளி வைத்துவிட்டனர். தகுந்த மாணாக்கனுக்கு ரகசியமாய் உபதேச வாயிலாக தெரிவிக்கக்கூடிய தென்றனர். இதைப்பற்றி மேற்சொன்ன நூல்களைப் பார்க்கவும்.

பதினென் சித்தர்களால் சொல்லப்பட்ட நூல்கள் கிடைத்த அளவுக்கு வாங்கிப் படித்து ஆராய்ச்சி செய்தல் அவசியம். சாத்திர ஞானமும் வேண்டும். ஏனெனில் அது உபதேசம் பெற்றவுடன் தான் கண்ட நூல்களின் அந்தரார்த்தம் உடனே புரிந்து கொள்ள உதவும். அதுவுமின்றி ஒழுக்கம் வேண்டும்; அடக்கம் வேண்டும்; ஆணவத்தைப் பொசுக்க வேண்டும்.

மேற்சொன்ன கருத்துகளுக்கு ஆதாரமாக கீழ் கண்ட சித்தர்களின் சில பாடல்களை பார்க்கத் தக்கது.

# கற்பத்தால் சாகா நிலை

"கற்ப நிலையாலலவோ கற்ப காலங்கடத்தல்
சொற்ப நிலைமற்ற நிலை சூட்சங்காண்கன் மனமே
சாகா திருப்பதற்குத்தான் கற்குங் கல்வியன்றோ
வாகான மெய்க்கல்வி வகுத்தறிநீ கன் மனமே
(இடைக்காட்டு சித்தர்)

வாழ்வதற்கு அமுதரச கற்பங் கொண்டால்
வாசியென்ற ஆவியது பிரகாசிக்கும்
கால்வலுக்கும் மேல்வலுக்கும் கண்துலங்கும்
கமலமல வமுதரசங் கசிந்து காணும்
மேல் வெளுக்கும் மெய்ஞ்ஞான தீபங்காணும்
காலாங்கி உபதேச ஞானம் - 3

அமுதத்தை யீவாளனந்தஞ் சோதி
அமுதத்தைக் கொள்ள யாருக்கு மேலாய்
அமுதத்தைக் கொள்ள யாருமறியார்
அமுதத்தை விட்டாலாகாது சித்தியே.
சித்திக்கு முத்தி யெட்டுடனிரண்டையும்
அத்திக்குமென்று அமுதத்தை வாங்கிப்
பத்திக்குளஞ்சை மவுனத்துட்டாக்கி
யெத்திக்குஞ் சத்தி யிருந்ததைப்பாரே
சித்திக்கும் ஞானமும் யோகமும் சித்தி
சித்திக்கும் வாதமும் காயமுஞ் சித்தி
சித்திக்கு மாத்திரம் தியானமுஞ் சித்தி
சித்திக்கும் நினைத்த கருமமும் சித்தியே.
(திருமூலர் ஞானம் - 84)



பாரப்பா பதஞ்சலியே சொல்லக்கேளு
புரங்கான முப்பூவை யறிய வேணும்
(தெட்சினாமூர்த்தி ஞான சூத்திரம்)

## சித்தரிடம் சேர வழி

திறமாகச் சித்தரிடம் சேரவென்றால்
செப்புகிறேன் முந்தி முந்தி பொய்யை நீக்கு
உறமாகச் சத்தியமே பேசு பேசு
ஒருபவமும் செய்யாதே கோபம் போக்கு
திறமான உடலறிந்து கற்ப முண்ணு
- போகர்

உரைத்துநின்ற காயசித்தி யாகத் தேகம்
உத்தமனே சொல்லுகிறேன் கற்ப மார்க்கம்
மறைத்து வைத்த வழலைதனைத் திறந்து விட்டேன்
மதியமிர்த மானகற்ப மள்ளியுண்ணு
திரைத்துமே நின்றதொரு தேகஞ்சித்தி
விரைத்துவிட்டேன் அமிர்தத்தை யள்ளி யள்ளி
மெய்ஞ்ஞான கற்பமிது மேவிப்பாரே.
சுப்பரமணியர் சுத்தஞானம் - 101
(வழலை - முப்புவின் பெயர்களில் ஒன்று)

## எட்டிரண்டும் அறியா குரு

பேணி யதோரடி வயிற்றைப் பார்வை செய்வார்
பிலமுள்ள மேல்வயிற்றைத் தியானஞ் செய்வார்
பாணியதோர் நெஞ்சதனை தியானஞ் செய்வார்
பசுருகின்ற கண்டத்தை நிசமேசெய்வார்
காணியதோர் கபாலநிலவரமே யென்பார்
கருத்துள்ள நெற்றிக்கண் காணச் சொல்வார்

ஆணியதோர் முக்குமுனை யதீதமென்று
அழகுள்ள விருகண்ணும் பார்வையாமே.
பார்வையென்ற திந்தமுறை யதீதமென்பார்
பண்பில்லா மூடரப்பா நியாயஞ் செய்வார்
சேர்வையென்ற குருசீடரிருவர் கெட்டார்
செகந்தனிலே நோய்பிறந்தே உழன்று போவார்
கோர்வையென்ற வைம்பூதக் கவனமாகிக்
கொடிதான துயரத்தால் மாண்டுபோவார்
ஏர்வையென்ற ஞானம் வந்து என்ன செய்யும்
**எட்டிரண்டும் அறியாத மூடர்தானே**
நாட்டியதோர் திசைகம்பந் தன்னைக் காணார்
நாட்டில் குருவென்று முபதேசஞ் சொல்வார்
ஏட்டிலே யெழுதிய மந்திரத்தை யெல்லாம்
யியம்பு வான் மட்டி சொன்ன விதத்தைக் கேளு
..................

(சுப்பிரமணியர் ஞான சைதன்யம்)

எட்டிரண்டும் தெரியாதஎன் கையிலே கொடுத்தீர்
இதுதருணம் திறந்ததனை எடுக்க முயல்கின்றேன்.

ராமலிங்கம்

## ஆறாம் திருமறையில் காணும் பாடல்கள்

மதிமண்டலத் தமுதம் வாயார உண்டே
பதிமண்டலத் தரசுபண்ண –
. . . . . . . . . .
இத்தார் அருளமுதம் யானருந்தல் வேண்டும்
. . . . . . . . . .
சாகா அருளமுதம்தான் அருந்திநான் களிக்க



நாகாதிபர்சூழ் நடராஜா ........
. . . . . . . . . .
அருளோங்கு தண்ணமுதம் அன்பால் அருந்தி
மருள் நீங்கி நான்களித்து வாழப்
. . . . . . . . . .
வானோக்கரி தெனவே மாமறைகள் சாற்றுகின்ற
ஞானோதய அமுதம் நானருந்த
........
எல்லாமும் பல்ல சித்தென்றல்லா மறைகளுஞ்சொல்

நல்லார் அமுதமுதுநான் அருந்த நல்லார்க்கு
நல்வாழ்வளிக்கும் நடராயா மன்றோங்கு
செல்வா வைத்திற
ஏழ்நிலைக்கு மப்பால் இருக்கின்ற தண்ணமுதம்
வாழ்நிலைக்க நான் உண்டு மாண்புறவே
. . . . . . . . . .
ஈன உலகத் திடர்நீங்கி இன்புறவே
ஞான அமுதமுது நான் அருந்த
.............
நானிருக்கும் குடிசையிலே வலிந்து நுழைந்தெனக்கே
நல்லதிரு அருளமுதம் நல்கியதன்றியுமென்
ஊனிருக்கும் குடிசையிலும் உவந்து நுழைந்தடியேன்
உள்ளமெனும் சிறுகுடிசை உள்ளும் நுழைந்தனையே
சாகாக்கல்வி – கால், தலை என்பதென்ன?

**சாகாத தலையிது வேகாத காலாம் இது காண**
எனத் தயவு செய்துரையே
போகாத புனலையும் தெரிவித்து என் உளத்தே
பொற்புற அமர்ந்ததோர் அற்புதச் சுடரே

சாகாத கல்வியிலே தலைகாட்டி கொடுத்தீர்
தடையறியா கால்காட்டித் தரம்பெறவும் அளித்தீர்
போகாத புனலாலே சுத்த வுடம்பினராம்
புண்ணியரும் நண்ணறிய பொதுநிலையும் தந்நீர்

– ராமலிங்கசுவா[மி]

**(மூப்பு மார்க்கத்தை குறிப்பதாகும்)**

**(அதனாலடைந்த வாசிலயத்தையும் குறிப்பதாகும்)**

"எட்டோட இரண்டையும் சேர்த்தெண்ணவும் அறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே.
ஊணேயும் உடலழியாது ஊழிதொறும் ஓங்கும்
உத்தமசித்தியைப் பெறுவீர் சத்தியம் சொன்னேனே.

– ராமலிங்க[ம்]

ஆகவே உடலழியாது உத்தமசித்தி பெறுவதே முத்தி.

அதுவே உண்மை முக்தி நிலை அந்நிலையையடை[ய] சாகாக்கலையை குருமுகமாக அறிதல் வேண்டுமென்க. சத்திய[ம்] இது சத்தியமென்று ராமலிங்க சுவாமி சொல்வதைக் காண்க "சாகாத கல்வியியே தலைகாட்டிக் கொடுத்தீர்," என்பதையு[ம்] காண்க. ஆகவே காட்டிக் கொடுத்த ஆசான் ஒருவ[ன்] வேண்டுமென்பதையும் அறிக.

சாகாநிலை கொடுக்கும் அமுதம்: மருள் தேகத்தை நீக்[கி] சுத்ததேகம் அளிக்கும் அமுதம்: எல்லா மறைகளும் சொல்லு[ம்] அமுதம்: வாழ் நிலைக்கு அதாவது உடல் உயிர் நிலைக்க உதவு[ம்] தண்ணமுதம்: உலக இடர்களான பசி, பிணி, மூப்பு, சாக்கா[டு] நீக்கும் அமுதம்: என் குடிசையினுள் புகுந்து கொடுத்த அமுத[ம்] – என்று ராமலிங்கள் களிப்புடன் பாடுகிறார்.

"முட்டியே மதுவுண்ணு கற்பமுண்ணு
முதண்ட காயத்தை சித்திபண்ணு
காட்டியே கனமா மூலிகையை யுண்ணு
கசடறுக்குஞ் சணத்திற்கண் ணொளி தான்மீறும்



ஆட்டியே அண்ணாக்கிற் கபத்தைத் தள்ளு
அடுக்காறு தலத்திலுள்ள ஆம்பல் நீக்கு
வாட்டியே ஐம்புலனை வாளால் வீசு
மறவாதே இரவுபகல் வாசிமாட்டே"

– போகர் உபதேச ஞானம்

## எட்டிரண்டு

"மலமதம் பொய்ம்மை யென்றோது குயிலே – எழு
புவனமகன்றிட்டோ மென்றோது குயிலே
எட்டிரண்டிறிந் தோற்கிடரில்லை குயிலே – மன
மேகாமல் நிற்கில் கதியெய்துங் குயிலே.
சாதனங்கள் செய்தவர்கள் சாகார் குயிலே எல்லாத்
தத்துவங்கள் தேர்ந்தவர்கள் வேகார் குயிலே"

– இடைக்காட்டு சித்தர்

## குருவின் முக்கியத்துவம்

"காட்டிலிருந்தாலும் கனதவஞ் செய்தாலும்
காட்டுங் குருவில்லாமல் ஞானம்மா –
கண்டறியலாகாதே
சம்சார மென்னுஞ் சாகரமாமென்றும்
இம்சையடை வோர்கள் – ஞானம்மா
யிருந்து பயனாவதென்ன."

– புண்ணாக்கு சித்தர்

## சாதி, மதம், வேதங்கள் கற்பனையெனல்

"ஆண் சாதி, பெண் சாதி, யாகு மிருசாதி
வீண் சாதி மற்றவெல்லாம் – குதம்பாய்
வீண் சாதி மற்ற வெல்லாம்

பற்பல சாதியாய்ப் பாரிர் பகுத்தது
கற்பனையாகும்மடி – குதம்பாய்
கற்பனையாகும்மடி
நீதிமானென்றே நெறியாயிருப்போனே
சாதிமானாவனடி – குதம்பாய்
சாதிமானாவனடி
பற்பல மார்க்கம் பகர்ந்திடும் வேதங்கள்
கற்பனையாகும்மடி – குதம்பாய்
கற்பனையாகும்மடி

## நாதவிந்து சேர்ந்தது முப்பு

ஆறாறு காரமும் நூறுமே சேர்ந்திடில்
வீறான முப்பாமடி
விந்தொடு நாதம் விளங்கத் துவங்கினால்
வந்தது வாதமடி – குதம்பாய்
வந்தது வாதமடி

## அதுவே அப்பு உப்பு

அப்பினைக் கொண்டந்த உப்பினைக் கட்டினால்
முப்பூவா குமடி – குதம்பாய்
முப்பூவாகு மடி

ஐந்து சரக்கோது விந்து நாதஞ் சேரில்
வெந்திடும் லோகமடி – குதம்பாய்
வெந்திடும் லோகமடி

## முப்பூவை உண்டவர் கற்பாந்தம் வாழ்வர்

பொற்பாந்த முப்பூவைப் போதம் பொசித்தவர்
கற்பாந்தம் வாழ்வாரடி – குதம்பாய்
கற்பாந்தம் வாழவாரடி



வே வாத முப்பூவை வேண்டியுண்டால் பாரில்
சாகாமல் வாழ்வாரடி – குதம்பாய்
சாகாமல் வாழ்வாரடி

– குதம்பை சித்தர்

## முப்பூவினால் வாத யோக ஞானம்

“முப்பூவினாலே முடிக்கலாம் வாதம்
முப்பூவினாலே முடிக்கலாம் யோகம்
முப்பூவினாலே முடிக்கலாம் ஞானம்
முப்பூவை விட்டால் முடியாது பாரே
(சட்டை முனிகுரு சூஸ்திரம் – 20)

### அகரம் உகரம் சேர்ந்த முப்பு

### கூற்றுவனை அகற்றும்

ஆமப்பா அகாரமுடன் உகாரம் ரெண்டும்
அறிந்து மனதுரிமையினாற் கொண்டாயானாற்
போமப்பா கபமான கூற்றுவன்றான்
பொருந்தி நின்ற மூல அனல்தன்னால் மைந்தா
ஓமப்பா ஒமுடிந்து அகன்று போகும்
உத்தமனே மறுபிறவியில்லையில்லை
காமப்பால் கானற்பால றிந்து கொண்டு
கக்கிஷமாம் நவக்கிரகச் சூட்சம்பாரே
(கடைப்பிள்ளை ஞான தண்டகம் – 50)

## முப்பூ வாசியென்னும் உயிரை நிலைக்கச் செய்யுமெனல்

“முப்பூ வழலை முடிக்க வறிகிலார்
முப்பூ வழலை முடிக்க வல்லார்க்கு
முப்பூவில் தீட்சை முப்பத் திரண்டுடன்

முப்பூவில் சோடசம் மூலமுங் குருவே
ஆவது சித்தம் அழியாது காயந்தான்
ஆவது ஞானத்துக் காதியாம் யோகந்தான்
ஆவது யோகத்துக் காதியாம் வாசிதான்
ஆவது வாசிக்குடி மூல மாதியே"

– மச்சமுனி ஞானதீட்சாவிதி – 100

## வழலையென்ற முப்பூவினால் 64 சரக்குகளும் நீறுமெனல்

"வழலை சவுக்கார மென்பார்கள் வாதிகள்
உழலைப் படுவாருள் ளெண்ணெய் வாங்கிடத்
தழவி லெரிப்பார் தாளிப்பார் கண்டிலார்
பழவினை யென்று பகுத்தறியாரே.
ஆதிவழலை யருஞ்சுண்ண மானபின்
சாதிச் சரக்கு அறுபத்து நாலும்
ஓதியு பரசமொரு நூற்றிருபது
வாதிக ளாற்றினம் வகையான தொன்பதே

– துருவாசர் ஞானசூத்திரம் – 77

## வேகாத்தலை – போகாப்புனல்

"வேகாத தலையென் றோஉப்பு உப்பு
மேலான வளர் கலையே அப்பு அப்பு
போகாத புனலன்றோ சுத்த கங்கை
பூரணமும் காரணமும் போதித் தேனே."

அகத்தியர் பரிபாஷை திரட்டு – 79

"காணாத பொருளொன்று சொல்லக்கேளு
கமலசத்த சாகரமும் உப்பேயாச்சு
தோணாதஉப் பெல்லாம் நீர்தானாச்சு
தொலையாத முப்பூவு மிதிலே யாச்சு



காணாத தண்ணீரை யிறுத்துக் காய்ச்சு
நாட்டுள்ளோர் சுவைகண்டு யெடுக்கலாச்சு
ஆணாத சிவசக்தி யென்ற மார்க்கம்
அடங்காத சிவகங்கை யென்றுகூட்டே.

– குதம்பைசித்தர் ஞானசூத்திரம் – 18

*(அப்பும் உப்பும் சேர்த்து காய்ச்சினால் முப்பூவாச்சு)*

*சில சித்தர்கள் முப்பு என்பது மூலப் பொருளாகச் சொல்வர். மாற்றி மாற்றி சொல்வது அவர்கள் தந்திரம்)*

"ஆத்துமத்தைத் தான்பிடித்து அன்புகொண்டு
சுத்தி செய்து
ஆத்துமத்தைக் கூடியடையாம – லாத்துமத்தைக்கு
ஓடவிட்டு பார்த்திரு / மூதாரி காளும்மைத்
தேட விட்டிடுவானோ சிவன்

– திருமூலர்

*(உடலிலிருந்து உயிரை பறக்க விட்டு பார்ப்பது மடமை. அதை விட்டபின் சிவத்தை நீங்கள் எங்கு பார்ப்பது)*

## வழலை யென்னும் முப்பு

வழலையும் இந்தும் வகை யறிவோர்க்கு
வழலையிலேமம் வருடிக்குஞ் சக்தி
வழலையில் பூவைமாட்டி மணந்தால்
வழலையைக் கொல்லும் வருமெண்ணெய்போமே.

– திருமூலர் குருநூல் முப்பு சூஸ்திரம் – 200

## ஓதினால் வழலை யதுயென்று பேரு

உறுதியாய்ப் பூநீரில் கண்ணங் கூட்டிப்
பாதியே பாணிவிட்டு தொட்டுப் பாரு
பதிவாக வழவழப்பு கையில் தோணும்
சோதிபெற யிதுக்குப்பேர் வழலையாகும்

தெல்லுலகி லறியாக மூடர்தானும்
போதித்தால் பிண்டமென்றும் திட்டாமென்றும்
போக்காடே யெடுத்துமே சுடுவார்தாமே.

(யாகோபு சுண்ணக் காண்டம் – 40)

## கற்பம்

"ஆகா நற்கற்பந்தான் ஆகத் துரைத்தல்
சாகாத வாழ்வு தான்வருங்கண்டாய்
ஆமே கவுனமழகுள்ள காயம்
தாமே பெருகும் தனித்த ரிஷிகாண்
நாமே கைகண்டோம் நவின்ற மூவாயிரம்
பூமேலுண்டறிஞர் புல்லறிவாரே

– திருமூல...

## கற்பம் சாப்பிட்டபின்

கொண்டாற்பின் கோபமாகாது சொன்னேன்
பெண்டாளுறவும் பிள்ளையி னுறவும்
கண்டா சைப்பட்டாற் காயங்களற்பம்
தொண் டாரைப்போலே துணிந்திருப்பாயே.
இருப்பாயிருமூன்று திங்கள் கழித்தால்
நரைப்போய் திரைபோய் நல்லச் சிரகாயம்
திருப்பால் நற்தீசர் தெரிசனை யுண்டாம்
வரைப் பாற்படி மனதிரங்கு வார்பாரே.

## கற்பம் சாப்பிடின் ஐந்து வாசல்களும் திறக்கும்

இடு கோபம் நீக்கி யிருவ டேகுகையில்
மடுவூறும் பால்போல் வருடிக் குங்கற்பம்
திடமா யீராறு திங்களுங் கொண்டால்
உடல்மீறி வுறைன் வயதிருநூறே.



இருநூ றல்லாது இனியுந்தான் கற்பம்
திறமா மமுதந் தேக்கிடப்பாரு
கரியானும் ஆநெய் கலக்கு மிதமாய்ப்
புரிவாய மேல்வாசற் புடையினிற் கொள்ளே.
செல்லுவாய் நாலுதிர வலஞ் சுற்றி
வெல்லுவாய் மண்டலம் மீள அமுதம்
புல்லுவா யைந்து கதவினுடை பூட்டுஞ்
சில்லென விட்டுத் தெரிக்குங் கதவே
கதவு திறந்தாற் கயிலாச மப்பா
கதவு திறந்தாற் காரண மப்பா
உதவா தமுதம் உதவிகள் செய்தால்
சதகோடி காலந் தானொரு நாளே.

– திருமூலர்

## சிவன் செத்தாலும் கற்பம் சாப்பிட்டவனுக்கு அழிவில்லை

சிவனார் பிறந்து சிதறி விட்டாலும்
இவனுக் கழிவே யில்லை யெக்காலுமும்
உவளகமான மீரேழு லோகமும்
அவனே சஞ்சார னாவனாஞ் சிவமே.
சிவமான யோகந் திட்டிக்க வேணும்
புவிமீதிற் கற்பம் பொறிதங்க வேணும்
சிவபூஜை சத்தி தியானங்கள் வேணும்
கவனமெய்ஞ் ஞானங் கற்றறிவாயே!
சாகாத கல்வியைத் தாங்கற்க வேணும்
வேகாத சிந்தை படைத்திட வேணும்
கோகா மியத்தைக் குறைத்திட வேணும்
ஆகாத மட்டைக் கறிவ துண்டாமோ.
பானமதாகப் பதிமதி யமூர்தம்

ஊனுளங் கொண்டா லுயிரில்லை யப்பா
வானம் பூமிமலை கடலில்லை
ஞானம் பெருத்தா னமக் கொப்பவனே.

## அவயோகம்

யோகம் என்பதறியாத குருமார்கள் பாமர மக்களுக்குப் பலவிதமான மாறுபட்ட சாதனைகளைக் கற்றுக் கொடுத்து அதைப் பழகி அவதியுறுபவர்களின் கதியை புலஸ்தியர், மிக மிக விளக்கமாய் கற்பம் 300ல் சொல்லியுள்ளார். கீழே பார்ப்போம்.

"காணுமுச்சடக்கி விழியதை யுருட்டி
கபாலமுந் திறந்தனர் கோடி
கனத்த வாய்வதனால் குன்மநோ யணுகி
கலங்கினோர் வரொரு கோடி
தோணுமெய் மறந்து கழன்றுன னெழும்பிச்
சொக்கினாரே வரொரு கோடி
சூலைவாய்வணுகி சுவ்வாலையுமெழும்பிச்
சுரமதாலிறந்தவர் கோடி
ஊனு முண்ணாக் கையண்ணாக்கிற்றாக்கி
யுருண்ட வரவரொரு கோடி
உயர்ந்து சாணீளம் முழுமது எழும்பி
யுறங்கியே யொடுங்கினோர் கோடி
பேணதிசாரப் பேதி வந்தணுகி
பில வியாதி லிறந்தனர் கோடி
பெருமையாய் கற்ப சாதனையறியார்
பிராணனு மொழிந்து மாண்டனரே

இனமறியாமலிருத்தியே வாய்வை
இறந்தனரவரொரு கோடி



இனிய தம்பனஞ் செய்தெழும்பியே கும்பித்
தேங்கினோர வரொரு கோடி
கனமறி காற்றை நாசியால் விடுத்து
கருதியே இறந்தனர் கோடி
கண்டுநாசியை விட்டொன்று விட்டொன்று
கலங்கியே மடிந்தனர் கோடி.

தினமொரு நாழி வாசி கொண்டேற்றிச்
சிவபுரமேவினார் கோடி
தனிபெரு விரலண்ணாக் கதையேற்றித்
தயங்கி னாரவரொரு கோடி
சலமதில் மூழ்கிச் சாதனை யதீதச்
சாவு வந்தெய்தினோரறிந்தே.
அறிவத்திவ் வாறின் கருத்தினையியம்ப
அவனி மாக்களிற் சில பேர்கள்
அம்பு விதனிலே மறையவுஞ் சூழ்செய்
யதனிலும் பதுங்கினோர் கோடி

சரிந்திடும் குலையாற் கதலிதான் தடுத்துத்
தளர்ந்தது போலவு மயங்கித்
தயங்கினா ரேங்கித் தரணியிற் சிலபேர்
தாமரையிலையின் நீர் போலப்

பறந்தது பறந்து பார்வை கண்டதுபோற்
பாருலக தீதமுந் தேடிப்
பட்டபாடிருக்கும் பரீட்சை கண்டறிந்தும்
பரிந்து பட்சணம் பணவிலையோ
தெரிந்து மிப்பரீட்சை யுதாரண மநேகர்
தெளிந்த வாறிந்துமே செப்பத்

தேறிடும் வாசி யோகத்தின் பெருமை
திருத்தமாயுரைத் திடலாமே.

ஆகவே சிவயோகமென்று அவயோகம் செய்வதால் பயங்கரமான விபத்துகள் உயிருக்கு உண்டாகுமென்பதை மேற்கண்ட பாடல்களால் நாம் அறிகிறோம்.

அவயோகம் செய்வது கூடாது. அது தெய்வத்துக்குப் புறம்பானது.

## கற்பங் கொண்டவனே ஞானி

அவனே பிரமன் அவனே சிவனாம்
அவனே அரிதா னவனே சித்தன்
அவனே தேவன் அவனே யோகி
அவனே முனிவ னவன் சத்தி தானே

– திருமூலர்

## கும்பகம் செய்தல் வீண்

மாய்கிறீர் வீணே மனத்திருக்கும் மெய்யறிந்து
தேயுவுணர்ந்து பதஞ்சேராமல் – வாயுவைத்தான்
கும்பித் திருந்தாற் குடலு முடலுயிரும்
வெம்பி யுலர்ந்து விடும்.

## ஆசாரம் அனாசாரம்

சிவத்தை யறியநீர் சித்தறியீ ரொன்றாய்த்
தவத்தை யறியாமற் றாக்கும் – பவத்திலினிப்
பேசாப்பாற் கொள்ளுகின்ற பித்தரே உம்முடைய
ஆசாரங் காசாகுமா.

## தலைகால் தெரியாத மூடர்கள்

காலிருக்க பொய்க்காலைக் காட்டிப் பொருள்பறிக்கும்
கோலக் குருக்களைப் போய் கும்பிட்டு – கால்பிடித்துக்



கையறிந்து போற்றிட்டுக் கண்ணறிந்து முக்காலுங்
கொய்வார் மனஞ் சுத்தமென் றாங்கொல்.

## பெரியோனென்பவன் யார்?

பொன் வெள்ளி செய்கிறவன் பெரியோனல்ல
பாழன அஷ்டசித்தி பெரியோனல்ல
முன்னின்ற வயித்தியனும் பெரியோனல்ல
மூச்சடக்கி யெழும்பினவன் பெரியோனல்ல
சின்னமுள்ள குழியிருப்போன் பெரியோனல்ல
திறமுடனே கெவனமிட்டோன் பெரியோனல்ல
தன்னிலையை அறிந்தவனே பெரியோனய்யா
தனையறியான் வகைகெட்ட சண்டிமாடே (98)

## குருவென்பவன் யார்?

குருவென்று சொன்ன சொல்லாருக்காச்சு
குருபரனை யறிந்தவர்க்கு சொல்லலருக்காச்சு
திருவென்று சொன்ன சொல்லாருக்காச்சு
சிந்தைதனை தெளிந்தவர்க்கு செப்பலாச்சு
தருவென்ற சொல்லாருக்காச்சு
தயாபரியாம் வாலைதனையறிந்தோர்க்காச்சு
கருவென்று சொன்ன சொல்லாருக்காச்சு
கர்த்தனென்ற சதாசிவனுக் காகுந்தானே.

– சுப்பிரமணிர் சுத்த ஞானம் – 101

இவ்விதமிருக்க பலர் பாதபூஜை யென்று வியர்வை ஒழுகும் கால்களை அலம்பி, அந்நீரை தீர்த்தமென்று குடிப்பதும், கால்களைப் பிடித்து கும்பிடுதலும் மடமை. பொய்க்காலை நீட்டும் போலி, காலின் உண்மைப் பொருளை அறியாத மடையன், கட்டணங்களை வைத்து நடைப்பிணத்தின் கால்களை நீட்டி பணம் பறிக்கும் திருடன், விபூதியின் பொருளறியாது உடலெல்லாம் அதை பூசிக் கொண்டு, நாமத்தின் பொருளறியா அஞ்ஞானிகள் நாமங்களை சாத்திக் கொண்டு பட்டு

பீராம்பரங்களை அணிந்து கொண்டு மேடைகளில் அமர்ந்து கொண்டு பாடல்கள் பாடிக் கொண்டு பெண்கள் பக்கமாக கண்களை உருட்டிக் கொண்டிருக்கும் குருடர்கள், தலைகால் தெரியாத தடியர்கள். குருடனுக்கு குருடன் வழிகாட்ட முடியுமா வென்று கேட்கிறார் திருமூலர் கீழ்க்கண்ட பாடல்கள் மகாமுனி கருவரார் பாடியவை படித்து சிந்திக்கற்பாலது.

நெத்தியிலிருக்கும் நினைவறியீருத்த ஏமாய்ப்
பத்தியுடன் பூசிப்படிப்பதென்ன – நெத்தித்
திருநீற்றின் மேலே திலகமிடவந்த
விருநீறு பூசுமிடம்.
நாமமிருக்கும் நடுவிறீயீர் நாமமிடுந்
தாமமுகத்தின் தலமறியீர்.

– என்கிறார் மகாமுனி கருவூரார்

## யார் சைவர்?

சைவ ரென்பதாரெனிற் தன்னை அறிந்தவரே
சைவமில்லார் தவங்கள் தள்ளாட்டம் – தெய்வநிலை
சாரப்புலமை வரத்தன் கவியைக் கொள்ளாதார்
சேரார் குருவீட்டிற் சென்று

– கருவூரார் பூரண ஞானம் – 79

# பிரம்மச்சரியம்

திருமணமாகாதவனை நாம் சாதாரணமாய்ப் பிரம்மச்சாரி என்கிறோம். பிரம்மச்சரியம், கிருகத்தாஸ்பரிமம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்று நான்கு வகைப் படிகளை நியமித்துள்ளனர். இவ்விடத்தில் பிரம்மச்சாரி திருமணமாகாதவன் மாத்திரமல்ல; பிரமத்தில் ஈடுபட்டவனென்று பொருள் கொள்ள வேண்டும்.

ஆனால் உண்மை பிரம்மச்சரியம் அனுசரிப்பவர்கள் கோடியில் ஒருவனாவது இருக்கிறானா, இருக்க முடியுமா வென்பது ஒரு முக்கியமான வினாக்குறி.



சன்னியாசம் பெற்ற விசுவாமித்திர தபசி தேவதாசி யென்னும் மேனகையின்மேல் மோகங்கொண்டு சகுந்தலை யென்னும் பெண் பிறந்தாள்.

வேதங்களை இயற்றிய வேத வியாசன் ஓர் துர்நாற்றமுள்ள மச்சகந்தியின் பேரில் காதல்கொண்டு அவளைப் புணர்ந்ததால் மச்சகந்தி மரிமளகந்தியானாள்.

பிறந்து பெண் உருவத்தையே பார்க்காத ரிசியசிருங்கர் முதன்முதலாக தான் பார்த்த அப்பெண்ணை காதலித்தார்.

இப்படி நாம் பலவகையான சம்பவங்களை புராண இதிகாசங்கள் மூலம் அறிகிறோம்.

இக்காலத்திலும் எல்லாம் துறந்த சாமியார்களென்று சொல்லி தாடி மீசைகளை வளர்த்துக் கொண்டு பணக்காரர்களின் பின் சுற்றிக் கொண்டு பெண்களை ஆலிங்கனம் செய்யும் சாமியார்களை கண் கூடாகக் காண்கிறோம்.

பிறப்பிலிருந்தே ஏசுநாதர், சங்கரர், ராமலிங்கர், வள்ளலார் போல் மகான்களாக பிறந்தாலொழிய இயற்கைக்கு உட்பட்டு எந்த மனிதனும் இயங்க நேரிடுமேயொழிய, அதற்கு மாறுபட்டு நடக்க முடியாதென்பதை அறிய வேண்டும். பிறப்பிலேயே நபும்ஸகமாகயிருப்பவர்களை பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

அன்ன ஆகாரமின்றி காற்றையே புசித்துக் கொண்டு ஒருவன் இருந்தால் அவன் பிரம்மச்சரியத்தை கடைப்பிடிக்க ஓரளவு முடியுமென்று சொல்லலாம்.

வேலை செய்யும் சாமியாருக்கு பட்டை சோறு ஒன்று, சும்மாயிருக்கும் சாமியாருக்கு பட்டை சோறு இரண்டுயென்ற கதைபோல அறுசுவையோடு பழம், பலகாரங்களுடன் உண்டி அருந்தும் ஓர் மனிதன் பிரமச்சாரி யென்று சொன்னால் கழுத்தின் மேல் தலையிருப்பவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

ஆகவே பிரம்மச்சாரி என்னும் சாமியார்களை நாம் நம்பக்கூடாது. நம் பெண்களை அவர்களிடம் அணுகாது தூரமாக வைப்பது நலம்.

ராஜஸ உணவு அருந்துபவனுக்கு ரஜஸ் என்னும் கோபம்,

தாபம், காமம் இருப்பது இயற்கை. அப்படிப்பட்டவர்களை நாம் சாமியார்களாக, குருமார்களாக ஏற்றுக்கொள்வது மடமை.

## பொருள் தெரியாத மட்டை

கற்றுணர்ந் தென்ன கலைகள் பார்த்தென்ன
உற்றுணர்ந் தென்ன உணர்விலா மட்டை
செற்ற சவந்தான் தீக்கிரை யாவான்
முற்றுப் பெறத் கோபமுனை நீக்கி யேறே.

– திருமூலர்

ஆகவே மேற்சொன்ன பாடல்களிலிருந்து நாம் அறிவது யாதெனில், உடலை நீட்டி, உயிரை நீட்டும் மாமருந்து கிட்டினாலொழிய மெய்ஞ்ஞானமடைய முடியாது. அம்மருந்தை உண்டவன் கற்பகோடி காலம் வாழலாம். எல்லா சித்திகளும் பெறலாமென்பதும் விளங்குகிறது. இதற்கு எட்டிரண்டு அறியவேண்டும். அதை அறிந்த ஆசான் ஒருவர் கிடைத்து உபதேச கிரமத்தில் அவரிடம் அதைப் பெறவேண்டும். ஆசான் கிடைக்க ஆண்டவன் அருள் புரிய வேண்டும். அவ்வருள் கிட்ட ஒழுக்கம் வேண்டும். போலி வேடங்களை நீக்கி உண்மையைப் பற்ற வேண்டும்.

இவ்வளவு எழுதினாரே இவ்வாசிரியர் மாத்திரம் சாகாமலிருப்பாராவென்ற வறட்டுக் கேள்வி எழுப்பலாம். சித்தர்களின் பொன்மொழிகளை ஓரளவு விளங்கக்கூடிய அளவில் எழுதவேண்டுமென்ற அவாவினால் இந்நூல் எழுதலாயிற்று. அது ஒரு அணுவேனும் இக்கலையில் ஆர்வமுள்ளவர்களுக்கு பயனளிக்குமேயானால் இந்நூலியற்றிய ஆசிரியருக்கு சாகா நிலை வந்துவிட்டதெனக் கருதுவார்.

சிவமென்பது உயிர். சக்தியென்பது உடல். இந்த உயிர் உடலுடன் பிறிவற்றிருக்க நெறிபட்ட சற்குரு வேண்டும் என்கிறார் ஔவை பிராட்டியும்,

“நெறிபட்ட சற்குரு நேர்வழி காட்டில்
பிறிபற்றிருக்கும் சிவம்.”